The "Bharati." *Reg. No. M 2911*

[illegible]

1934 ஏப்ரில்—மே.

பாரதி



மாலை 6. மணி 1.

ஓர் செந்தமிழ்

மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,

[illegible]

பிரசுராலயம்:

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

OFFICE OF THE REGISTRAR OF ...
22 MAY 1934
MADRAS

உ
N29BH
34.6.1
97899

Cardamom Sale Company, Limited.

ஏலக்காய் விற்பனைக்-

-கம்பெனி, லிமிடெட்.,

தேவாரம்.

1913-ம் வருஷத்திய 7-வது இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப் பெற்றது.

மூலதனம் ரூ. 2,10,000.

ஏல விவசாயிகளையே அங்கத்தினராகக் கொண்டது. அங்கத்தினர்கள் ஏலத் தோட்டத்தில் விளையும் சரக்குகளை வட இந்தியாவிலிருக்கும் பல முக்கிய பட்டணங்களுக்கு அனுப்பியும், ஐரோப்பா அமெரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு அனுப்பியும் விற்றுக் கொடுக்கிறோம்.

தங்கள் ஏல் மகசூலை நல்ல விலைக்கு விற்க வேண்டுமானால், ஏல விவசாயிகள் தங்கள் சரக்குகளை எங்கள் மூலமாய் விற்க வேண்டுகிறோம்.

O. R. கோண்டிலு செட்டியார்,

மானேஜிங் டைரக்டர்,

ஏலக்காய் விற்பனைக் கம்பெனி, லிமிடெட்,

தேவாரம்,

மதுரை ஜில்லா.

இந்திய மூலதனம்! சுத்த சுதேசிக் கம்பெனி!

தமிழ் நாடு
அஷ்யூரன்ஸ் & பாங்கிங்
கம்பெனி Ltd.,

போடிநாயக்கனூர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 MAY 1934
MADRAS

அக்கிராசனாதிபதி:

மதுரை ஜில்லா போர்டு

மெம்பரும் போடிநாயக்கனூர் பிரபல லாண் லார்டுமான

1. மகா-ா-ா-ஸ்ரீ S. A. ரெங்கசாமி செட்டியா ரவர்கள்.

டைரக்டர்கள்:

2. ,, S. P. சுல்தான் அஹமெட் பதாதீன் ருவுத்தர் அவர்கள், லாண் லார்டு, போடி.
3. ,, V. புன்னைவனம் பிள்ளை, லாண் லார்டு & முனிசிபல் கவுன்சிலர், போடி.
4. ,, B. K. ஒன்னுராம் செட்டியார், லாண் லார்டு, போடி.
5. ,, S. S. M. பழனியப்பன் செட்டியார், வர்த்தகம், போடி.
6. ,, T. S. சாமிநாதன் அவர்கள், K. D. H. P. Co. Ltd., மூணார்.
7. ,, Dr. ஜான் ஜோசப், தந்த வைத்தியர், பெரியகுளம்.
8. ,, P. O. நயினன், கொட்டகுடி ரோட் ஓவர்சீயர், போடி.

மானேஜிங் டைரக்டர்:

9. ,, T. S. கிருஷ்ணசாமி அய்யர், கொட்டகுடி ரோப்வே, போடி.
10. ,, செக்ரட்டரி: பாஸ்கரன்.

மேற்கண்ட கண்ணியமும் பொறுப்பும் வாய்ந்த டைரக்டர்களால் இக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டு நன்கு நடந்து வருகிறது. அன்னிய நாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் மூலமாக நமது திரவியம் அகலுவதை நிறுத்தி, இக் கம்பெனியில் சேர்ந்து பாலிசி எடுத்துக்கொண்டு பொருள் சேகரிக்க முயலுங்கள். எல்லா விவரங்களுக்கும் இக் கம்பெனி காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளுங்கள்.

சுப்ரமணிய பாரதியார்

அல்லது

தமிழ் நாட்டின் தேசீய கவி.

(ஓர் அரிய ஆராய்ச்சி நூல்)

திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள் எழுதியது.

"பாரதி" ஆசிரியர்

திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள் பதிப்பித்தது.

கவிச் சக்ரவர்த்தி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, கவிதா விலாசம், தேசாவேசம், இயற்கை ரசனை இவைகளை யறிய இதைவிட வேறு சந்தர்ப்பம் வாய்க்கப் போகிறதா?

கிரௌன் 1/8 சைஸ் கிளேஸ் பதிப்பு.

240 பக்கங் கோண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ **1**.

தபாற் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

சன்மார்க்கன்.

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

நாவலாற்று சாமி சிவநேசம் அவர்களை ஆசிரியராகப் பெற்றுச் "சன்மார்க்கன்" பகுத்தறிவுக் கேற்றவாறு மக்கட் பிறப்பில் உயர்வு தாழ்வாகிய சாதி, சமய வேற்றுமைப் பிணக்குகளைக் களைந்து, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரத்துவமான உரிமைகளைப் பெறும் வழிகளும், உயரிய கட்டுரைகளும் நிரம்பப் பெற்று வெளிவருவது.

சந்தா விபரம்:

வருடம் 1-க்கு ரூ. 1—0—0. தனிப் பிரதி 2 அணா.

அயல் நாடு ,, 1—8—0.

விலாசம்:

மானேஜர், "சன்மார்க்கன்,"

திண்டுக்கல்.

"பாரதி"

சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை

பவ— சித்திரை முதல் 6-ம் ஆண்டு ஆரம்பம்.

சுதந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் ஜாதி, மத, கட்சி பேதங்களற்று
இந்தியாவைருவம் பாரத மாதாவின் மக்க
ளென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணம் கமழும் செந்தமிழ் மாஸிகை

"பாரதி" ஒன்றே யாகும்.

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதாரர்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்

சந்தா விபரம்:

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2/=** அல்லது **3** ஷிலிங்

வெளி நாடுகளுக்கு ,, ரூ **3/=** ,, **5** ,,

போஷக சந்தா குறைந்தது ரூ **100/=**

தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.

இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும் ஏஜெண்டுகளை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,

"பாரதி" ஆலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா, S. இந்தியா.

ஈழகேசரி.

வட இலங்கையிலிருந்து ஞாயிற்றுக் கிழமை தோறும் 12 பக்கங்களுடன் வெளிவருவதோர் சிறந்த வாரப் பத்திரிகை.

(நான்காவதாண்டு)

இலங்கை, இந்தியா, பர்மா, மலாய்நாடு முதலிய விடங்களில் ஏராளமான சந்தாதாரர்களையுடையது.

சிறந்த பேரறிஞர்களால் எழுதப்பெறும் இலக்கண இலக்கிய சம்பந்தமான அரிய கட்டுரைகளும், வரலாற்று ஆராய்ச்சி, அரசியல், பொருளாதார நிலை, சமயம், கல்வி, மாதர் பகுதி, சிறுவர் பகுதி, சமூக முன்னேற்றம் முதலிய பொது விஷயங்களும், வர்த்தமானங்களும் சிறப்பாக வெளிவருகின்றன.

தமிழன்பர்கள் யாவரையும் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஆண்டுச் சந்தா:

இலங்கை, இந்தியா, பர்மா ரூபாய் 4.

மலாய் நாட்டுக்கு வெள்ளி 4.

மாதிரிப் பிரதி இனாம்! உடனே எழுதுங்கள்!!

விலாசம்:

"ஈழகேசரி" அதிபர்

சுன்னாகம், இலங்கை.

"பாரதி"யில் விளம்பரஞ் செய்ய விகிதம்.

சாதாரண	பக்கம் 1-க்கு	மாதம் 1-க்கு	ரூ.	10—0—0
,,	,, ½-க்கு	,,		5—8—0
,,	,, ¼-க்கு	,,		3—0—0
கவர்	,, 2 & 3	,,		15—0—0
,,	,, 4	,,		20—0—0

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும்.
நீண்டகாலம் விளம்பரந் தருவோர் மானேஜருக்கு எழுதவும்.

அழகான என்லார்ஜ்மெண்டுகள்! பேர் பெற்ற வேலைகள்!

வருஷாந்திர அறிக்கை.

சில நாட்களுக்கு மட்டும் கீழ் குறிப்பிட்டிருக்கும் போட்டோக்களும், ஆர்டிஸ்டிக் புரோமைட் என்லார்ஜ் மெண்டுகளும் குறைந்த சார்ஜுக்கு படங்கள் எடுத்துக் கொடுக்கப்படும். பழைய சிறிய போட்டோக்களை புதுப்பித்தும், பெரிதாகச் செய்தும் நவநாகரீகத்திற் கேற்றவாறு செய்து கொடுக்கிறோம். இந்த அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடாதீர்கள். வேலைப்பாட்டின் திறனை ஒரு முறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

மவுண்டின் அளவு.	படத்தின் அளவு.	காப்பிகள்.	சார்ஜ்.
12 × 10	8½ × 6½	1-க்கு	ரூ. 3—0—0.
14 × 10	10 × 8	1-க்கு	ரூ. 4—0—0.
15 × 12	12 × 10	1-க்கு	ரூ. 6—0—0.
20 × 16	15 × 12	1-க்கு	ரூ. 8—0—0.

இதற்கு மேற்பட்ட பெரிய சைஸ் தேவையுள்ளோர் கடிதங்களின் மூலமாகவும் நேரிலும் தெரிந்துகொள்ளலாம்.

(Sd.) ***K. M. B. S. Mani Brothers.***
Artists and Photographers,
BODINAYAKANUR P. O.,
Madura Dist., S. India.

குறிப்பு:—ஆர்டர் கொடுப்பவர்கள் அட்வான்ஸ் பாதி ரூபாய் அனுப்ப வேண்டும்.

நம்மிடம் கிடைக்கும் இதர நூல்கள்.

1.	நெப்போலியன் போனபார்ட்	0—4—0
2.	தென் இந்தியா விவசாய நூல்	1—4—0
3.	பனத சங்கரி (ஓர் துப்பறியும் நவீனம்)	1—0—0
4.	போலந்து நாட்டின் சுதந்திரம்	0—1—0

தபாற் செலவு பிரத்தியேகம்.

பாரதிப் புத்தகாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

"மணிக்கொடி."

ஒரு உயர்தர தேசீய வாரப் பத்திரிகை.

ஆசிரியர்: கே. ஸ்ரீனிவாசன்.

தமிழர்களது வாழ்வில் தோன்றியுள்ள புது உணர்ச்சியின் வேகத்தையும் போக்கையும் பிரதிபிம்பிக்கும் பத்திரிகை "மணிக்கொடி" தான்.

எளிய, இனிய, வேகம் பொருந்திய உற்சாகமளிக்கும் நடையில் சிறந்த எழுத்தாளர்கள் பலரால் எழுதப்பெற்ற இனிய சிறு கதைகள், ஆராய்ச்சி நிறைந்த கட்டுரைகள், சித்திரம், சங்கீதம், இலக்கியம் ஆகிய கலைகளைப்பற்றிய வியாசங்கள் இதில் வெளிவரும். நண்பர் வ. ரா. அவர்களின் உணர்ச்சி ததும்பும் சிறந்த வியாசங்களும், உருசியான சிறு கதைகளும் இப் பத்திரிகையை அழகுபடுத்துகின்றன.

தனிப்பிரதி 1 அணா. வருட சந்தா ரூ. 3–8–0.

விலாசம்: "மணிக்கொடி" ஆபீஸ்,

7, நைனியப்பன் தெரு, ஜி. டி., மதராஸ்.

"காந்தி."

மாத மிருமுறைப் பத்திரிகை.

ஆசிரியர்: தெ. ச. சொக்கலிங்கம்.

சிறந்த ஆராய்ச்சியாளரது கட்டுரைகள், நெஞ்சை அள்ளும் உருக்கமான சின்னஞ்சிறு கதைகள், சிறந்த ஆசிரியக் குறிப்புகள் முதலியவைகள் இப் பத்திரிகையில் வெளிவருகின்றன. இலகுவான நடை. சிறந்த சுவையுள்ள பொருள்கள். குறைந்த சந்தா.

உள்நாடு: தனிப்பிரதி 2 அணா. வருட சந்தா ரூ. 2–8–0

வெளிநாடு: ,, 3 அணா. ,, ரூ. 4–8–0

"காந்தி" ஆபீஸ், சென்னை.

"பாரதி"

பைண்ட் வால்யம்

'தமிழ் நாட்டு மாடேன் ரேவியூ' வெனப் புகழப்பெற்று, சென்ற 1929-ம் ஆண்டு முதல் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இந்த பைண்ட் வால்யங்களில் பல பெரியோர்கள் சரிதைகளும் தேசாபிமானச் செல்வர்களின் ஜீவியக் குறிப்புகளும், அவர் தம் படங்களும் நிறைந்திருக்கின்றன.

நேர்த்தியான காலிகோ- கில்ட் பிரிண்ட்.

2-ம்	வருட வால்யம் 1-க்கு விலை		ரூ. 2—8—0.
3-ம்	,,	,,	ரூ. 2—8—0.
4-ம்	,,	,,	ரூ 2—8—0
5-ம்	,,	,,	ரூ. 2—8—0.

3-ம் வருட அனுபந்தம் ரூ. 0—4—0.

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர்க்குத் தபாற் செலவுடன் வால்யம் 1-க்கு ரூ 3½ அல்லது 5½ ஷிலிங்.

"பாரதி" ஆலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

பாரத நாட்டின் வீரப் புதல்வி

ஜான்ஸி மகாராணி லக்ஷ்மீ பாய்

ஜீவிய சரித்திரம்.

பிரதி 1-க்கு விலை அணா 0—2—0.

வேண்டுவோர் தபால் செலவுக்கும் சேர்த்து இரண்டரையணா ஸ்டாம்பு அனுப்பி வைக்கவும்.

10 பிரதிகள் வாங்குவோருக்குத் தபாற் செலவு இனும்.

"பாரதி"ப் புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



சிறந்த செந்தமிழ் மாஸிகை.

பொருள் அடக்கம்.

மாலை 6. பவஞு சித்திரைமீ மணி I.

தொடர் எண்.		பக்கம்.
1.	வாழ்த்து— பண்டித திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்	... 1
2.	"பாரதி" வாழ்க!— டாக்டர் திரு. S. R. அத்தியப்பனூர் அவர்கள்	... 2
3.	"பாரதி"யின் ஆருவது ஆண்டு—ஆசிரியர், "பாரதி."	... 3
4.	மனம் போல் வாழ்வு—"சர்தார்." (சிறு கதை)	... 6
5.	காலங் கெட்டுப் போச்சு—"ஆனந்தா." (சிறு கதை)	... 13
6.	நள்ளிரவில்—"ஞான விநோதன்." (சிறு கதை)	... 17
7.	கார்ல் மார்க்ஸ்—திரு. K. L. பழனிச்சாமி அவர்கள், B.A., L.T.	35
8.	ஸரஸ மோகனு—திரு. வெ. இராமச்சந்திரன் அவர்கள்	... 39
9.	ருஷிய மாணவர் வாழ்க்கை— ஜனுப் எஸ். சையது அஹமது அவர்கள்	... 50
10.	தமிழ் மொழியும் பாரதியாரும்— பண்டித திரு. இராஜமாணிக்கம் அவர்கள்	... 53
11.	மானிட சேவையும் தெய்வீக வாழ்க்கையும்— திரு. ச. முனுஸ்வாமி பிள்ளை அவர்கள்	... 60
12.	பைந்தமிழ்ச்சோலை-சோலை செழிக்க வேலை சுவாமி திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள்	... 64
13.	ஆராய்ச்சி மேடை—	... 73
14.	ஆசிரியக் குறிப்புகள்—	... 77

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர். ரா. சுப்ரமண்யம், பொறுப்பாசிரியர்.

மாலை 6	பவ-சித்திரை 1934ளு ஏப்ரல்-மேமீ	மணி 1

வாழ்த்து.

பண்டித திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்.

வெண்பா.

நாட்டுக் கணியாகி நன்மைக்கு வித்தாகி
ஊட்டு மறிவுக் கிடனாகித்—தீட்டுதமிழ்
வாசகர்க்கு வாய்த்தவொரு மாசிகையாம் பாரதியை
ஈசனருள் காக்கு மினிது.

7899

"பாரதி" வாழ்க!

டாக்டர் திரு. S. R. அத்தியப்பனூர் அவர்கள்.

ஆசிரியப்பா.

பாரினுக் கின்பம் பயக்கும் பாரதி!
சீரிய முறையிற் றிங்கள் தோறும்
பரிதி யொளியெனப் பரந்து வீசி
பாரத நாட்டின் பனியினை நீக்கி
அந்நிய ஆட்சியின் அநீதியைக் களைந்து

செந்நெறி பூண்டு சீருறு முறையில்
தண்ணளி கொண்டு திண்ணிய வழியில்
மண்ணின் உரிமை மாண்பினை விளக்கி
வாழ்வை யளிக்கும் வளம்பெறு பாரதி!
வாழ்க! நீபல் லாண்டுவா ழியவே!

சுதந்தர நலத்தின் சுகமதை யுணர்ந்து
இதந்தரு முறையி லின்னலைப் போக்கி
சுதந்தரம் நலந்தரு மருந்தென வோதி
பரிவுடன் தெளியக் காட்டித் தூய!
கருத்தினை வழங்கும் பாரதி வாழ்க!

உத்தமர் போற்றும் உத்தம பாலையத்தில்
பத்தியா லுடல்பொரு ளாவி மும்மையும்
பாரத வன்னைக் கேயர்ப் பணஞ்செய்
அரசியற் புலம் நிறை அறிஞ!
நாரண சாமி நலமுட னுயர்க!

வாழ்க்கையானது அன்பின் வடிவம். வாழ்க்கையை யறியாதவன் அன்பின் வடிவத்தையும் தன்மையையும் அறிய மாட்டான். அன்பினு லேயே உலகம் உண்டாயிற்று. அன்பு ஒன்றினுலேயே சமூகம் அன்னோன்னிய வாழ்க்கையைப் பற்றும். அன்பே மானிட வடிவம். அன்பை யறிந்து கடமையைச் செய்ய வேண்டும்.

"பாரதி"யின் ஆருவது ஆண்டு.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

இறைவனது இன்னருளால் "பாரதி"க்கு இன்று முதல் ஆருவது ஆண்டு ஆரம்பிக்கிறது. இச் சந்தோஷ செய்தியைக் கேட்டு "பாரதி"யின் வாசகர்கள் மிக மிக மகிழ்வார்கள் என்று நாம் நம்புகிறோம். ஒரு கிராமத்திலிருந்து இப் பத்திரிகை வெளிவந்துகொண் டிருந்தாலும், தனது கடமையைச் சரிவரச் செய்துகொண்டே வந்திருக்கிறது. தேசீயத்திலும், தமிழ் மொழி வளர்ச்சியிலும், சமூக சீர்திருத்தத் தொண்டிலும், சமரசத்திலும், கிராம சீர்திருத்தச் சேவையிலும் இன்னும் நானு வழிகளிலும் சென்ற ஐந்து வருடங்களாக நமது "பாரதி" தன்னுல் இயன்றவரை அரிய தொண்டு செய்து வந்திருக்கிறது.

அடிமை உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் தமிழச் சகோதரர்களுக்கு எழுப்புதல் கொடுத்து, உற்சாகம் அளித்து, உணர்ச்சி உண்டாக்கி இருக்கிறது. வாலிபக் கிளர்ச்சிக்கு உற்ற துணையாகவே இருந்து வந்திருக்கிறது. மாதர் இயக்கத்திற்கு அதிகமான ஆதரவு அளித்தே வந்திருக்கிறது. கண்மூடி பழக்க வழக்கங்களை மண்மூடிப் போகச் செய்வதில் அஞ்சா நெஞ்சுடன் இது தொண்டாற்றிக்கொண்டு வருவது இங்கு குறிப்பிடத் தக்கது. தமிழ் மாதப் பத்திரிகை இதுவரைக்கும் செல்லாத ஒரு புதிய முறையில் "பாரதி" பதிப்பிக்கப்படுகிறதைத் தமிழகம் நன்கறியும். அருத்தமற்ற காரியங்களிலும், அனுவசியமான விஷயங்களிலும் இப் பத்திரிகை தனது பக்கங்களைப் பயன்படுத்தி, வாசகர்களின் அரிய காலத்தை வீணுக்காது, உயரிய வியாசங்களையே வெளியிட வேண்டுமென்பது இம் மாஸிகையின் நோக்கமென்பதை அன்பர் அனைவ

தேசமின்றி பெயர், அந்தஸ்து, குலம், உரிமை, பொருள், நற் பழக்கம், அந்நியோன்யம் ஆகிய இவைகளில்லை. தேசத்தை முதன் முதல் ஒவ்வொருவனும் தனதாக்கிக்கொள்ள வேண்டும். தேசமில்லாதவரை வாழ்க்கையில்லை. வாழ்க்கை யில்லாதவரை சமுதாயமில்லை. சமுதாயமில்லாதவரை நாகரீகமில்லை. நாகரீகமில்லாதவரை மனிதனுக மாட்டான்.

ரும் அறிவார்கள். இதில் வரும் மேலான கட்டுரைகள், அரிய குறிப்புகள், அருமையான விஷயங்கள், சீர்திருத்த உணர்ச்சியை உண்டாக்கும் சிறு கதைகள், சன்மார்க்கத்தை போதிக்கும் நவீனங்கள், பெரியாரின் ஜீவிய சரித்திரங்கள் முதலியவைகளை ஆயிரக் கணக்கான மக்கள் வாசித்துப் போற்றுவதை அறிந்து மிகவும் திருப்தியடைகிறோம். பற்பல அறிஞர்கள், பண்டிதர்கள், பத்திராசிரியர்கள், புஸ்தகாசிரியர்கள் முதலிய பெரியார்கள் "பாரதி"யைப் பற்றிப் புகழுரைகள் கொடுத்து எம்மைப் பெரிதும் எமது பணியில் ஊக்கி இருக்கிறார்கள். ஆங்கிலம் அறியாது தமிழ் மட்டும் அறிந்த தமிழ் மக்களுக்கு இது பிரத்தியேகமான சேவை செய்திருக்கிறதைப் பற்றி இங்கு குறிப்பிடத் தக்கது.

சுயநலங் கருதாமல் கிராமத்திலிருந்து கொண்டு இப் பத்திரிகையை வெளியிடுவதால், எமக்கு அளவற்ற நஷ்டங்களும் எல்லையற்ற கஷ்டங்களும் உண்டாயின, உண்டாக்கிக்கொண் டிருக்கின்றன வென்பதை நாம் நன்கறிவோம். இதை வியாபார முறையில் நடத்தினால், நமக்கு நஷ்டமும் கஷ்டமும் ஏற்படாது. கிராம சேவையின் நிமித்தமாக இப் பத்திரிகையைக் கிராமத்திலிருந்து கொண்டே நடத்துகிறோம். நாம் கொண்டிருக்கும் பாஷாபிமானமே, நாம் பூண்டிருக்கும் பத்திரிகாபிமானமே எமது பேறு முனையால் "பாரதி"யின் மூலம் இந்திய ஜன சமூகத்திற்கு—முக்கியமாகத் தமிழர்களுக்கு தொண்டு செய்யும்படி செய்துகொண் டிருக்கிறது. தேசியப் பிரச்சாரம் செய்து, இரு முறை இரண்டு வருடங்கள் சிறை சென்றதைத் தவிர்த்து, மற்ற காலமெல்லாம் இப் பத்திரிகைக்காகவே உழைத்துக் கொண்டிருக்கிறோம். பத்திரிகைத் தொழில் நமது துர்அதிர்ஷ்ட இந்தியாவில்—அதுவும் தமிழ் நாட்டில் மகா கஷ்டமான நஷ்டமான தொழில். முக்கியமாய் உண்மைத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு—நாட்டின் நன்மைகளை நாலு வழிகளில் நாடி உறுதியுடன் உழைக்கும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு சிறிதும் ஆதரவு கிடையாது. "பாரதி"யால் எமக்குச் சுமார் ரூ. 6000 நஷ்டம். தமிழ்ப் பத்திரிகைகளை அபிமானத்துடன் நடத்தி கெட்டுப் போன பத்திராதிபர்கள் பற்பலர். தமிழ்ப் பத்திராதிபர்களின் சரித்திரத்திலிருந்து நாம் மட்டும் நஷ்டமின்றியும் கஷ்டமின்றியும் எப்படி விதி விலக்குடன் தப்பிக்கமுடியும்?

ஹிந்தி, வங்காளி, மராத்தி, குஜராத்தி, தெலுங்கு முதலிய பத்திரிகைகளைப் பாருங்கள். அவை எவ்வளவு வேகத்தில் முன்

கல்வியின் பொருளே சுதந்திரப் பொருள். சமுதாய நன்மை, நீதி தர்மம், பரோபகார சிந்தை, சமூக உழைப்பு, ஜீவகாருண்யம், சாந்தி நிலை முதலியவைகளைப் புகட்டக்கூடியதற்குத்தான் கல்வி என்று பெயர்.

னேறிக்கொண்டிருக்கின்றன? கவனியுங்கள். சுமார் 50 வருடத்திலிருந்து அபிவிருத்தி அடைந்துகொண்டிருக்கும் ஹிந்தியை நோக்குங்கள். "சாந்த்", "சரஸ்வதி", "மாதுரி", "விசால் பாரத்", "கல்யாண்", "சுதா" முதலிய ஹிந்தி மாதப் பத்திரிகைகள் இங்கிலிஷ் மாஸிகைகளுக்குச் சமானமா யிருக்கின்றன. இவைகளுடன் தமிழ்ப் பத்திரிகைகள் போட்டி போட முடியுமா? முடியாது, முடியாது. தமிழர்களுக்குப் போதியபடி பாஷாபிமானமிருந்தால், இன்று தமிழ் நாட்டில் எத்தனை பத்திரிகைகள் வெளிவந்து உலாவிக்கொண்டிருக்கும்! ஆங்கிலம் படித்தவர்கள் தமிழ்ப் பத்திரிகைகளை வாசிப்பது கௌரவக் குறைவு என்று நினைக்கிறார்கள். தமிழர்கள் சில உயரிய பத்திரிகைகளைக் கொன்ற பாபம், பல தமிழ்ப் பத்திரிகைகளைத் தமிழர் ஆதரித்து வளர்க்கும் வரையில் தீராது. தமிழர்களுடைய பாஷாபிமானத்தைப் பற்றி விரிக்கத் தேவையில்லை.

சில நண்பர்கள்—அன்பர்கள் உற்ற சமயங்களில் உதவி, எமக்கு ஊக்கம் கொடுத்துக்கொண் டிருப்பதால், நாம் "பாரதி"யை இம்மட்டிலாவது முறையுடன் வெளியிடுகிறோம். "பாரதி"யை உயரிய வழியில் நடத்தித் தேச சேவை செய்ய வேண்டுமென்ற ஒரே ஒரு தனிப்பெரும் நோக்கத்தால், மலை போன்று வந்த எமது எல்லாக் கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் தாங்கி நின்று உற்சாகத்துடன் தொண்டாற்றிக் கொண்டு வருகிறோமென்று இங்கு சொல்லாமலிருக்க முடியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக பாரத அன்னையின் அருளை முன்னிட்டு இதை நம்பிக் கையுடன் நடத்திக்கொண் டிருக்கிறோம்.

இனி வரும் வருடத்தில் இயன்றவரையில் எத்தனை வழிகளில் அபிவிருத்தி செய்ய முடியுமோ அத்தனை வழிகளில் "பாரதி"யை அபிவிருத்தி செய்யத் தீர்மானித்திருக்கிறோம். மனதை உருக்கும் சிறு கதைகள் தவறாது நமது மாஸிகையில் இடம் பெறும். "பாரதி"க்கு பல மேதாவிகள் அரிய கட்டுரைகள் எழுதி யனுப்புவதாக வாக்களித்திருக்கிறார்களென்று களிப்புடன் அறிவித்துக் கொள்கிறோம்.

"பாரதி"யில் குற்றங் குறைகள் இருக்கக் கண்டால், எந்த எந்த வழிகளில் சீர்திருத்தலாம், குறைகளை நீக்கலாம் என்று அறிவிக்கும்படியாயும் அல்லது பத்திரிகையின் அபிவிருத்திக்கான புத்தம் புதிய ஆலோசனைகள் தங்களுக்குத் தோன்றுமானால், அவைகளைத் தயவு

தேசீய உணர்ச்சியானது தேசீயக் கல்வியினின்றுமே உண்டாகும். தேசீயக் கல்வியே சமுதாய ஒற்றுமை, சமுதாய உணர்ச்சி, சமுதாய தர்மம், சமுதாய உரிமை முதலியவைகளை உண்டாக்கும்.

மனம் போல் வாழ்வு.

(ஓர் சிறு கதை.)

‘சர்தார்.”



எப்படியோ இருக்றே? என்ன கடுதாசி கையிலே?”

“தந்தி வந்திருக்கிறது. என் சின்னத் தம்பி பட்டணம் ஜெனரல் ஆஸ்பத்திரியில் மிக ஆபத்தான நிலையில் இருக்கிறானாம். போய்ப் பார்த்துவிட்டு வரட்டுமா?”

கந்தப்ப முதலியார் இயற்கையிலேயே முன் கோபி. பொருளாதார நெருக்கடி தனது வருவாயையும் பாதிக்கத் தொடங்கிய பிறகு அவரது கோபம் அளவுகடந்து

செய்து எங்களுக்குத் தெரிவிக்கும்படியாயும் மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். சந்தாதாரர்களின் ஆதரவின்றி எப் பத்திரிகையும் நடைபெறுதென்று சொல்லத் தேவையில்லை. ஆகையால் அன்பு கூர்ந்து தங்கள் பந்துக்களையும் தங்கள் சிநேகிதர்களையும் சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக் கொடுத்து, எமது இச் சேவையில் உதவி செய்யும்படியாக வேண்டிக்கொள்கிறோம். இந்த அன்பான அவஸியமான வேண்டுகோளைத் தாங்கள் கட்டாயம் பூர்த்தி செய்வீர்களென்று பெரிதும் நம்பிக் கொண்டிருக்கிறோம்.

சென்ற ஆண்டில் எமக்கு ஆதரவு கொடுத்த சந்தா நேயர்கள், விளம்பரதாரர்கள், கட்டுரை எழுதிய அறிஞர்கள், மாற்றுப் பத்திரிகை வழங்கிய சகோதரப் பத்திராசிரியர்கள். “பாரதி” அபிவிருத்திக்காகப் பல வழிகளில் பாடுபட்ட நண்பர்கள், “பாரதி”யின் வளர்ச்சியைக் கோரி எமது சகோதரர் சுப்ரமண்யம் அவர்கள் செய்யும் பர்மா சுற்றுப் பிரயாணத்தில் ஆங்காங்கு ஆதரித்து பற்பல வசதிகள் செய்து கொடுத்த, சந்தாக்கள் சேர்த்துக் கொடுத்து உதவி புரிந்த நண்பர்கள், எங்கள் வெளியீடுகளை வெகுவாக வாங்கும்படி செய்த அன்பர்கள், சங்கங்கள், இன்னும் விற்பனை ஏஜண்டுகள், “பாரதி”யின் வெளியீட்டில் கண்ணுங் கருத்துமா யிருந்து வரும் எங்கள் “ஆனந்தா பிரஸி”ன் சகல தொழிலாளர்கள் முதலியவர்களுக்கும் எமது நன்றி யறிதலான வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விட்டது. அற்பத்திற்கெல்லாம் கோபித்துக்கொள்ளத் தலைப்பட்டார்.

முதலியார் பத்தாயிரம் ரூபாய்வரை செலவு செய்து தன் ஏக புத்திரன் சந்திரனை எம். ஏ. வரை படிக்க வைத்திருந்தார். மந்திரிகள், ஜட்ஜ்கள் முதலியோரின் மக்கள், மச்சான்களின் நட்பைப் பெறுவதற்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் தடையின்றி அவனுக்குச் செய்து கொடுத்தார். அவர்கள் மூலம் அவனை உயர்ந்த உத்தியோகத்தில் அமர்த்திக் காணவேண்டு மென்பது அவரது அவா. சந்திரனோ சர்க்கார் உத்தியோகத்தை விரும்பாது தேச ஊழியம், ஹரிஜனத் தொண்டு என்ற கிறுக்குப் பேச்சு பேசி வந்தான். தன் மனோராஜ்யம் இடிந்து வீழ்ந்தது குறித்து முதலியாருக்குச் சில மாதங்களாய் மகன் பேரில் கோபம்.

மகனைக் கடிந்து தன் வழிக்குத் திருப்ப அதுதான் தக்க சமயம் என்று நினைத்தார். கோபா வேசத்துடன் “உன் இழவுக்கு எத்தனை நாளைக்கு அழுவது? பிழைக்கிற வழியைப் பார்க்கலே. நீ போய்தான் சாகிறவனைப் பிடித்து வைத்துடப் போறியோ? இருக்கிறதை ஒழிக்கத்தானே பிறந்திருக்கிறே” என்று தன் மகன் என்பதையுங் கவனியாமல் கல்லெடுப்பு கருமாந்திரம் செய்துவிட்டார் கந்தப்பர்.

மிகச் செல்வமாகவும் மரியாதையோடும் வளர்க்கப்பட்டு, யாவரிடமும் அன்பு மொழி பேசி அன்பு மொழி பெற்று, கடுஞ் சொற்களையே கேட்டறியாத சந்திரனுக்கு அப்பாவின் சொல்லம்பு சுருக்கென்று தைத்தது. அவரது வன்மொழிகளைத் தாங்க இயலவில்லை. துக்கம் தொண்டையை அடைத்துக்கொள்ள, “என் அப்பன்—ஆருயிர் அன்பன் நான் நோய்வாய்ப்பட் டிருந்தபோது தன் பரீட்சையைப் பற்றியும் கவலைப்படாது சதா என்னுடன் இருந்து சேயைப் பாதுகாக்கும் தாயைப் போல், காதலனைக் காக்கும் கற்பாசியைப் போல், என்னைப் பேணி சுகமடைய வைத்த அன்பன் மரணாவஸ்தையில் இருக்கும் போது அவனைப் போய்ப் பார்க்கக் கூடாதாம். பணப் பித்து பிடித்த அப்பாவுக்கு எப்படித் தெரியப்போகிறது நம் நட்பின் நயம்?...........

“தம்பி! நீ என்னைவிட்டா போய்விடப் போகிறாய். இல்லை...... அது பொய்........உன் உள்ளம் என்னை விட்டுப் பிரியாது. நாம்

வாழ்க்கையானது சலனமுள்ளது. பரந்த கோரிக்கை கொண்டது. தீவிர அபிவிருத்தியைப் பற்றியது. இம் மூன்றும் வாழ்க்கையின் தன்மைகளாம். இவைகளின்றி வாழ்க்கை யில்லை.

நிச்சயமாய் மீண்டும் சந்திப்போம்'' என்று தனக்குத்தானே பேசிக் கொண்டான்.

''ஆம். 21 வயதான பிறகும் அவர் ஏன் என் இழவுக்கு அழ வேண்டும்? இனி அவ் வுபத்திரவம் உமக்கு வேண்டாம்'' என்று கூறிக்கொண்டே சாய்ந்தான் அருகிலிருந்த நாற்காலியில்.

*　　　*　　　*　　　*　　　*

அமாவாசை; காரிருள். கரிய மேகக் கூட்டங்கள் விண் மீன்களையும் மறைத்துவிட்டன. எங்கும் ஒரே மூடுபனி. கடல் அலைகளின் ஓயாத பேரிரைச்சல். கடலருகே மணல் மீது சாய்ந்திருக்கும் வாலிபனோடு உலகை முழுவதுமே துக்கம் கொண்டாடுகின்றது போலும். அவன் முகம் துக்கமெனும் இருளால் மூடப்பட்டு, விழிகள் ஒளி யிழந்து மங்கியுள்ளன. உள்ளத்தில் ஏதோ ஓர் பேரிரைச்சல் கேட்கிறது. ஓயாத ஏதோ ஓர் ஆசை—ஆசை பூர்த்தியாகாத துக்கம் அலைத்துக்கொண் டிருக்கிறது.

''ஆ! என்று மில்லாமல் அன்று மாத்திரம் ஏன் அவ்வளவு கடுமையாகப் பேச வேண்டும்? நான்தான் ஏன் அவசரப்பட்டு ஓடி வர வேண்டும்? உம்! எல்லாம் என் துர் அதிர்ஷ்டந்தான். திரும்பிப் போகலாமா?............சே! அது யார் செய்வது? திரும்பினால் சுய பலத்துடனன்றோ திரும்ப வேண்டும்...............

''இன்னும் ஓரங்குலம் உயரமாகவாகிலும் இருக்கக் கூடாதா? அவளைவிட அரை அங்குலம் குள்ளமான நான் அவளைக் காதலிப்பதாய்ச் சொன்னால் சிரிக்கமாட்டார்களா? அவளிடம் சொல்லத்தான் மூஞ்சி எங்கே? பைத்தியக்காரனென் றல்லவோ நகைப்பாள். பரீட்சையிலாவது அவளுக்கு மேலாக பாஸ் செய்தேனா? என்னைப் போன்ற துர்ப்பாக்கியசாலியும் உண்டோ?'' எனப் பெருமூச் செறிந்தான்.

''ஹூம்! 'காக்கா' பிடிக்கத் தெரியாத எனக்கு உத்தியோகந்தான் எங்கிருந்து அகப்படப் போகிறது? கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்கூட பத்திரிகாசிரியர்களைக் 'காக்கா' பிடித்தால்தான். கையிலோ ஒரு வாரச் சாப்பாட்டிற்கும் காசில்லை. காதல் என்ற ஜீவசக்திக்கும் நான் கொடுத்துவைக்க வில்லை. காதல் போயிற், காதல் போயிற், சாதல் சாதல் சாதல். இதுதான் ஏற்ற வழி.

அரசாங்கமானது சமுதாயத்தின் மனமாகவும் பிரஜைகள் உறுப்பாகவும் இருக்க வேண்டும்.

''தற்கொலை செய்துகொள்வது மகா பாவமன்றோ? சே! அது யாரோ கட்டிவிட்ட கதை. பாவமாவது, புண்யமாவது. நம் துன்பங்களை யெல்லாம் அனுபவியாத எவனோ கட்டிவிட்டது நமக்கு எப்படிப் பயன்படும்? நிச்சயமாய், சாவதே மேல்.

''சாவதா? என் சின்னத் தம்பி என்ன பாடுபடுவான்? 'உன் வாழ்வு உனக்காகமாத்திரமல்ல; பிறருக்காகவுமே நீ வாழ்வது. கவலையை யொழி. எனக்காகவாகிலும் வாழ்வைப் போற்று,' என்று சென்ற மாதந்தானே லண்டனிலிருந்து எழுதி யிருந்தான். என் இருள் சூழ்ந்த வாழ்வில் தம்பிதான் அதே ரோட்டிலே மின்னும் விளக்கைப்போல் துளி ஒளியைக் காட்டுகிறான். அவனுக்காகவாகிலும் கஷ்டப்பட்டு உயிர் வாழ்வோம்'' என்று கூறிக்கொண்டே எழுந்து விரைவாய் விளக்கை நோக்கி நடந்தான் சந்திரன்.

*　　　*　　　*　　　*　　　*

இள வேனிற் காலம். பௌர்ணமி இரவு. பால் போன்ற நிலா. மப்பு மந்தாரமற்ற வானம். நக்ஷத்திரங்க ளெல்லாம் கண்ணைச் சிமிட்டி விளையாடுகின்றன. தென்றல் பக்கத்திலுள்ள பங்களாத் தோட்டத்தினின்றும் நறு மணங்களைக் கொண்டு வருகிறது. அடுத்த வீட்டிலிருந்து வீணா கானமும் குயிலின் குரலிற் பாடும் பாட்டும் இடையே காற்றுடன் கலந்து வருகிறது. ஆ! எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா!

அதோ அப் பெரிய வீட்டின் மாடி முற்றத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் இள நங்கை இத்தனை இன்பங்களையும் மறந்துவிட்டு ஆழ்ந்த சிந்தனையிலிருப்பானேன்? அவளது முகமலர் வாடுவானேன்? கோடி கோடி இன்பத்தினூடே விடாது ஓடி ஓடி வரும் துன்பந்தான் மனித வாழ்வோ? இன்பங்களைக் கொடுத்தென்ன பயன்? அவள் அவற்றை ரஸிக்கச் சக்தியற்றவளாயிற்றே! அவள் இதயந்தான் களவு போய்விட்டதே.

சாரதா எனும் அப் பெண்ணரசிதான் சந்திரனின் காதலி. நான்கு வருடங்களுக்கு முன் இருவரும் ஒன்றாய்க் கலாசாலையிற் சேர்ந்தனர். கண்டதும் காதல் கொண்டான். அவளும் சில நாட்களில் அவனைக் காதலித்தாள்.

அவளை அழகி யென்று சொல்வதற்கில்லை. அவனும் அப்படி யொன்றும் 'மடவார்க்கெலாம் கண்மணியாகும் தோற்றம் படைத்தவ

சமூக நன்மை, சுதந்திரம், அபிவிருத்தி ஆகிய இவைகளைப் பெருக்கக் கூடியதே அதிகாரத்தின் இலட்சணம்.

னல்ல. அதிகமேன்? காரண காரியங்களுக்கோ—லாப நஷ்டக் கணக்குக்கோ உட்படாத காதல் மின்னலொளி அவர்களுக்குள் பாய்ந்து வருகிறது.

சந்திரனுக்கு கூச்சமதிகம். மற்றவர்கள் தங்களை—முக்கியமாக சாரதாவைப்—பற்றி கண்டபடி பேசுவார்களே என்ற பயம் ஒரு புறம். எனவே கலாசாலையிலிருந்தவரை அவளோடு அடிக்கடி பேசுவதுமில்லை. அவளும் 'புதுமைப் பெண்ணு'யினும் நவ நாகரீகத்தில் மீறியவளல்ல. சற்று அளவோடிருப்பவள். ஆதலால் நிதானமாகவே பழகி வந்தனர். கலாசாலையை விட்ட பிறகும் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் சந்திரன் அவளோடு பேசுவது கிடையாது. தன்னைக் கவலை இருள் சூழ்கின்றபோது பத்துப் பதினைந்து நாட்களுக்கொரு முறை அவள் வீட்டுக்குப் போவதுண்டு அப்போதும் அன்னியோன்ய நண்பர்களாகவே—காதலர்களாயல்ல—பழகி வந்தனர். சுய சம்பாத்தியத்திற்கு வழி தேடிக்கொண்ட பின் தக்க சமயத்தில் பார்த்துக்கொள்வோமென்று இருவரும் பசட்டமின்றி யிருந்தனர்.

சென்ற சில மாதங்களாக சந்திரன் அவள் வீட்டிற்குப் போவதையும் நிறுத்திவிட்டான். சென்னையில் எந்தவித சிநேகிதத்திற்குத் தான் குறைவு. சந்திரனுக்கும் படித்த வேலையில்லாக் குடிகாரன் ஒருவன் நண்பனானான். நாளாவட்டத்தில் சந்திரனுக்கும் அவ் வரிய பழக்கத்தைப் புகுத்திவிட்டான். சில சமயங்களில் தன்னைத் தானே நொந்து கொள்வான். இனி 'பீரை'த் தொடுவதே யில்லையென பிரதிக்ஞை செய்வான். சில நாட்களுக்குள் மனக்கவலை வரும். நண்பன் வருவான். 'பீரி'லே கவலையை மறந்து விடுவார்கள்.

சந்திரனின் மனோதிடங் குன்றியது. உற்சாகம் குறைந்தது, தன் நிலைமையை உன்ன உன்ன வெட்கம் மேலீட்டது. சாரதாவைக் காதலிப்பது முற்றின பைத்தியக்காரத்தனமென்று கருதினான். அவள் தன்னைக் காதலிக்கக் கூடும் என்ற நம்பிக்கைத் தளர்ந்தது எனவே அவளைச் சந்திப்பதை விட்டுவிட்டான். அவளுக்கோ அவனைப்பற்றி ஒன்றும் அறிய இயலவில்லை. அவன் தன் ஊரை விட்டு வந்துவிட்டது மாத்திரம் தெரியும். தற்சமயம் எங்கிருக்கிறான்? என்ன ஆனான்? நான் அவனைக் காலிப்பதை அறிவானா? என்ற சஞ்சலங்கள் அவளைத் தன்னைச் சுற்றியுள்ள இன்பங்களை மறந்துவிடச் செய்தன.

கொடுமையையும் பலாத்காரத்தையும் கொண்டு பரிபாலித்து வரும் அரசாங்கம் அதிக நாளைக்கு நிற்க முடியாது.

“மணவழகர் என்னை உண்மையாகவே காதலிக்கிறார். சமூக வாழ்விலும் நல்ல அந்தஸ்தைப் பெற்றிருக்கிறார். அவரை மணந்து கொள்ள உடன்படலாமா? சந்திரன் என்னைக் காதலிப்பது நிச்சயந் தானா?................சே! இவ்வளவு சலன புத்தியா? சந்திரனைப் பெறாவிட்டால் கன்னிகையாகவே இருந்துவிடுகிறேன்” என்று கூறிக்கொண்டே கண்மூடிவிட்டாள்.

* * * * *

'புதிய சகாப்தம்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் மணவழகர் உண்மையிலேயே இவ் வுலகத்திற்கு ஓர் விந்தை மனிதர்தான். அவர் குப்பை மேட்டிலே மலர்ந்த குருக்கத்திப்பூ. பரந்த அறிவும் தூய உள்ளமும் படைத்த கர்மயோகி.

சாரதா நான்கு வருடங்களாய்ச் சந்திரனைக் காதலிப்பதை அறிந்தது முதல் அவனைத் தேடி அலைந்தார். சில வாரங்களுக்குப் பின் சமூக ஊழியர் மகா நாட்டிலே அவனைக் கண்டுபிடித்தார். சிறிது நேரத்திலேயே அவனிடம் மகத்தான சக்தி, அறிவு உறங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தார். தன் பத்திரிகையின் துணை யாசிரியனாக்கிக்கொண்டார். அவனது சக்திகளையெல்லாம் தட்டி எழுப்பினார். கருத்துக்களை 'கடைசல்' பிடித்து, சிறந்த ரூபங் கொடுத்து அவைகளை நல் வழியிற் செலுத்தக் கற்றுக்கொடுத்தார். சில மாதங்களில் அவனைச் சிறந்த எழுத்தாளனாக்கித் தேச ஊழியர் படையின் தலைவனாக்கி விட்டார்.

ஆனால் சாரதாவின் காதலுக்குத் தான் போட்டி போட்டதை சந்திரனிடம் அறிவிக்கவேயில்லை. அவன் சங்கோசப்படுவானென்பது அவரது எண்ணம்.

* * * * *

இரண்டு வருடங்களுக்குப் பின் ஓர் நாள் மாலை 7-மணி. சென்னைக் கடலோரத்தில் சாரதாவும் சந்திரனும் உலவிக்கொண்டிருக்கின்றனர்.

“சாரதா! என்னை மணந்து கொள்வதென்று உண்மையாக உறுதிகொண்டு விட்டாயா? நான்தான் உனக்கு ஏற்றவனா? நீ என்னைவிட அரை அங்குலம் உயர்ந்திருப்பதற்காக சமூகம் கேலி செய்யாதா?”

“வேறு எதற்கு மணவழகரின் காதலையும் மறுத்துவிட்டேன்? 'சந்திரனை யன்றி வேறொருவனையும் மணந்துகொள்ளேன்' என அவருக்குரைத்த பதிலுக்கு அழிவேது? சமூகம்! சே! சாகப்

உயிர் வாழ்க்கைக்கு நம்பிக்கை பிரதானம்.

போகும் தொண்டு கிழத்திற்கு 12 வயது சிறுமியைக் கட்டி விதவையாக்கி வருத்தும் சமூகந்தானே இது. நாம் சருத்தொருமித்த போது சட்டுகளென்ப தேது."

"அப்படியா! அவரது காதலுக்கு விரோதி யென்று அறிந்திருந்தும் என்னை ஆதரித்து சிறந்த பத்திராசிரியனாக்கிக் குடிப் பழக்கத்திலிருந்துந் திருத்தி—லாகிரி வஸ்துக்களைத் தொட்டு இரண்டு வருஷமாயிற்று தெரியுமா?—புதிய மனிதனாய் உன்னிடம் அனுப்பிய அவரது பெருந்தகைமைக் கீடேது? அவர் உண்மையிலே புதிய சகாப்தத்தை உண்டுபண்ணக்கூடிய மகான்தான்."

"மெய்தான்" என்று என் வாயை அப்படியே மூடிவிட்டாள் தன் முருக்கிதழால்.

"மெதுவா"

"ஓ! சின்னத் தம்பியா! நீ இன்று சீமையிலிருந்து வந்து சேர்ந்ததை மறந்துவிட்டேனே" என்றான் சந்திரன்.

"எப்படிடா ஞாபகமிருக்கும்? மன்னிக்கவும். சக்தி பூஜையில் கரடி புகுந்ததற்கு."

"சரிதாண்டா. நாளை ஊருக்கு வா. அப்பாவின் ஆசீர்வாதத்திற்கு சிபார்சு செய்."

"நாய்க்கர் ஜாதியைச் சேர்ந்த என்னை மணந்துகொள்ள உங்கள் தகப்பனார் அனுமதிப்பாரா?"

"சந்தேகமேன். அவர் நாட்டுப்புறவாசியாயினும் 'கர்நாடக'மல்ல. தீவிர சீர்திருத்த வாதி. அவரது பிச்சைதான் இவனது சீர்திருத்தக் கொள்கைகள். அதிலும் புத்திரனைத் திரும்பக் காணும் சந்தோஷத்தினால் உங்கள் இன்பத்திற்குத் தடை செய்யவே மாட்டார்."

தொண்டர்களே! கிராமங்களுக்குச் செல்லுங்கள். எழுந்திருங்கள்! விழியுங்கள்! என்று அங்கு வீர முழக்கம் செய்யுங்கள். அவர்களின் தற்கால நிலையை அவர்களே உணரும்படி அவர்களுக்குப் புத்தி கூறுங்கள். மிகவும் இலகுவான எளிய நடையில் சாஸ்திரங்களில் பரந்து கிடக்கும் மேலான உண்மைக் கருத்துக்களை அவர்களுக்கு விளங்க உரையுங்கள்.

"காலங் கெட்டுப் போச்சு!"

(சிறு கதை.)

"ஆனந்தா."

அப்போதுதான் ஆபீஸிலிருந்து வந்த ரெங்கநாதன் 'டென்னிஸ்' விளையாடப் போவதற்காக ஆயத்தம் செய்துகொண் டிருந்தான். அவனது நண்பன் கந்தசாமி அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான்.

'வா கந்தா! எங்கே ரொம்ப நாளாய்க் காணோம்? உனக்கு முகூர்த்தம் நிச்சயம் பண்ணி ஆயிற்றாமே; வாஸ்தவந்தானா?' என்று வரவேற்றான் ரெங்கநாதன்.

'ஆம்! இத்தனை நாளாய் சுயேச்சையோ டிருந்தேன். இப்போது விலங்கு விழப் போகிறது.'

'ஆஹா! அந்த விலங்குதான் எப்போது விழும் என்று காத்துக்கொண்டிருந்தாயே! எனக்குத் தெரியாதா? பெண் பழைய கர்நாடகப் பெண்ணாமே உண்மைதானா?'

'கருநாடகமோ, இருநாடகமோ. அதனால் என்ன?'

'அப்படியா? நவ நாகரீக 'மிஸ்'ஸா யிருந்தால்..............'

'போதும்! போதும்!! அந்த 'மிஸ்'கள் தான் கூடாது.'

'ஏன்?'

'ஏனோ? பெரிய வெள்ளை யானையைக் கட்டி இரை போடுவது போலத்தான் இருக்கும். விலை யுயர்ந்த நாகரீகச் சேலை இனுசுகள் என்ன! மூக்குக் கண்ணாடி என்ன! முகப் பவுடர் என்ன! ஸ்னோ என்ன! பூட்ஸு என்ன! நாவல்கள் என்ன! பத்திரிகைகள் என்ன! இவைகள் எல்லாம் வாங்கித் தரவேண்டுமே!'

சுதந்தர ஸ்தாபனத்திற்குக் கஷ்டங்களைத் தாங்குவதே முக்கிய தர்மம். சுதந்திரத்தை இழந்த ஜாதியார் மகத்தான கஷ்டங்களைத் தாங்கினாலன்றி மீண்டும் சுதந்திரத்தை ஸ்தாபிக்க முடியாது.

'ஏன் கர்நாடகப் பெண்களா யிருந்தால்,செலவே யில்லையோ? அவர்களுக்குத்தான் நகை, நட்டு, லொட்டு, லொசுக்கு எல்லாம் செய்து போட வேண்டுமே. உதடுகள், கண்ணிமைகள் முதலிய இடங்களில் கூடத் தொளைகள் போட்டுத் தங்கத்தைத் தொங்கவிட்டுக் கொள்ள நவ நாகரிகப் பெண்களா விரும்புகிறார்கள்? பழைய வழக்கத்தை அனுசரிக்கும் பெண்கள் புஸ்தகங்கள் படிப்பதில்லையா?'

'அட பைத்தியமே! கர்நாடகப் பெண்களுக்கு நகைகள் போட வேண்டி யிருந்தாலும், அவைகளுக்காகச் செலவிடும் பணம் பெட்டியில் பூட்டி வைப்பதையே ஒக்கும். பிற்பாடு வேண்டிய போது உதவும். நவீன நாகரிகத்தில் ஈடுபட்ட பெண்களுக்குச் செய்யும் செலவு அப்படிப்பட்டதில்லையே. அவர்களும் புஸ்தகங்கள் படிப்பார்கள். என்றாலும் அத்தனை நாவல்களும் பத்திரிகைகளும் வேண்டியதில்லை. ஒரு ராமாயணமும், ஒரு பாரதமும் வாங்கி கொடுத்து விட்டால் பேரன் பேத்திகளைக் காணும் வரை படித்துக்கொண் டிருப்பார்கள். நவ நாகரிகப் பெண்கள் படிப்பதும், வம்பு பேசுவதும் வேலையா யிருப்பார்கள். வீட்டு வேலையைக் கவனிக்க மாட்டார்கள். சிறு காரியம் செய்ய வேண்டி யிருந்தாலும் அந்த 'மிஸ்'களுக்கு நிரம்பச் சிரமமாயிருக்கும்.'

இச் சமயம் ரெங்கநாதனின் தந்தை அறைக்குள் வரவே சம்பாஷணை முடிவடைந்தது. இரு சிநேகிதர்களும் விளையாட்டு மைதானத்திற்குப் புறப்பட்டார்கள்.

பொழுது சாய்ந்த பின் ரெங்கநாதன் வீட்டுக்கு வந்தான். அவனுக்கு விவாகமாகி ஒரே ஆண்டுதான் கழிந்திருக்கிறது. அவனுடைய மனைவி—இல்லை, இல்லை—வாழ்க்கைத் துணைவி (மனைவி என்னும் பதத்தை அவள் விரும்புவதில்லை) நவ நாகரீகப் பெண். பெயர் லக்ஷிமி தேவி. ஹிந்தி படித்தது முதல் 'அம்மாள்' என்று பெயருக்குப் பின் இருந்த வார்த்தையை 'தேவி' என்று மாற்றிக்கொண்டிருக்கிறாள்.

ரெங்கநாதன் வீட்டுக்குள் நுழைந்த போது லக்ஷிமி நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் ஒரு படக் காக்ஷி விளம்பரத்தை ஆவலோடு படித்துக்கொண்டிருந்தாள். தனது வாழ்க்கைத் துணைவரைக் கண்டதும் குதூகலத்தோடு குதித்தெழுந்து வந்து "இன்றைய சினிமா நோட்டீஸைப் பார்த்தீர்களா? நல்ல 'டாக்கி' வந்திருக்குதாம். அவஸியம் அழைத்துக்கொண்டு போக வேணும்" என்றாள் சாகசத்தோடு விரலின் நகத்தைக் கடித்துக்கொண்டே.

கடமை, தியாகம், ஆஸ்திக புத்தி இம் மூன்றும் நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற வழிகளாம்.

ரெங்கநாதன், அதைக் கையில் வாங்கிப் படித்துக்கொண்டே நல்ல படமாய்த்தான் இருக்கும் போலிருக்கிறது! நான் சினிமாவரை அழைத்துப் போய்விடுகிறேன். நீ மட்டும் உள்ளே அழைத்துக் கொண்டு போய்விட வேண்டும்' என்றான் காதலியை நோக்கி.

'ஆஹா! அதற்கு நீங்கள் வேண்டுமாக்கும்! எனக்கு சினிமா இருக்குமிடம் தெரியாதோ?

'ஏதோ தெரியாது என்று நினைத்துத்தான் சொன்னேன். தெரிந்திருந்தால் மன்னித்தருள வேண்டும். அவ்வளவு கோபத்தோடு பார்க்கலாகாது'.

'மன்னிக்க வேண்டுமா? வருகிற கோபத்திற்கு உங்களை என்னதான் செய்யக் கூடாது? அழைத்துப் போவீர்களா, இல்லையா? ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டும்.'

'ஒரே வார்த்தையில் முடியாது. இரண்டு வார்த்தைகளில் சொல்லுகிறேன். 'பைசா நஹி' என்று உதட்டைப் பிதுக்கிக் கையை விரித்தான்'.

'எப்போதும் இப்படித்தான்! ஒரு நாளாவது நான் சொன்னவுடன் கூட்டிக்கொண்டு போனதே கிடையாது' என்று சொல்லிக் கொண்டே முகத்தைச் சுளித்துக்கொண்டு வெடுக்கென பக்கத்திலிருந்த அறையில் நுழைந்தாள்.

'அவ்வளவு கோபம் வேண்டாம்!" என்பதைப் போல் சேலையின் நுனியைப் பற்றி இழுத்தது சுவரிலிருந்த ஒரு ஆணி.

லக்ஷிமி அதை மெல்ல அப்புறப்படுத்தினாள். ரெங்கநாதன் அருகில் சென்று அவளுக்கு ஒத்தாசை செய்து, அவளுடைய இரு தோள் மீதும் தனது கைகளை வைத்து 'ரொம்ப கோபமோ?' என்றான். தனது காதலி பதிலளிக்கு முன் ஒரு இனிய முத்தத்தால் கோபத்தைத் தணிக்கலாமெனக் கருதினான். எதிரே தாய் வருவதைக் கண்டதும் அவ்விடத்தை விட்டும் அகன்றான்.

* * * * *

அன்றிரவு ரெங்கநாதனும், லக்ஷிமியும் படக்காக்ஷிசாலையில் இருந்தார்கள். ரெங்கநாதனின் தந்தை சாப்பாட்டுக்குப் பின் நிலவில் அண்டை வீட்டுக் கிழவரோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தார். இருவரும் பழமைக்குப் பாதகம் வராது காப்பாற்ற முயற்சிப்பவர்கள்.

மனித வாழ்க்கையின் தர்மத்தை ஐக்கிய குணத்தாலேயே சாதிக்க முடியுமேயன்றி வேற்றுமையினாலும் வேறுபாட்டினாலும் சாதிக்க முடியாது.

ரெங்கநாதனின் தந்தை கூறுகிறார்: ‘காலங் கெட்டுப் போச்சு! ஐயா! காலங் கெட்டுப் போச்சு! இந்த ரெங்கன் (மகன் ரெங்கநாதன்) பெண்டாட்டியைக் கூட்டிக்கொண்டு பயாஸ்கோப்புக்குப் போனவன் இன்னும் வரவில்லை. எடுத்ததெற்கெல்லாம் அம்மணிக்குக் கோபம். ஐயா கெஞ்சுவது, கொஞ்சுவது. என் கேட்கிறீர்கள்? இந்தமாதிரிப் பெண்கள் சுதந்திரத்தை நான் கண்டதுங் கிடையாது, கேட்டதுங் கிடையாது. நாங்களும் கலியாணம் பண்ணினோம், வாழ்ந்தோம்; இப்படியா ‘பொம்பளைகளை’ உச்சந்தலையில் தூக்கி வைத்துக்கொண்டோம்? இப்படியா அவர்கள் சொன்னபடியெல்லாம் ஆடினோம்? பாருங்கள்! எங்கள் வீட்டுக்காரியை நான் மிரட்டியிருக்கிறேன்; திட்டியிருக்கிறேன்; அடித்தும் இருக்கிறேன். அப்பாவி மூச்சு விடமாட்டாள். கண்களைக் கசக்கிக்கொண்டு ஒரு மூலையில் ‘கம்’ என்று அடங்கி ஒடுங்கி நிற்பாள். இந்தக் காலத்து ‘லேடிகள்’ கொஞ்சம் ‘கக்கரே முக்கரே’ என்று படித்துக்கொண்டு வீட்டையே ஒரு புரட்டு புரட்டி விடுகிறார்கள். எங்களுக்கெல்லாம் உபதேசம் செய்ய வந்துவிடுகிறார்கள். ‘பொம்பளை’களுக்கெல்லாம் இனிமா எதுக்கு? சொல்லுங்கள்!’’

இவ்வாறாக அவர் உபந்நியாசம் செய்துகொண்டிருந்த போது எதிரே நிலவில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர் ‘டேய் எதடா சரி?’ ‘டேய் இத்தாண்டா சரி,’ ‘போடா அத்தாண்டா சரி’ என்று வாதாடிக்கொண்டு கூச்சலிடவே பேச்சு நின்றது. அச் சிறுவரில் ஒருவன் ‘அத்தினி பேரும் வாங்கடா! தாத்தாகிட்ட கேப்போம்’ எனவே எல்லோரும் இரு கிழவர்களையும் சூழ்ந்துகொண்டார்கள். ரெங்கநாதனின் தந்தை நியாயாதிபதியானார். அவர் உபந்நியாசத்தை மேலும் கேட்க முடியாது. சந்திரனும் மேகத்தில் மறைந்தான்.

கீழ் குறிப்பிட்டவர்களிடம்
நமது பத்திரிகையும் பிரசுரங்களும் கிடைக்கும்.

K. N. Sankaran Pillai,
No. 281, 2nd Division, Maradana,
COLOMBO.

N. P. Ramaswamy Esq.,
PALLATUR, P. O.,
(Ramnad Dt.,)

நள்ளிரவில்.

(ஓர் சிறு கதை.)

“ஞான விநோதன்.”

“டாக்டர்! டாக்டர்!”

‘சை. என்ன தொந்தரவடா இந்த நள்ளிரவில்.’

நான் கண்ணை விழித்தேன். நம் ஜமீன்தார் தக்ஷிணபாபு வந்திருப்பதைக் கண்டேன். உடனே விரு விரு என்று எழுந்து அவரைப் பக்கத்திலுள்ள பிரம்பு நாற்காலியில் அமரச் செய்து நன்கு வரவேற்றேன். அதன் பின் மிக ஆவலுடன் அவர் முகத்தை நோக்கினேன். அப்பொழுது என் கடிகாரத்தில் இரண்டரை மணி ஆயிருந்தது.

வெளுத்த முகத்துடனும், பெரிய கண்களுடனும் பேச ஆரம்பித்தார் பாபு. “பழைய குருடி கதவைத் திறடியாக முடிந்துவிட்டதே. பழைய வியாதி இன்றிரவு திரும்பவும் வந்துவிட்டது. உங்களுடைய மருந்தால் ஓர்விதப் பிரயோசனமுமில்லையே.”

“ஒருவேளை திரும்பவும் தாங்கள் தாராளமாகத் திராக்ஷை ரஸம் (Wine) குடிக்கின்றீர்களோ?” என்று குறிப்பாகக் கூறினேன்.

அவருக்குச் சிறிது கோபம் பிறந்துவிட்டது. உடனே “அப்படி நீங்கள் நினைப்பது தவறு. என்னுடைய முழுக் கதையையும் கேட்டறியாவிட்டால், நோயின் மூலகாரணத்தைத் தாங்கள் கண்டறிவது கஷ்டந்தான்” என்றார்.

மாடாக்குழியில் மந்தமாய் எரிந்துகொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கைச் சிறிது தூண்டினேன். விளக்கு பளிச்சென்று பிரகாசத்தோடு எரிந்ததும் தவிர அமோகமாய்ப் புகையையும் வெளி

சுதந்திரம் இழந்த ஜாதியார்களின் கண்களிலிருந்து விழும் நீர்த்தாரைகளின் துளி ஒவ்வொன்றும் உயர்ந்த அறிவையும் அனுபவத்தையும் போதிக்கக் கூடியது.

விட்டது. என் உடம்பை ஒரு வேஷ்டியால் நன்கு போர்த்திக்கொண்டு, ஓர் பத்திரிகையால் மூடப்பட்டுக் கிடந்தப் பெட்டி ஒன்றின்மீது அமர்ந்துகொண்டேன். தக்ஷிண பாபு தன் கதையை ஆரம்பித்தார்.

“எனது முதல்தாரம் போன்ற மனைவி—அவளைப் போன்று வேறொருத்தி அகப்படுவது சிரமம். ஆனால் அப்பொழுது நான் மிகவும் இளையோன். இளைஞர்களுடைய மனதைக் காதல் ததும்பும் எண்ணங்கள் மிக எளிதாகக் கொள்ளைகொண்டு விடுகின்றன. மேலும் அல்லும் பகலும் என் வாழ்நாட்களைக் கவிகள் கற்பதிலேயே கழித்துவிட்டேன். அவளுடைய இல்லறம், எனவே, எனது மனதிற்கு அவ்வளவு இன்பத்தைக் கொடுக்கவில்லை. ‘ஓர் மனைவியே இல்லாள்; மந்திரி; ஆப்த சிநேகிதை; நற்கலைகளின் நற்றுணைவி’’ என்ற காளிதாச கவியின் வாக்கியம் என் மனதில் ஒலித்தவண்ணமாயிருந்தது. ஆனால் இவற்றைப்பற்றிய சொற்பொழிவுகள் என் மனைவியிடம் ஓர் விதமாறுதலையும் செய்யவில்லை. என் மனதில் வீர ரஸம் செறிந்து விளங்கும்பொழுது, என் மனைவியைக் காதல் மணம் வீசும் மொழிகளால்—இன்ப ஒளியே! ஊறு சுவையே!—என்றெல்லாம் விளித்துவிட்டால், பக்கென்று அவள் சப்தமிட்டுச் சிரிக்கத் தொடங்கிவிடுவாள். கங்கைப் பிரவாகத்திற்கு முன்னிலையில் இந்திரனுடைய யானை செய்ததுபோன்று, இனிய கவிகளினின்று பொறுக்கி எடுக்கப்பட்ட இன்பக் காதற் சொற்கள், ஆசாபாச வார்த்தைகள், அவளிடம் அதே இழிந்த கதியை அடைந்துவிட்டிருந்தது. அவள் மிக அற்புதமான சிரிக்கும் சக்தி கொண்டிருந்தாள்.

நான்கு வருடங்களுக்கு முன், எனக்கு மிகக் கொடியதோர் சீக்குக் கண்டிருந்தது. எனது மேலுதட்டில் அதிகொடூரமான கடுப்பொன்று ஏற்பட்டிருந்தது. எமதர்மனின் உதடுகளில் நான் அகப்பட்டுவிட்டிருந்ததாகவே சொல்லவேண்டும். நான் சுகம் பெறுவேன் என்று கிஞ்சித்தேனும் நினைக்க இடமில்லை. ஒருநாள் இந்நோய் அதிகமாய்விட்டது. வைத்தியனும் “இனி ஒன்றும் பயன்படாது” என்று கைவிட்டுவிட்டான். பாலத்துச் சோஸியனும் கிரகம் படுத்துவிட்டது என்று சொல்லிவிட்டான். இவ் வபாயகரமான சமயத்தில் உறவினர்களில் ஒருவர் எங்கிருந்தோ சந்நியாசி ஒருவரை என்னிடம் அழைத்துக்கொண்டுவந்து விட்டார். அவர் ஏதோ ஓர் வனமூலிகையை நன்கு பொடி செய்து, அதை நெய்யோடு கலந்து என்னைச் சாப்பிடச் செய்தார். அந்தச் சமயத்தில் நான் பிழைத்தது மறு

இந்திய தேசத்தின் தொன்மை வாய்ந்த சரித்திரங்கள், வீரரின் சரித்திரங்கள், மத உணர்ச்சி, தியாகச் செயல்கள் ஆகிய இவைகள் இன்னும் ஒளிவீசி நிற்கின்றன.

பிழைப்புதான். நான் பிழைத்தது அவருடைய மூலிகையின் சக்தியோ அன்றி என் நல் விதிதானோ?

என் சீக்குக் காலத்தில் என் மனைவி ஒரு கணமேனும் சும்மாயிருக்கவில்லை. அவள்—மிகவும் பலஹீனமாய்—எவ் விடத்தும் அலைந்துகொண்டிருந்த எம தூதர்களோடு இடைவிடாமல், சலிக்காது அமர்புரிந்துகொண்டிருந்தாள். ஓர் தாய் தன் குழந்தையை எங்ஙனம் தன்னிரு கரங்களாலும் மார்போடணைத்துக்கொண்டு காப்பாற்றுகின்றாளோ, அங்ஙனமே தன் காதல், மனம், சாக்கிரதை, இவற்றால் என்னுடைய இப் புல்லிய உடலை அவள் மிக ஊக்கத்தோடு காத்துக்கொண்டிருந்தாள். அவள் ஊண் உறக்கம் தவிர்த்தாள்; உலகிலுள்ள பிறவற்றையும் பார்க்காது விடுத்தாள். தோற்றுவிட்ட புலியைப்போல், சாவு தன் இரையைக் கீழே போட்டுவிட்டு, என்னை அதன் கூர் உகிர்களினின்றும் விடுத்துச் சென்றது. அவ்விதம் என்னைப் பிரிந்த காலத்தில் என் மனைவியைச் சிறிது கண்பார்த்துவிட்டே போயிற்று.

அப்பொழுது அவள் கர்ப்பிணி. அதன்பின் சிறிது காலம் தாழ்த்து ஓர் குழந்தையை ஈன்றெடுத்தனள். அன்று முதல் அவள் பற்பல சிக்கலான சீக்குகளில் சிக்குண்டு அவற்றிற்கு இரையாகிவிட்டாள். எனவே நான் அவளைப் பேணத் துவக்கினேன். ஆனால் இது, ஏற்கெனவே சீக்கால் புண்பட்ட அவள் மனதை மேலும் புண்ணாக்கியது. எனவே ‘என்ன இது? யாராவது பார்த்தால் என்ன சொல்வார்கள்? தயவு செய்து அல்லும் பகலும் இப்படி என்னுடைய அறைக்கு நீங்கள் வராதீர்கள்’’ என்று சொல்வாள்.

நான் எனக்கு வீசிக்கொள்வதுபோல் விசிறியால் அவளுக்கு வீசினால் அப்பொழுது ஓர் காட்சி ஏற்பட்டுவிடும். அவளைப் போஷிப்பதில் என்னுடைய சாப்பாட்டு நேரம் 10 நிமிஷங்கள் போல் அதிகமாகிவிட்டாலும், அவள் படும் பாடு பெரிது. அவளை நான் கொஞ்சம் பேணினாலும் எல்லாம் நேர் விரோதமாகவே முடியும். “ஆண்மக்கள் பெண்டிர்பால் இவ்வளவு தூரம் நடந்துகொள்வது சரியல்ல” என்று அவள் அடிக்கடி ஜபம் செய்துகொண்டிருப்பாள்.

பாரனகூர் என்ற கிராமத்தில் என் வீட்டை நீங்கள் பார்த்திருக்கலாம். என் வீட்டிற்கு முன் ஓர் தோட்டமுண்டு. அதற்கப்பால் தான் கங்கை ஓடுகின்றாள். எங்கள் பள்ளியறைக்கு நேர் கீழ்த்[illegible] புலத்தில் என் மனைவி சிறிது நிலத்தை ஓர் சிறு சோலையாக மாற்றி,

மேன்மையான நோக்கங்களே ஜனங்களை மேன்மைப்படுத்தும். ஜனங்கள் உயர்ந்த நோக்கமுள்ளவர்களாய்த் தங்கள் வாழ்க்கையைப் பரிசுத்தமாகச் செய்துகொள்ள வேண்டும்.

அதற்குத் தாழையை வேலியாக வைத்து வளர்த்தாள். அத் தோட்டத்தின் வேலைப்பாடு மிகச் சாதாரணம்; யாவும் சுதேசி. அங்கு நிறங்கள் ஓர்விதத் தலைமையையும் அடைந்துவிட் டிருக்கவில்லை. சிறு தொட்டிகளில் வளரும் நாகரீகச் செடிகளும் கிடையா. பிச்சி, மல்லிகை, காந்தராஜ், ரோஜா, நந்தியாவட்டை, பன்னீர்ப் புஷ்பம் ஆகிய இவைகளே அங்கு தனி அரசு செலுத்தியவை. மேலும் அங்கு பெரியதோர் சந்தன மரமுமுண்டு. அதன் அடி பளிங்கியால் பதிக்கப்பெற்றுக் கவினுடன் இலங்கிற்று.

கோடைகாலத்தில் சாயங்காலங்களில் வீட்டில் வேலையில்லாத சமயங்களில் இங்கு வந்து அமர்ந்துகொண்டு, கங்கையின் களியாட்டங்களையும், அதன் தூய திருமேனியையும் கண்டு களிபேருவகை பூப்பது அவள் வழக்கம். படகுகளில் கங்கை வழியாகச் செல்லும் ஆபீஸ் குமாஸ்தாக்கள் இவளைக் காணமாட்டார்கள்.

வசந்த காலம். அந்திப்பொழுது. வானில் சந்திரன் சுகுமாரனாக மந்தஹாஸம் செய்கின்றான். நெடுநாட்களாய்ப் படுத்த படுக்கையிலேயே கிடந்து உழன்றுகொண்டிருக்கின்ற அவள், வீட்டினுள்ளே படுத்துக்கொண்டிருப்பது தனக்கு மிகவும் அருவருப்பா யிருப்பதாயும், எனவே தன்னுடைய தோட்டத்திற்குப் போகவேண்டுமென்றும் என்னிடம் கூறினாள்.

வெகு ஜாக்கிரதையுடன் அவளை மெதுவாக என்னிரு கைகளாலும் தூக்கிச் சென்று, தோட்டத்தில் அவள் மனதிற்குகந்த பளிங்கு பதித்த இடத்தில் படுக்கவைத்தேன். நான் அவள் தலையை என் மடிமீதே வைத்துக்கொண்டு இருந்திருப்பேன். ஆனால் அவளுக்கு அது புதிதாகப் படும் என்பதை நான் நன்கறிவேன். ஆகையால் அவள் தலைக்கடியில் தலையணை ஒன்றை வைத்தேன்.

நன்கு மலர்ந்த சந்தனப் புஷ்பங்கள் ஒவ்வொன்றாய் உதிர்ந்தன. சந்திர ஒளி, மரக்கிளைகளினூடே எட்டிப் பார்த்துக்கொண்டு, என் மனைவியின் மெலிந்த நுதலில் விழுந்தது. நிசப்தம். நிசப்தமே உருப்பெற்று சாக்ஷாத்காரமாக விளங்கியது அவ்விடம். அன்று மலர்ந்த நறுமலர்களின் நறுமணம் அங்கு கம்மென வீசிற்று. அவள் பக்கத்தில் நான் உட்கார்ந்துகொண்டு அவள் நெற்றியை நோக்கியவண்ணமா யிருந்தேன். என்னை யறியாதே என் கண்களினின்று விழிநீர் பெருகி ஓடலாயது. மெதுவாக அவளை அணுகி,

---

தேச சுதந்திரத்திற்காக ஏற்படும் போராட்டங்களிலும் மனித சங்கத்தின் அபிவிருத்திக்காக வுண்டாகும் இயக்கங்களிலும் ஐக்கியம் ஒன்றே பிரசன்னமா யிருப்பதால், அந்த ஐக்கியமின்றி சேர்க்கையும் அபிவிருத்தியும் உண்டாகா.

மெலிந்து, அசக்தியாய்க் கிடந்த அவளுடைய கையொன்றை என்னிரு கைகளாலும் வாரி எடுத்தேன். இதை அவள் எதிர்த்தாளில்லை. இந் நிலையில் நான் சிறிது மோனமாக இருந்தபின் என் உளம் கரைந்தோடியது; உடனே நான் "உன் காதலை நான் என்றும் மறவேன்" என்று கத்திவிட்டேன்.

அடுத்த கணத்தில் இவ் வார்த்தைகள் வேண்டா விருந்தென நான் அறிந்துகொண்டுவிட்டேன். என் மனைவி பக்கென்று சிரிக்கத் துவக்கிவிட்டாள். அச் சிரிப்பில் ஓர்வித நாணம், இன்பம், சிறிது வசை—அதிகமான அளவில்—காணப்பட்டது. நான் கூறியதற்கு எதிர்ப்பாக அவள் ஓர் வார்த்தையும் கூறிலள். ஆனால் நான் அவளை மறக்கமுடியாது என்பது அசாதாரணமென்றும், மேலும் அதை அவள் விரும்பினாளில்லை என்றும் அச் சிரிப்பு ஒன்றினாலேயே எனக்கு நன்கு உணர்த்திவிட்டாள்.

இன்பமாய்க் குடைந்து செல்லும் என் மனைவியின் இவ் வஞ்சப் புன்முறுவலுக்குப் பயந்தே நான் அவளோடு காதல் புரியும் வார்த்தைகள் வளர்க்கத் துணிவதில்லை. அவள் இல்லாத சமயம் என் மனதில் சாடியவை யெல்லாம் அவள் முன்னிலையில் சுத்த வழவழாவாக மாறிவிடுகின்றன. படிக்கும்பொழுது குடம் குடமாகக் கண்ணீரை வெளிக் கொணருமாறு அச்சிடப்பட் டிருப்பவை, அவைகளை நாம் சொல்ல விரும்பும்போது மாத்திரம் நகைப்பைத் தருகின்றன என்பதற்கு இன்னும் தக்க காரணம் எனக்குப் புலப்படவில்லை. ஓர் சொற்பொழிவை எதிர்க்கவோ, மாற்றவோ முடியும்; ஆனால் சிரிப்பை அவ்விதம் செய்வது எளிதன்று. எனவே அதன் பயனாக நான் வாய் மூடி மௌனியாக விருக்க வேண்டியது ஒருதலை. சந்திர ஒளி வர வர அதிகமாகிக்கொண்டே வருகின்றது. ஓர் கோகிலப் பக்ஷி 'கூ...... கூ......' என்று இடைவிடாது கத்தியவண்ணமா யிருக்கின்றது. இப் பெற்றித்தாய சந்திரிகை இரவில் அப் பக்ஷியின் இணை செவிடுபட்டதோ என்னவோ என்று நான் அலைந்து திரிய ஆரம்பித்துவிட்டேன்.

நெடுநாள் சிகிச்சையாலும் அவள் நோய் தீருவதற்குரிய சின்னங்கள் ஒன்றையும் காணோம். சற்று மாறுதலான சீதோஷ்ணம் உசிதமென வைத்தியர் உபதேசித்தார். நான் அலஹாபாத்திற்கு எடுத்துச் சென்றேன் என் மனைவியை."

உங்கள் சகோதரர்களுக்கு வழிகாட்டியாக இருப்பதை விட்டு விட்டு, அவர்களுக்குச் சேவை செய்யுங்கள். வழிகாட்ட வேண்டுமென்னும் கொடிய பைத்தியமே பெருந் தலைவர்களைக் கூட பல தருணங்களில் கெடுத்துக்கொண் டிருக்கிறது.

தக்ஷிணபாபு ஏதோ பிரேமை கொண்டவர் போல் பளிச்சென்று இத் தருவாயில் கதைக்கு ஓர் நிறுத்துப் புள்ளி யிட்டுவிட்டார். என்னை ஏதோ ஐயப்பாடுடன் நோக்கிவிட்டு, முகத்தைத் தன்னிரு கைகளில் புதைத்துக்கொண்டு பழைய நிகழ்ச்சிகளை நினைந்து நினைந்து சிந்தை நைந்துருகினார். நானும் மௌனமா யிருந்துவிட்டேன். மாடாக்குழியிலுள்ள விளக்கு சிறிது மங்கின ஒளி தந்து எரிந்துகொண்டிருந்தது. அதைச் சுற்றி கொசுக் கணங்கள் கீதம்பாடிய வண்ணமா யிருந்தன. நிசப்தமான அவ்வறையில் இக் கொசுக் கீதம் தீர்க்கமாகக் கேட்டது. ரீங்கார ராகத்தை மூக்காலத்திலும், கமகம், ஆரோஹணம், அவரோஹணம் முதலியவற்றையெல்லாம் சேர்த்து சஞ்சாரம் செய்த வண்ணமா யிருந்தன அவை. இராகம் நின்றபாடில்லை; சென்றவண்ணந்தான். கொசுப் பாகவதர்களுடைய சாரீரம் இரும்பினால் செய்தது போலும். சாரீரம் சிக்குவதே கிடையாது. பட்டென அந் நிசப்த அரக்கனின் அண்டத்தைப் பிளந்து கொண்டு ஓர் ஒலி கேட்டது. என்ன? தக்ஷிணபாபு தன் கதையை மேல் நடத்திச் செல்கின்றார்.

“அலஹாபாத்தில் டாக்டர் ஹாரன் அவளைச் சிகிச்சை செய்து வந்தார்

இவ்விதமாக நீண்ட காலம் பறந்துவிட்டது. இறுதியில் டாக்டர்—அதை நானுமறிவேன்; என் மனைவியும் எப்படியோ உணர்ந்துகொண்டுவிட்டாள்—அவள் நோய் தீரா நோயென்றும், மீதி நாட்களை ஒன்றுக்கு முதவா கழிசிறையாகவே அவள் கழிக்க வேண்டுமென்றும் கூறிவிட்டார்.

அதன் பின் ஓர் நாள் அவள் தன் நோய் குணப்பட ஓர்வித சின்னத்தையும் காணுகிறதாலும், சீக்கிரத்தில் தான் இறந்துபடவு மாட்டாளாதலாலும்—எத்தனை நாட்கள் இருந்தும் இறந்தவளான அவளை வைத்து நான் காலம் தள்ள?—என்னை இரண்டாம் தாரம் கட்டிக்கொள்ள வேண்டினாள்

உண்மையில் அது ஓர் நல்ல புத்திமதியே தவிரவும் அது நல்ல தீர்ப்பு. இதை அவள் கூறும் பொழுது அவளிடம் அசாதாரணமாக ஒன்றும் புலப்படவில்லை.

இப்பொழுது சிரிக்க வேண்டியது என் முறை. ஆனால் எனக்குச் சிரிக்கும் சக்தி உண்டா? நான் ஓர் நவீனத்தில் தலைமகன்

தொழிலாளர்கள் வறுமையினால் அவதிப்பட்டுக்கொண் டிருக்கையில். அவர்களுக்கு உபதேசம் செய்வது பசிப்பவனுக்கு அன்னமளிக்காமல் கல்லைக் கொடுப்பது போலாகும்.

போன்று, கம்பீரமாகக் கூறுவேன். “என் உயிர் உள்ளளவும்! என் கட்டி யமுதே!..................”

என்னை மேல் பேசவொட்டாது தடுத்து அவள் பேசினாள். “இதோ இங்கே வாருங்கள். தாங்கள் ஏன் அப்படியே பறக்கின்றீர்கள்? உங்கள் வார்த்தைகள்..............”

என் தோல்வியை நான் ஒத்துக்கொள்ளாது “இப் பிறவியில் நான் வேறொருவரையும் காதல் புரிய என் மனம் இசையாது” என்று கூறிவிட்டேன். உடனே என் மனைவியின் வாய் பட்டென வெடித்துவிட்டது! வாய் வெடித்தா விட்டது? சிரிப்பு. நான் இதோடு பேசாது நிறுத்திக்கொள்ள நேர்ந்துவிட்டது.

அன்று இதை நான் ஒப்புக்கொண்டேனோ என்னவோ? ஆனால் இப்பொழுது எனக்கு அவளைப் பேணுவதில் அளவற்ற வெறுப்பு. ஏன்? எத்தனை நாட்கள் சிகிச்சை செய்தும் தீரா நோயாளியை வைத்துக்கொண்டு எப்படித் துன்புறுவது! அவளை விட்டு நான் பிரிந்துவிட வேண்டுமென்ற இழிவான எண்ணத்தின் வெளியீடல்ல இது. இருப்பினும் ஒன்றுக்கும் உதவாதவளை வைத்து நான் காலம் தள்ள வேண்டுமென்பதை எண்ணும்போதே அப்பா! என்ன வேதனையாயிருக்கின்றதடா! அந்தோ! என் பசும் பிராயத்தில் என் கண்கள் முன் தோன்றிய உலகம் காதலின் மாயையோடு உவகை யூற்றும் அழகுக் கானலும் கொண்டு எத்தனை களிப்போடு, எத்தனை முக மலர்ச்சியோடுத் திகழ்ந்தது. இனிமேல் வரும் நாட்களெல்லாம் ஓரே பரந்த, மருண்ட, பாழ்பட்ட சுடு சுரம்!

உண்மையாக என் போஷணையில் இவ்வக வெறுப்புக் கலப்பை அவள் அறிந்துகொண்டு விட்டாள். இதை முன்பு நானறியேன். ஆனால் பாலர்கள் அக்ஷரங்களை வாசித்து விடுவதைப் போன்று அவள் இப்பொழுது என் மனதைப் படித்துவிடுவாள் என்பதில் எனக்குக் கடுகளவேனும் சந்தேகமில்லை. ஆகையால் நான் தலைமகன் போல நடித்து அவள் கூற்றை விசித்திரமாக எதிர்க்கும்போழ்து நுணுகிய பாசத்தாலும் அடக்க முடியாத தமாஷாலும், அவள் சிரித்துவிடுவாள். இதய சோதனைக்காரன் போன்று, எனக்கு அவை தெரியாதிருப்பினும், அவள் என் உள் அந்தரங்கமான எண்ணங்களை அறிந்துகொள்ளக்கூடும் என்று நான் இன்றும் நினைத்து விட்டால் வெட்கத்தால் அநேகமாய் இறந்தே போவேன்.

டாக்டர் ஹாரன் என் வருணத்தைச் சேர்ந்தவர். அவர் அடிக்கடி என்னை தன் வீட்டில் சாப்பிட அழைத்திருக்கின்றார். அவரை

கடவுள் வழிபாட்டுக்குரிய சாதனங்களில் முக்கியமானது பிரார்த்தனை.

அநேக தடவைகள் போய்ச் சந்தித்ததின் பின், என்னை அவர்தன் மகளுக்கு அறிமுகப்படுத்தினார். அவள் ஓர் கன்னிகை—15 வயதிற்குள்தானிருக்கும். நல்ல மணமகன் வாய்க்காத குற்றத்தினால் அவளை அப்பொழுது மணம் முடித்துக் கொடுக்காது இருந்தார். இப்படி டாக்டர் ஹாரன் கூறினார் ஆனால் வெளியில் அக் குடும்பத்தினால் ஏதோ ஓர் குற்றமிருப்பதாக வதந்தி உலாவிற்று.

வேறொரு குற்றமும் கிடையாது. அவள் கல்வி கேள்விகளில் பூர்த்தி பெற்றிருந்ததிற்கு ஒப்ப அழகிலும் பூர்த்தி பெற்றிருந்தாள். சில சமயங்களில் அவளோடு பல விஷயங்களைப் பற்றி பேசிக்கொண்டிருப்பேன். பேச்சில் நேரமதிக மாகிவிடு மாதலால், வீட்டிற்குத் திரும்பி வரும்போது அதிக நாழிகையாகவே, என் மனைவிக்கு மருந்து கொடுக்க வேண்டிய காலம் கழிந்துவிடும். நான் ஹாரன் டாக்டர் வீட்டுக்குத்தான் சென்றிருந்தேன் என்று அவள் அறிவாள். எனினும் காலம் தாழ்த்து நான் வந்ததற்குக் காரணத்தை அவள் கேட்டாளில்லை.

மறுபடியும் பாலையின் நடுவே ஓர் கானலைக் காண ஆரம்பித்தேன். என்னுடைய உயிர் நீர் வேட்கையால் திண்டாடிக் கொண்டிருக்கும் சமயத்தில், என் கண்கள் முன் பளிங்கு போன்று ஓடு நீர் மின்னிக் குமிழ்த்தது. எனது முழு முயற்சியாலுங் கூட எனது மனதைத் திருப்ப முடியவில்லை.

நோயாளியின் அறையில் முன்னினும் இரு மடங்கு அதிகமாகத் துக்கதேவி தாண்டவமாடினாள். போஷணை, மருந்து கொடுத்தல் முதலியவற்றில் ஒழுங்கீனங்கள் தொத்திவிட்டன. குணமாகா நோயை யுடையவர்கள் இருப்பினும் இறக்கலே நலமென ஹாரன் என்னிடம் கூறுவார். ஏனெனில் அவர்கள் வாழ்தலினால் தாங்கள் சுகம் பெறுவதும் கிடையாது. பிறர்க்கு கஷ்டமாயு மிருக்கின்றனர்;

ஒரு நாள் பக்கத்து அறையில் என் மனைவியும் டாக்டரும் பேசிக்கொண்டிருந்ததை நான் ஒற்றுக் கேட்க நேர்ந்தது. அவள் கூறுவாள், 'டாக்டரே! என்னை ஒன்றுக்கு முதவா மருந்துகளைச் சாப்பிடச் செய்து என் வீணை மருந்து வியாபாரியின் பட்டியைக் (Bill) கனப்படுத்துகின்றீர்! என்னுடைய உயிரோ ஓர் வியாதியாயிருக்கும் போழ்து, அதற்கு ஓர் துரித முடிவு உண்டாக்க என் எனக்குத் தாங்கள் அத்தகைய ஔஷதம் ஒன்றைத் தரலாகாது?''
''வெட்கமில்லையா? இவ்விதம் இனிப் பேசாதேயுங்கள்'' என்று டாக்டர் இடித்துரைத்தார்.

எளிய கிராமத்தார்களுக்கு நீங்கள் தொண்டு செய்யாவிட்டால், நீங்கள் கற்ற கல்வியால் என்ன பயன்?

இவ் வார்த்தைகள் என் மனதில் மின்஬ாரம் போன்ற வேகத்தைப் பரப்பியது. டாக்டர் சென்ற பிறகு, நான் என் மனைவியின் அறையுட் புகுந்தேன். அவள் படுக்கையில் அருகே உட்கார்ந்து கொண்டு, என் கைகளால் அவளுடைய தலையைத் தடவலானேன். உடனே அவள் தன் பாணத்தைப் பிரயோகிக்க ஆரம்பித்து விட்டாள். ''இங்கு மிகவும் உஷ்ணமாயிருக்கின்றது. தாங்கள் இப்படி வெளியே சென்று வந்தால் நன்றாயிருக்கும். இப்படி........போய் வாருங்கள். இல்லாவிடின் சாப்பாட்டிற்கு ருசியின்றிப் போய் விடும்.''

வெளியே போவது என்பதில் முக்கிய கருத்து டாக்டர் வீட்டிற்குச் செல்வது தான். ''நன்கு பசியெடுக்க வேண்டுமானால் சிறிது தூரம் நடந்துவிட்டு வரவேண்டும்'' என்று நான்தான் அவளுக்கு ஒரு முறை கூறினேன்.

இவ்விடத்தில் தக்ஷிணபாபு தலையைத் தன் கைகளால் தாங்கி மோன விரதம் மேற்கொண்டு பேசாது ரொம்ப நேரம் அப்படியே இருந்துவிட்டார். இறுதியாக அவர் ஜலம் கேட்டார். கொடுத்தேன். அவர் அதைக் குடித்துவிட்டு தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

''ஓர் நாள் டாக்டரின் குழந்தை மனோரமா என் மனைவியைப் பார்க்க வேண்டுமென்று என்னிடம் கூறினாள். எதற்கு என்று நானறியேன். ஆனாலும் இத் தீர்மானம் எனக்கவ்வளவு இன்பத்தை அளிக்கவில்லை. ஆனால் இதை மறுத்துரைக்க தக்க காரணம் கூற என்னால் இயலவில்லை. ஓர் நாள் சாயந்திரம் அவள் என் வீட்டிற்கு வந்தாள்.

அந்தச் சமயம் என் மனைவிக்கு வலி அதிகமாய் ஏற்பட்டிருந்தது. அதிக வலி ஏற்பட்ட சமயங்களில் என் மனைவி சலனமற்று, பேச்சற்றுக் கிடந்து விடுவாள். அவளுடைய குவிந்த கைகளினின்றும், சிவந்த முகத்தினின்றும் அவள் கஷ்டத்தை அறிந்துகொண்டு விடலாம். ஆவலைக் கிளப்பக்கூடிய தொன்றுமில்லை அவ்வறையில். படுக்கையின் பக்கத்தில் நான் கட்டை போன்று உட்கார்ந்திருந்தேன். என்னைச் சிறிது உலாத்திவிட்டு வரச்சொல்ல அவளுக்கின்று போதிய சக்தி யில்லை. அவளுடைய அதி கஷ்டமான சமயத்தில் என்னை அவள் பக்கத்திலிருக்க விரும்பினாளோ என்னவோ?

வல்லமை உள்ளவனிலோ, இல்லாதவனிலோ, மேன்மக்களிலோ, கீழ் மக்களிலோ எவரிடத்தும் அகண்ட எல்லையற்ற ஆத்மா நிறைந்திருக்கிறது.

அவள் கண்களைக் காக்க மண்ணெண்ணெய் விளக்கை கதவின் பின்புறம் வைத்திருந்தேன். அறையில் எங்கும் இருட்டு; நிசப்தம். வலி இல்லாத சமயம் அவளுடைய 'கர்புர்' என்ற சுவாசமே அவ்வறையின் நிசப்தத்தைப் பிளந்துகொண்டு ஒலித்தது.

இந்த சமயம்தான் மனோரமா எங்களறைக் கதவின் முன் வந்து நின்றாள். எதிரேயுள்ள தீபத்தின் ஒளி அவள் முகத்திற்கு நேராக அடிக்கவே அவ் வொளியில் அவள் கண்கள் குருடுபட்டன. எனவே சிறிது நேரம் வரை அறையுள் என்ன நடந்தேறுகின்றது என்பதைக் கண்டறிய அசக்தளானாள். எனவே நுழைவதற்குத் திகைத்து நின்றுவிட்டாள்.

என் மனைவி திடுக்கிட்டுப் போய் என் கையைப் பிடித்துக் கொண்டு, அங்கிருப்பது யாரென வினவினாள். மிகவும் பலஹீனமான நிலையில் அவள் யாரோ ஓர் அந்நியரைப் பார்த்துவிட்டு மருண்டு மிக்க துணிந்த குரலில் "யாரவள்? யாரவள்? யாரவள்?" என்று இரண்டு மூன்று தடவைகள் என்னைக் கேட்டனள்.

எனக்குத் தெரியாதென்று நான் முணுமுணுத்தேன். அடுத்த கணம் என் சதையுள் ஓர் கத்தி பாய்வது போன்று என் மனம் என்னைக் கொட்டி வேதனை செய்தது. உடனே நான் சொல்லேன் "நல்லது! அவள் டாக்டர் ஹாரன் புதல்வி" என்று.

என் மனைவி என் முகவாய்க் கட்டையை ஓர் முறை பார்த்தாள். என்னால் அவள் முகத்தைப் பார்க்க இயலவில்லை. ஏன்? வெட்கம்! வெட்கம்! அடுத்த க்ஷணம் அவள் தழுதழுத்த குரலில் டாக்டர் புதல்வியை வரவேற்றாள். விளக்கை மேலே தூக்கி வைக்கும்படி என்னை யவள் வேண்டவே, அவ்விதமே செய்தேன் நான்.

மனோரமா அறையுள் நுழைந்தாள்; ஓர் ஆசனத்தில் அமர்ந்தாள். இவர்கள் இருவர் இடையும் பல சம்பாஷணைகள் நிகழ்ந்தன. இதே சமயத்தில் அங்கு நம் டாக்டரும் வந்து சேர்ந்தார்.

அவர் வரும்பொழுது தன்னோடு இரண்டு புட்டிகளில் ஔஷதம் கொண்டு வந்தார். அவற்றை அங்கு வைத்துவிட்டு என் மனைவியிடம் மேல் வருமாறு கூறினார். "அம்மணி! அந்த நீல புட்டியிலிருப்பது புறத்தே பூசிக்கொள்வதற்கு. மற்றதிலுள்ளது உள்ளே சாப்பிடுவதற்கு" "மேலும் தவறிக்கிவறி நீலப் புட்டியிலுள்ளதை

கோவில்கள் கட்டுவதற்காகவும், நைவேத்தியங்களுக்காகவும், திருவிழாக்களுக்காகவும் செலவு செய்யும் பொருள்களை ஏழையான உயிருள்ள தெய்வங்களின் உணவுக்காக உபயோகப்படுத்துங்கள்.

உள்ளே எடுத்துக்கொள்ளக் கூடாது. அது மிகக் கொடூரமான பாஷாணம்" என்று அவருக்கு எச்சரிக்கை கொடுத்தார்.

இவ் விஷயத்தைக் குறித்து என்னிடமும் நன்கு எச்சரிக்கை செய்தார். டாக்டர் தான் அவ்விடத்தை விட்டு அகல்வதன் முன் தன் குழந்தையையும் வீட்டிற்கு அழைத்தார்.

"அப்பா! நான் இங்கு இருக்கலாகாதா? இங்கு இந் நோயாளியைப் பார்த்துக்கொள்ள ஒரு பெண்மகளாவது இல்லையே" என்று மனோரமா தன் தந்தையிடம் கூறி வேண்டினாள்.

இது என் மனைவிக்குப் பொறுக்க முடியவில்லை. உடனே தனக்குத் தாய் போன்று ஓர் வேலைக்காரி அங்கு இருப்பதால், அவள் (மனோரமா) தனக்காக கஷ்டப்பட வேண்டாமென்றும் என் மனைவி கூறிவிட்டாள்.

டாக்டர் ஓர் புன்முறுவல் பூத்து விட்டு தன் மகளோடு அறையை விட்டுப் போக அடியெடுத்து வைத்தார். அப்பொழுது என் மனைவி 'டாக்டர்! பக்கத்து அறையிலேயே இவ்வளவு நேரம் உட்கார்ந்துகொண்டிருந்தாய் விட்டது என் கணவர். தயவு செய்து உலாவ அவரையும் அழைத்துச் செல்லுங்கள்' என்றாள். இதனைக் கேட்ட ஹாரனும் ஆற்றோரமாக உலாத்திவிட்டு வரலாமென்று என்னையும் தன்னோடு கூட்டிச் சென்றார்.

போகும்போது கூட இரண்டு புட்டி மருந்துகளையும் சாக்கிரதையாக உபயோகிக்கவுமென்று மறுபடியும் என் மனைவியை எச்சரித்துவிட்டே சென்றார் டாக்டர்.

அன்றிரவு நான் டாக்டர் வீட்டில் தான் உணவு அருந்தினேன். எனவே என் வீடு திரும்புவதற்கு நெடு நேரம் பிடித்தது. வீடு வந்து பார்த்ததில் என் மனைவி படுக்கையில் அங்கு மிங்கும் புரண்டு கொண்டிருப்பதைக் கண்டேன். ஐயோ! வருத்தத்தால் விழுங்கப்பட்ட நான் 'வலி அதிகமாயிற்றோ?' என அவளைக் கேட்டேன்.

அவளால் விடையளிக்க இயலவில்லை. ஆனால் என்னை அவள் தன் தலை அசைப்பால் வரவேற்றாள். நாவலிமையை அவள் இழந்து விட்டாள்.

உடனே நான் டாக்டரை அழைத்து வர ஓர் ஆளை அனுப்பினேன். முதலில் நெடுநேரம்வரை விஷயத்தை அறிந்தாரில்லை டாக்

எளியவர்களோ பாடசாலைகளுக்குப் போவதற்கு மிகவும் இயல்பு குன்றியவர்களாயிருக்கின்றார்கள். அவ்வாறு போவரேனும், கல்வி முதலிய படிப்பால் அவர்கள் அடையப் போவது யாதுமில்லை.

டர். கடைசியாக "வலி அதிகமாகிவிட்டதோ? அதிகமாகிவிட்டால், அந்த நீலப் புட்டியிலுள்ள தைலத்தைத் தடவுகிறதுதானே" என்று சொல்லிக்கொண்டே மேஜையின் மீதிருந்த நீல புட்டியை எடுத்தார். என்ன ஆச்சரியம்! குப்பி வெறும் குப்பியாயிருக்கின்றது! தைலம் ஒரு சொட்டுக்கூட அதில் கிடையாது! 'அத் தைலத்தை உட்கொண்டுவிட்டீர்களா?' என்று என் மனைவியை வினவினார் டாக்டர். அதற்கென் மனைவியும் தன் தலையசைப்பால் 'ஆம்' என்பதை உணர்த்திவிட்டாள்.

டாக்டர் நெஞ்சு துடிக்க, பதறியடித்துக்கொண்டு 'வயிற்றுக் குழாயை' எடுத்துவரத் தன் வீட்டிற்கு ஓடினார். நான் சுயபுத்தி அற்று என் மனைவியின் படுக்கையருகே போய் விழுந்து புரண்டேன். பின் ஓர் தாய் தன் துக்கம் மிகுந்த குழந்தையை அமத்துவதுபோன்று, அவள் என் தலையைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு, தன் கைகளின் ஸ்பரிசத்தால் தன் எண்ணங்களை எனக்கு ஊட்டினாள். அவள் தன் கைகளின் தீண்டுதலால் "வருத்தப்படாதீர்கள்; நான் போவது தங்களுடைய நலத்தை நாடியே. தாங்கள் சந்தோஷமடைவீர்கள். அந்த நினைவோடேயே நானும் சந்துஷ்டிதையாகச் செல்கின்றேன்" என்று பன்னிப்பன்னிச் சொல்வதுபோன்றிருந்தது.

டாக்டர் திரும்பி வந்தபொழுது அவளுடைய துன்பங்களெல்லாம் அவளுடைய ஆயுசோடு முடிவடைந்து விட்டது.

பின் சிறிது ஜலம் குடித்துக்கொண்டு தக்ஷிண பாபு இங்கு மிகவும் உஷ்ணமாயிருக்கிறதென்று கூறிக்கொண்டு தாழ்வாரத்திற்குச் சென்று, அங்குமிங்கும் உலாவித் திரிந்துகொண்டிருந்தார். கதையை மேல் சொல்ல விருப்பமில்லை என்பதை பாபுவின் முகமே வெளியிட்டது. எனினும் நானதை ஏதோ ஓர்வித சக்தியால் அவரை வெளியிடும்படி செய்வதுபோன்று மறுபடியும் வீட்டிற்குள் வந்து உட்கார்ந்துகொண்டு கதையைத் தொடர்ந்தார்.

"அதன்பின் மனோரமாவை மணம் செய்துகொண்டு நான் என் ஊர் வந்து சேர்ந்தேன்.

தன் தந்தையின் சம்மதத்தின் பேரில்தான் மனோரமா என்னைக் கலியாணம் செய்துகொண்டாள். நானவளோடு மதுர சல்லாபங்கள்

நமது நாட்டின் உயிர் நாடியை நாம் இழந்தமையால், சிறுமையும் வறுமையும் இந்தியா அடைவதாயிற்று. நமது நாட்டின் இழந்த உயிர் நாடியை நீர் பாய்ச்சி வளர்த்து, பாமர ஜனங்களை உயிர்பெற்றெழச் செய்ய வேண்டும்.

செய்து, காதல் வார்த்தைகளைக் கூறும்பொழுது அவள் ஓர் புன்னகையாவது காட்டவேணுமே! ஏதோ மந்தமாக வீற்றிருப்பாள். அவள் மனதின் ஓர் மூலையில் ஊசலாடிக்கொண்டிருந்தது என்ன ஐயப்பாடு என்பதை நான் எவ்விதம் அறிந்துகொள்ள?"

"இது நடந்தேறும் காலத்தில் எல்லாம் நான் பலே குடிகாரனாகிவிட்டேன். கூதிர்காலம். அந்திப்போது. பாரணகூர் எங்கள் சோலையில் மனோரமாவோடு நான் உலாத்திக்கொண்டிருந்தேன். இரவு தன் கரிய முந்தானையால் உலகைப் போர்த்திக்கொண்டு வரும் சமயம். 'கீச்'சென்ற சப்தம்கூட அங்கு கிடையாது. பறவைகள் இறகுகளை இருபுடையும் அடித்துக்கொள்ளும் ஒலிகூடக் கேட்கவில்லை. நிசப்தம். சோலைக்குள் செல்லும் பாதையில் வளர்ந்தோங்கிய ஆலமரங்களினூடே காற்று சென்று, ஏதோ காதல் கனிந்த மொழிகளைக் கதைக்கின்றது.

இளைத்துப்போய் மனோரமா சந்தன மரத்தடியில் பதித்துள்ள பளிங்கு விரிப்பில் சாய்ந்தாள். நானுமவள் பக்கத்தில் அமர்ந்தேன் இங்கு அந்தகாரம் செறிந்து விளங்கிற்று. மரக் கிளைகளினிடை வழிகளினூடே கண்ணுச்குப் புலப்படுகின்ற வான வளையத்தின் ஓர் பாகம் நக்ஷத்திரங்களால் தூவப்பட்டிருந்தது. சில வண்டுகள் மரங்களினடிகளில் 'கீச்சுக் கீச்'சென்று கத்துகின்றன. இவ்விதம் சப்தம் செய்யும்போது அவை, அந் நிசப்த பூமியில் 'கீச்சுக் கீச்' செனும் மெல்லிய சப்தக் கயிறுகளால் ஓர் வலை பின்னுவது போல் தோன்றிற்று.

அந்த அந்திப் பொழுதில் நான் சிறிது திராக்ஷை ரசம் உட்கொண்டிருந்தேன். எனவே என் மனது வாயு லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. அக் கரிய இருட்டில் இம் மெல்லியலின் மெல்லிய மேனியை எனது கண்கள் கண்டதும் என் மனதில் ஏதோ ஒருவித அடங்கலில்லா ஆர்வத்தைக் கிளர்த்தது. அவள் ஒரு நிழலென்றும் அவளை என் கைகளால் கட்டியணைத்துவிட முடியாதென்றும் நான் நினைத்தேன்.

அப்பொழுது ஆலமரங்களின் உச்சிகள் எரிவன போன்று எனக்குப் புலப்பட்டன. அப்பொழுதுதான் தேய்பிறைச் சந்திரன் தன் ஒளிக் கரங்களை எங்கணும் நீட்டிக்கொண்டு மர உச்சிகளுக்கு

வாலிபர்களே! எதிர்கால இந்தியா உங்கள் வசம் இருக்கிறது. பனியால் நனைந்து, பசியால் வாடி, தாழ்மையாலும் ஒடுக்கத்தாலும் உலரும் 6 கோடி ஹரிஜனங்களின் வறுமையையும் அறியாமையையும் ஒழிப்பதற்குப் பாடுபடுங்கள். அவர்களும் உங்கள் சகோதர சகோதரிகள் என்பதையும் மறக்க வேண்டாம்.

மேல், விண்ணில் மேன் மேலும் இவர்ந்து வந்து கொண்டிருக்கின்றான். பனி போல் வெளுத்திருக்கும் பளிங்கு விரிப்பில் களைப்பால் சாய்ந்திருக்கும் வெள்ளைக் கலை யணிந்த பெண்ணின் முக கமலத்தின் மீது ஒளி மிக்கத் தன் கிரணங்களை தண்மதி பொழிகின்றான். இனி ஒருக்கணமேனும் என்னால் பொறுக்க முடியாது. அவளருகே சென்றேன். என் கைகளில் அவளுடைய கரங்களை வாரி எடுத்துக் கொண்டு "மனோரமா! நீ என்னை நம்பாமலிருக்கலாம். ஆயினும் நானுன்னை மனமாரக் காதலிக்கின்றேன். உன்னை ஒருக்காலும் என்னால் மறக்க முடியாது. இது உண்மை. வெறும் வார்த்தையல்ல." என்று கூறினேன்.

இவ் வார்த்தைகளை நான் கூறினேனோ இல்லையோ எனக்கு பகீரென்றது. என்ன? முன்னொருதரம் இதே வார்த்தைகளை மற்றொருத்தியிடம் கூறியுள்ளது என் ஞாபகத்திற்கு வந்துவிட்டது. அந்த க்ஷணம் சந்தன மரங்களின் கிளைகளுக்கு மேலே, ஆலமரங்களின் உச்சிகளுக்கு உயரே, வெளுத்த பிறை மதியின் கீழ், கங்கை நதியின் இந்த கீழ் பக்கமிருந்து, அதோ தெரிகின்ற அந்த மேல் பக்கம் வரைக்கும் 'கீச்'சென்று சிரிப்பின் சப்தம் கிழித்துக் கொண்டு சென்றது. அது மனதைப் பிளக்கும் சிரிப்போ, அன்றி வானத்தைக் கிழிக்கும் துன்பப் பேரிரைச்சலோ? யாதென நானறியேன். அந்த க்ஷணமே பளிங்குப் பதிப்பிலிருந்து நான் கீழே விழுந்துவிட்டேன்—மயக்கமானேன்.

நான் சுய புத்தி யடைந்ததும் என்னறையில் படுக்கையில் படுத்திருப்பதை உணர்ந்து கொண்டேன். பனிச்சென்று நான் மயங்கி விழுந்ததின் காரணத்தை வினவினாள் மனோரமா. "வானத்தைக் காட்டுச் சிரிப்பொன்று பிளந்துகொண்டு சென்றதை நீ கேட்கவில்லை?" என்றேன் நான்.

மனோரமா மந்த நகை அரும்பினள். அது பறவைக் கணமொன்று சிறகடித்துக் கொண்டு வான வெளியில் செல்லும் போது உண்டான ஒலி யென்றும், அதற்குப் பயந்து மயங்கிய என்னைப் பேடி என்றும் கேலி பண்ணத் துவக்கிவிட்டாள் என் மனைவி.

பகற் பொழுதில் அச் சப்தம் பறவைகளின் சிறகடிப்பால் உண்டாகும் ஒலி என்று முற்றும் தெளிந்திருந்தேன் நான். ஒவ்வொரு வருடமும் அக் காலத்தில் நாரைக் கூட்டங்கள் வடக்கிருந்து நதியின் அப் பக்கத்தில் மிகுந்திருக்கும் சுறா மீன்களைப் புசிக்க வருவது வழக்கம். ஆனால் சாயங்கால நேரம் அணுக அணுக இந் நம்பிக்கை

பாமர ஜனங்களுக்கு, அவர்கள் வீடுதோறும் சென்று, கற்பிப்பதற்காக ஏற்ற வழி வகைகளைத் தேட வேண்டும்.

என்னை விட்டகல ஆரம்பித்து விட்டது. இரவைச் சூழ்ந்து பெரிய சிரிப்பொன்று கூடிக்கொண்டிருக்கின்றதென்றும், சமயம் நேரிட்டபோது இரவைப் பிளந்துகொண்டு வெடிக்கும் என்றும் நான் ஊகித்தேன். இறுதியாக சாயங்காலத்திற்குப் பின் மனோரமாவோடு நான் பேசத் துணிவதே கிடையாது.

பின்பு நாங்கள் எமது வீட்டை விட்டு உல்லாசப் படகிலேறி உலாவி வந்தோம். வைகாசி மாதம் எனது பயங்கள் நதியின் மென் காற்றிற்கு முன் பறந்துவிட்டன. கொஞ்ச நாட்களுக்கு நான் அனுபவித்த இன்பம் அளவிடற்கரிது. பிரகிருதியின் பேரெழில்களில் தன் மனதைப் பறிகொடுத்து மனோரமா, நெடு நாட்களுக்குப் பின் மெதுவாகத் தன் இதயத்தை எனக்கு வெளியிட ஆரம்பித்தாள்.

இறுதியாக நாங்கள் கங்கையில் கீழ் முகமாக வந்து, ஜலாங்கி நதியைக் கடந்து, பத்மா நதியை அடைந்தோம். மெலிந்த பாம்பு ஒன்று திமிர் பிடித்துத் தன் பொந்தில் பதுங்கிக் கிடப்பது போன்று பயங்கரமான அப் பத்மா நதி அப்பொழுது தன் கார்காலத்து நீள் துயிலில் அமர்ந்து இன்புற்றிருக்கின்றது. கண்களின் பார்வை எட்டுகின்றவரை வடக்கே வாழ்கின்ற சுறுக்கள், தெற்கே அவ்வுயரிய கரைகளின் மேல் கிராமங்களின் மாஞ்சோலைகள் (அந் நதியின் கொடூரத்திற் கஞ்சி) ஒன்றோடு ஒன்று பின்னிய வாய்க் கிடக்கின்றன. பத்மா நதி தன் தூக்கத்தில் புரள்கின்றது. கரைகளிலுள்ள மண் கட்டி கட்டியாக நதிக்குள் விழுகின்றது.

இப் பாகமே எமது உலாவிற்கு உகந்த பதி என்று உன்னி எங்கள் படகை இவண் ஓட்டிச் சென்றனம் யாம்.

ஓர் சாயந்திரம் நாங்கள் வெகு தூரம் சென்றுவிட்டோம். "தங்க முருக்கித் தழல் குழைத்துத் தேனுக்கி எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ" என்று வியப்புறும் வண்ணம் பொன் மேனி பெற்றுத் திகழும் தினகரன் மேல் வரைவாய் விழுந்து ஒளி மங்கியதும் யாம் கண்டனம் ஓர் காட்சி! சூரியன் பொன் மயமாய் மேற்கே மறைகின்றான். தண்மதி, தன் ஒளி ஸ்தம்பங்கள் தன்னை மெய் காப்ப, எழுகின்றான் கீழ் திசையில். கீழ்த் திசை மதியை பிரதிபலிக்கின்றது கங்கையின் தூய நீலப் புனல். வானக் கடலில் ஓடும் வெள்ளிய ஓடமோ இவ் வெண்மதி! பார்க்கடலில் நீராடி வருகின்ற ஒளிப் பந்தோ இச் சந்திரன்! கங்கை நதியை பார்க்கடலாக மாற்றிவிட்டது.

மனு தர்ம சாஸ்திரம் ஒடுக்கப்பட்டவர்களைத் தொடாதே என்று கூறுகிறது. ஆனால் மனித தர்ம சாஸ்திரமோ மனிதர்கள் மனிதர்கள் தொடலாம் என்று சொல்லுகிறது.

என்ன காட்சியடா! கண்கவர் காட்சி! தூய வெண் மேகலையெனக் கண்டார். அதிசயிக்கும்படி நிலமகளைப் போர்த்திக் கிடக்கும் நதிக் கரையிலுள்ள மணல்கள் சந்திரனுடைய எழ்கதிராடி, அதனுடைய வெண்மையை உண்டு, அவ் வொளியில் அவை இரத்தினங்கள் போன்று இலங்கிக் கண்ணைப் பறிக்கின்றன. நாங்களிருவர் தாம் சொப்பன பூமியாம் நீல மேகமற்ற சந்திர லோகத்தில் பவனி வருவதாக நினைந்தேன். ஓர் சிவந்த சால்வை மனோரமாவின் முகத்தை மூடிக்கொண்டு அவள் உடல் முழுவதையும் மறைத்து விட்டது. நிசப்தம் இன்னும் அதிகரிக்கின்றது. எங்கு பார்த்தாலும் ஏக வெள்ளை—ஒரே அடியான வெள்ளை நிறம். எல்லை, அளவுகடந்த ஒரே வெட்டை வெளி. திடீரென மெதுவாக, மனோரமா என் முன் கையைப் பற்றிக்கொண்டாள். தன்னுடைய உடல், உயிர், உடமை, சீரொளி, இளமை இவற்றை எனக்கே அர்ப்பணம் செய்துவிட்டது போன்று அவள் என்னை ரொம்ப அணுகி நின்றனள். ஆர்வம் நிரம்பிய உளத்தோடு "காதல் என்பதை நான்கு சுவர்கள் அடங்கிய ஓர் அறையுள் அடைத்துவிட முடியுமா" என்று நான் எண்ணினேன். திறந்த, பரந்த, அகன்ற இவ் வானவெளியைத் தவிர்த்து மற்றொன்றும் இரண்டு பேர்களை வைத்துக்கொள்ள முடியாது. எங்களுக்கு வீடுமில்லை; வாசலுமில்லை. எங்கு திரும்புவது? எனவே எதிர்பாரற்று, ஓர்வித நோக்கமுமின்றியே நாங்களிருவரும் 'ஒளிரும் ஈருடற்கும் ஓர் உயிராய்' சந்திர ஒளியால் ஜாஜ்வல்யமாக விளங்கும் 'எல்லை, அளவு' கடந்த இவ் வானவெளியில் திரிந்துகொண்டிருக்கவேண்டியதுதான் இனி. என்று இப்படியெல்லாம் நான் எண்ண ஆரம்பித்துவிட்டேன்.

இவ்வாறு சென்றுகொண்டிருந்தபோது ஓரிடத்தில் கொஞ்சம் மணல்களுக்கு நடுவே ஓர் "நீர்த் தேக்கு" இருப்பதைக் கண்டோம்.

சந்திரனுடைய நீண்ட கிரணமொன்று மணற்பாலையால் சூழ்ந்து, அலையற்று, துயிலிலாழ்ந்து நிசப்தமான அக் குட்டத்தில் மயக்குற்றுக் கிடப்பது போன்று இருக்கின்றது. அவ்விடத்தை அடைந்ததும் நாங்கள் நின்றுவிட்டோம். ஏதோ ஒரு சொல்லொணா எண்ணத்தால் தூண்டப்பட்டதுபோன்று என் முகத்தைக் குறிப்பாக நோக்கி நின்றாள் மனோரமா. அந்த சால்வை அவள் தலையினின்று நழுவி விழுந்துவிட்டது. மதியின் ஒளிப்பிழம்பில் மின்னித் திகழும் அவள் தண்மதி முகத்தை நிமிர்த்தினேன். என் மனதில் ஏதோ ஓர்வித ஆர்வம் கிளர்ந்தெழுந்தது. என்ன ஆர்வம்? மதனன் மலர்க் கணைகள் தூண்டியதோ இவ் வேகத்தை? ஆம். மன்மதனுக்கு

உள்ளத்தில் தெய்வீக உணர்ச்சி உண்டாகும் போது, பிரார்த்தனை தானே ததும்பி எழுகின்றது.

இரையாயினோர் என்னதான் செய்யத் துணியார்! மனோரமாவின் மதிமுகம் செங்கமல முகமாகத் திரிந்துவிட்டது.

என்ன அதிசயம்! மனித வாழ்வு இன்னதென்று கண்டறியாத மணற்பாங்கான அவ்விடத்தில் அப்பொழுது "யாரவள்? யாரவள்? யாரவள்?" என்ற கண்ணியக் குரல் மும்முறை ஒலித்தெழுந்தது.

எழுந்தேன் நான். பயந்தனள் என் மனைவியும். அடுத்த க்ஷணமே இச் சப்தம் மானிடவர்களுடையதுமல்ல, இயற்கைக்கு மேம்பட்டதுமல்ல என்று நாங்களிருவரும் அறியவந்தோம். அது சுறு மீனைப் புசிக்கும் ஓர்வகைப் பறவையின் ஒலி. ஒதுங்கலான அவைகளினுடைய உறைவிடத்திற்கு நாங்கள் போனதினால் எம்மை பயமுறுத்தவே அவ்விதம் கத்தின.

இதனால் பயந்துபோய், எங்கள் படகிற்கு வந்து நித்திரை செய்யப் படுக்கையில படுத்தோம். மனோரமா மிகவும் களைத்துவிட்டிருந்ததினால் சீக்கிரத்தில் தூங்கிவிட்டாள். எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. சிறிது நேரம் சென்றது. ஓர் காட்சி! அச் செறிந்த இருட்டில் ஏதோ ஒன்று எனது படுக்கைப் படுதாப் பக்கத்தில் நின்றுகொண்டு மெலிந்த, எலும்பு விரலால் உறங்கும் மனோரமாவைச் சுட்டிக்காட்டி, எனது காதில் "யாரவள்? யாரவள்? யாரவள்?" என்று குசுகுசுத்தது.

விருவிரு என்று எழுந்தேன் நான். தீக்குச்சி ஒன்றைக் கிழித்து மெழுகுவர்த்தியைப் பற்றவைத்தேன். ஒன்றையும் காணோம். அந்த க்ஷணமே மறைந்துவிட்டது அவ் வுருவம். படுக்கைப் படுதாவை அசைத்து, படகை உலுப்பி, வேர்த்து விருவிருக்கும் என் மெய்யிலுள்ள இரத்தத்தைக் குளிரச்செய்து, ஒரு பெரிய சிரிப்பு 'கீச்'சென்று இரவின் உடலை ஊடுருவிப் பாய்ந்தது. அது நதியைக் கடந்தது; கரைகளைத் தாண்டிற்று; உறங்கும் நாடு, நகரம், கிராமம் யாவற்றையும் வீசியடித்துக் கடந்து, திரும்புவதுபோன்று படிப்படியாக வேகம் குறைந்து—இருத்தல், இறத்தல் முதலிய நாடுகளையும் கடந்து, இன்னும் அதின் வேகம் குன்றியது. அம்மம்ம! அத்தகைய மெல்லிய குரலை நான் கனவிலுங்கூடக் கேட்டது கிடையாது. இக் கவலை பொறுக்க முடியாமல் போகவே தூங்கியாவது இக் கவலையை ஓட்டுவோம் என்று நான் விளக்கை அவித்துவிட்டேன்.

பெரியார்களது ஒவ்வொரு சிறிய செய்கையிலும் நன்மையும் மேன்மையும் பொலிந்து கிடக்கின்றன.

நான் விளக்கை அணைத்துக்கொண்டு படுத்தேனோ இல்லையோ மீண்டும் அம் மெல்லிய குரல்—"யாரவள்? யாரவள்? யாரவள்?" என்று என் படுக்கைப் படுதாவின் அருகே ஒலிக்கக் கேட்டேன். எனது இருதயத்தில் இரத்த ஓட்டமும் "யாரவள்? யாரவள்? யாரவள்?" என்பதற்குத் தக்க தாளமிட்டுக்கொண்டு ஓட ஆரம்பித்துவிட்டது. அந் நள்ளிரவில் சலனமற்ற அப் படகில் எனது கடிகாரமுங்கூட உயிர் பெற்றுவிட்டது போன்று ஷெல்பின் (self) மேலிருந்தவண்ணம் தன் குட்டைக் கையை மனோரமாவை நோக்கி நீட்டிக்கொண்டு "யாரவள்? யாரவள்? யாரவள்?" என்று சொல்லிற்று."

தக்ஷிணபாபுவின் முகம் இப்பொழுது வெளுத்தது; அவர் குரல் தடைப்பட்டது. நானவரைத் தொட்டு ஒரு கோப்பையில் ஜலம் கொடுத்தேன். அதே சமயம் விளக்கின் ஜ்வாலை பளிச்சென்று மிகப் பிரகாசமாக அவிர்ந்து அவிந்துபோயிற்று. ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தேன் நான். கீழ் வானத்தில் ஓர் வெள்ளைக் கீற்று. காகங்கள் "கா கா"வென்று கத்துகின்றன. கோழிகள் "எழுங்கள், ஜனங்களே! உங்கள் வாழ்நாள் புத்தகத்திற்கு இன்று புதியதொரு பக்கத்தைக் கூட்டுங்கள்" என்று தம் சிறகுகளால் அடிவயிற்றில் அடித்துக்கொண்டு ஆர்ப்பரிக்கின்றன. என் வீட்டிற்கு முன்னுள்ள ரஸ்தா உயிர் பெற்றுவிட்டது—வண்டிகள் 'கீச் கீச்'சென்று அதன்மேல் செல்லுகின்றன. உடனே பாபு முகத்தின் களை முற்றிலும் மாறிவிட்டது. அதில் பயத்தின் குறி ஒன்றையும் காணோம். தான் இவ் விஷயத்தை வெளியிட்டுவிட்டதைக் குறித்து மிகவும் வருந்தினார்; கோபமும் சிறிது கொண்டார். கண்ணியத்திற்கு அறிகுறியான ஓர் வந்தனங்கூடக் கூறாமல் சட்டென எழுந்து சென்றுவிட்டார்.

அந்த நாள், மீண்டும் நள்ளிரவில் என் வீட்டுக் கதவைத் தட்டும் ஒலியும், யாரோ ஒருவர், "டாக்டர்! டாக்டர்!" என்று அழைக்கும் சப்தமும் கேட்டது.

அன்பு என்பது யுக்தியினால் எட்டப்படக் கூடிய ஒரு பொருளல்ல. வாய் வார்த்தைகளினால் அதை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அனுப்ப முடியாது. ஆனால் அது ஓர் உண்மையான பொருள், ஒரு சக்தி. அது ஒருவனை மாற்றி உயிர்ப்பிக்க வல்லது. கொடுப்பதற்கும் பணி யாற்றுதற்கும் அஞ்சுபவர்களையும் தம் உண்மையான இயல்பிற் கொத்து வாழ அஞ்சிப் பின்னிடுபவர்களையும் கூட அவர்களது உலகங்களினின்றும் முழுவதும் மேலுயர்த்தி விடுகிறது.

கார்ல் மார்க்ஸ்.

திரு. K. L. பழனிச்சாமி அவர்கள், B.A., L.T.

உலகத்தில் பலவேறு தேசங்களில் பற்பல காலங்களில், உலகத்தின் முன்னேற்றத்தைக் குறித்த தமது கொள்கைகளை மக்களுக்கு உபதேசஞ் செய்தவர்களாகிய தீர்க்கதரிசிகள் பலர். அவர்களையே ஜனங்கள் "மகான்கள்" எனக் கொண்டாடுகின்றனர். இயேசுநாதர், புத்தர், முகம்மது முதலியவர்களை ஜனங்கள், "உலகத்தை உய்விக்க வந்த உத்தமர்கள்" எனப் புகழ்கிறார்கள் அல்லவா? இம் மகான்களைப் போலவே கணக்கில்லாத ஜனங்களால் புகழப்படுகிற ஒரு பெரியார், நமது "கார்ல் மார்க்ஸ்" என்பவர். வையகத்தின் துன்பங்களையெல்லாம் ஒழிப்பதற்கேற்ற உத்தம வழியைக் காட்டத் தக்கவர்களில் இவரும் முதன்மையானவர் என்று உலகில் இவரைப் பலரும் போற்றிப் புகழ்கின்றனர்.

"கார்ல் மார்க்ஸ்" என்னும் இப் பெரியார், டிரிவீஸ் என்னும் ஊரிலே 1818-ம் வருஷத்திற் பிறந்தார். இளமையிலேயே இவர் பர்லின் நகரத்திலும், பான் (Bonn) நகரத்திலும் கல்வி பயின்றார். அந்த இளம் பிராயத்திலேயே, இவர், தனவந்தர் கையிலே அகப்பட்டு உடலை முறித்து வேலை செய்யும் ஏழை மக்கள் உடலினின்று ஒழுகும் வியர்வை நீரையும், வயிற்றிற்கின்மையால் கண்களினின்று ஒழுகும் கண்ணீரையும் கண்டு, மிக்க அநுதாபம் கொண்டார். அவரது மனப்பான்மைக்கு ஏற்றவாறு, அக் காலத்திலே கலோன் (Cologne) என்னும் ஊரிலிருந்து வெளிவந்த "சேனிஷ் கெஸட்டு" என்னும் புரட்சிப் பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்யும் ஆசிரியர் கூட்டத்திலுள் ஒருவராக விளங்கினார். அப் பத்திரிகை அந் நாளில் சமதர்மக் கொள்கைகளை முழக்கிக்கொண்டிருந்[illegible] பெருகத் திகழ்ந்தது. அப் பத்திரிகையையும், அதன் ஆசிரியர் கூட்டத்தையும் ஜனங்கள் வெகுவாக வெறுத்து வந்தனர். [illegible] கார்ல் மார்க்ஸும் இவ் விகழ்ச்சிக்குப் பாத்திரரானார். [illegible] வாழ்க்கையின்

அன்பு உள்ள இடத்தில் நம்பிக்கை இயல்பாகவே எழுகின்றது.

ஆரம்பத்திலேயே வெகுஜன விரோதியாய்விட்ட நமது அறிஞர், நாட்டினின்றும் துரத்தப்பட்டார். அதனால் அவர் மிக்கத் துயரம் அடைந்து இங்கும் அங்கும் அலைந்து கடைசியில் லண்டன் மாநகரத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

லண்டன் மாநகரத்தில் கார்ல் மார்க்ஸின் கொள்கைகளுக்கு ஆதரவு கிடைத்தது. அநேகர் இவரைப் பின்பற்றலாயினர். அந்நகரத்திலுள்ள பிரிட்டிஷ் மியூஸிய (British Museum)த்தைச் சேர்ந்த வாசகசாலையிலே, கார்ல் மார்க்ஸ், தமக்கு ஒழிந்த நேரங்களிலெல்லாம் உட்கார்ந்து, அங்குள்ள நூல்களை ஆராய்ந்து, "முதலாளித் தன்மை" (Capital) என்னும் பெயரையுடைய ஒரு பெரும் புத்தகத்தை வெளியிட்டார். இதுவன்றி அவர் உலகிலே உழைப்பாளிகளாகிய தொழிலாளிகளின் சார்பாகப் பாடுபட்டார். தொழிலாளிகளின் கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்காகப் பல அறிவாளிகளின் பழக்கத்தையும், சிநேகத்தையும் அவர் சம்பாதித்தார். இச்சமயத்தில்தான் இவர், தொழிலாளிகள் எவ்வித முயற்சிகளாலும், தந்திரங்களாலும், எந்தெந்தத் துறையிலே பாடுபட்டால், தங்களுக்குள் ஒற்றுமையேற்படுத்திக்கொள்வதோடு, முதலாளிகளையும் சுலபத்தில் கவிழ்த்துவிட முடியும் என்பதைப் பற்றிய திடமான, அசைக்க முடியாத, உறுதியான கொள்கைகளைப் பிரசாரஞ் செய்தார்.

அவருடைய சித்தாந்தங்கள் பின்வருமாறு:— "முதல்" அல்லது "சொத்து" என்னும் ஆயுதத்தின் உதவியினாலேயே முதலாளிகளில் அநேகர் தொழிலாளிகளைக் கொள்ளையடிக்க இயலுகின்றது. நெற்றி வியர்வை நிலத்திலே சிந்தக் காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணிவரைத் தொழிலாளிகள் உழைத்தும், அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஆறு அணா விழுக்காடுகூடக் கிடைப்பது அரிதாயிருக்கின்றது. இத்தகைய சிறு ஊதியம் பெற்றுக் கஷ்ட ஜீவனம் செய்யும் வேலையாட்களின் உதவியினால், நிலம் அல்லது சொத்து—இதனை உடைமையாக உடைய எஜமானன் அதாவது முதலாளி, வீட்டிலிருந்தபடியே வெய்யிலில் இறங்காமல், பருத்த தொந்தி சிறிதும் கரையாமல், தினம் ஒன்றுக்கு ஆயிரம்! பத்தாயிரம்!! என்று அளவில்லாத திரவியத்தைத் திரட்டுகின்றான். ஐயோ! இதென்ன அநியாயம்! இப்படிப் பெருத்த பணங்களைச் சூறையிடும் முதலாளிகள், தமது செல்வத்தைத் திரட்டுதற்கு உதவி செய்யும் உழைப்பாளிகட்கு, வயிற்றுக்குப் போதிய உணவைக் கொடுக்கத்தக்க "கூலி" கொடுப்பதற்கும் சம்மதிக்காத கன்னெஞ்சர்களாயிருக்கின்றனர்!"

உலகியல் அறிவைக் கிராம ஜனங்களுக்கு நாம் புகட்ட வேண்டும்.

பல நூற்றாண்டுகட்கு முன் வசித்த ஆதாம் ஸ்மித், ரிக்கார்டோ, பெட்டி முதலிய பெரியார்கள் இதே தத்துவத்தைக் குறித்து நன்கு எழுதி வைத்துள்ளார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்தை யொட்டியே, கார்ல் மார்க்ஸும், "வேலை—தொழில் என்பதற்குத்தான் கூலியைக் கொடுக்க அதிகாரமுண்டு" என எழுதியுள்ளார். ஆனால் தற்சமயம் உலகத்தில் நிறுவப்பட்டு வரும் முதலாளித்துவ நிலையிலே வேலைக்கு அதனால் அடையப்படும் பலனில் ஒரு தசாம்சமேனும் கிடைப்பது இல்லை. ஆனால் தொன்றுதொட்டு உலகத்திலே பொதுவாக ஏற்பட்டுள்ள வழக்கமானது—கூலி, இத்தனை அணா என்று கணக்கிட்டுக் கொடுக்கப்படுகிறது. எனவே, கூலி வேலை செய்வோனுக்குக் கொடுக்கப்படும் கூலியானது நிரந்தரமானதாயும், மாறுதலில்லாததாயுமிருக்கின்றது. ஆனால் முதலாளி அடையும் ஊதியமோ மாறுந் தன்மையுடையதாயிருக்கின்றது. ஆகவே, தற்போதைய உலக நிலை, நாலு அணா வீதம் தினம் சம்பாதிக்கும் தொழிலாளி, என்றைக்கும் தரித்திர நிலையிலும், ஆயிரக்கணக்கில் இத் தொழிலாளிகளின் பலனை அனுபவிக்கின்ற முதலாளி மேலும் மேலும் பணம் சேகரித்துக்கொள்ளவும் ஏற்றதாக விளங்குகின்றது. இதனால் ஏழைத் தொழிலாளி மாறாத நித்திய தரித்திரனாகவும், பணக்காரன் நித்திய பணக்காரனாகவும் ஆய்க்கொண்டிருக்கிறார்கள்,

இதனால் இவ்விரு திறத்தாருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் ஏற்றத்தாழ்வு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்லுகின்றது. இவ்வாறு அதிகரித்துச் செல்லும் ஏற்றத்தாழ்வு, ஓர் அளவுக்குச் சென்றதும் மிகவும் முறுக்கேறிய கயிறுபோல அறுந்துவிடும். அப்பொழுதுதான் உலகத் தொழிலாளர் கிளர்ச்சி உண்டாகும் சமயமாகும். தேவைக்கு மிகவும் அதிகமான செல்வமானது ஒருவனிடத்திலும், தேவைக்கு மிகவும் குறைச்சலான பணமானது வேறொருவனிடத்திலுமாக உலகம் வெகு காலமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. தேவைக்கு அதிகமாகச் சிலரிடமும், தேவைக்குக் குறைவாகப் பலரிடமும் இருந்ததன் பயனே, தற்போது நம் முன் காணப்படும் உலகின் நிலைமையாகும். இந்நிலையில், "நமக்கென்ன வந்தது? எல்லோருக்கும் உள்ளது நமக்கு" என்று யாதொரு கிளர்ச்சியும் உண்டாக்காமலும், நம் தொழிலாளர்களால் சாதிக்க இயலக்கூடிய அரிய பெரிய காரியங்களை நாம் எடுத்துக் காட்டாமலும் விட்டுச் செல்வோமானால், இன்னும் கொஞ்ச காலத்தில் உலகின் நிலைமை இன்னும் கேவல ஸ்திதிக்கு வந்துவிடும்.

அன்பிற்காகவே அன்பு செய்ய வேண்டும். கருமத்திற்காகவே கருமம் செய்ய வேண்டும். வேறொன்றைக் கருதிச் செய்யக் கூடாது.

தேவைக்கு அதிகமாக ஒருவனிடமும், தேவைக்குக் குறைச்சலாக இன்னொருவனிடமும் காணப்படுவதால்தான் ஒருவனுடைய "அந்தஸ்து" என்பது கணிக்கப்படுகிறது. வீணாக யாருக்கும் (தனக்கும், பிறருக்கும்) பிரயோசனமின்றி யிருக்கக்கூடிய செல்வத்தைக் குவிப்பதற்காக ஒவ்வொருவனுடைய மனத்திலும் எழும் ஆசைக்குக் காரணம்—சமூகத்தில் ஒரு கண்ணியமான ஸ்தானம்—அதாவது அந்தஸ்து என்ற ஒன்றை வகிப்பதற்கேயாம். சரித்திரத்தின் வாயிலாகப் பார்த்தாலும், இத்தகைய—"பொருளை யொட்டிய மதிப்பு" என்பதன் காரணமாகவேதான் அவ்வக் காலங்களில் பற்பல யுத்தங்களும், கொலைகளும் நடந்திருக்கின்றன.

கஜினி மஹம்மது பதின்மூன்று தரம் சோமநாதபுரத்தின்மீது படையெடுத்தது ஏன்? நிரம்பப் பணத்தைச் சேர்க்கவேண்டும் என்ற ஆசையினால் அல்லவா? இப்புசல்தான் ஊரூராகக் கொள்ளையடித்ததற்குக் காரணம் என்ன? "தான் இவ்வளவு சொத்து உடையவன்" என்ற கியாதி படைக்க வேண்டும் என்பதுதானே? படுகொலைகளெல்லாம் "பணத்திற்கேற்ப மதிப்பு" என்ற ஒன்றினாலேயே ஏற்பட்ட பலன்களே யன்றோ? உலகில் யுத்தங்கள் நேரிடுவதற்குக் காரணமும் "முதலாளித் தன்மை"யேயாகும். சட்டபூர்வமாகவும், கிளர்ச்சிகளின் மூலமாகவும் ஏற்படும் சீர்திருத்தங்களெல்லாம் "பொருள் சிக்கனம்" என்பதை அடிப்படையாகக் கொண்டவைகளே. மத சம்பந்தமாக ஏற்படும் சீர்திருத்தங்களும் இத்தகைய நோக்கமுடையனவே!

முதலாளித் தன்மை உலகில் நிலைபெற்றிருக்கும்வரை, தொழிலாளிகள், பணக்காரருக்கு அடிமைகளாகவே யிருப்பர். அதுபோலவே மத சம்பந்தமான மூடப் பழக்கங்களும், கூடா வழக்கங்களும் உயிருடன் இருக்கும் வரையில், தொழிலாளிகள் அடிமைத் தன்மையினின்று விடுதலை யடையமாட்டார்களென்பது நிச்சயம். முதலாளிகள் ஏற்படுத்திவரும் அடிமைத்தனமும், மதாசாரியர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிமைத்தனமும் ஒன்றிற்கொன்று வித்தியாசம் உடையனபோற் காணப்பட்டாலும், இரண்டும் உண்மையில் ஒன்றே.

புரோகிதர்கள் தொகையோ குறைவு. அவர்கள் குற்றங்களினாலேயே அவர்கள் குறைந்தார்கள். பொருளை நாடி அவர்கள் பணக்காரர்களைப் பின்பற்றுகிறார்கள். செல்வத்தில் பேராசை கொண்டு ஏழை எளியவர்களை அவர்கள் கவனிப்பதில்லை. பொன்னையும் பொருளையும் பற்றியபடியால் அவர்கள் வீழ்ச்சி யடைந்தார்கள்.

லரவல் மோகனா

(ஓர் இனிய துப்பறியும் சிறு நாவல்.)

திரு. வே. இராமச்சந்திரன் அவர்கள்.

“இப்பொழுதே ஐந்நூறு ரூபாயும் பிறகு மாதா மாதம் நூறு ரூபாயும் தவறாது கொடுக்கப்பட்டால், நான் இப்பொழுதே இவ்விடத்தை விட்டு மறைந்து விடுகிறேன்.”

“எப்படியும் உனக்கு பணந் தரத் தடையில்லை. ஆனால் நீ இங்கு—இவ் வூரில் தங்கியிருக்கலாகாது. ‘எனக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. மூளை குழம்பி விட்டது. நான் நிதானமாக யோசிக்க வேண்டும். உடனே நீ இவ்விடத்தை விட்டுப் போ. இல்லாவிடில் நான் உன்னைக் கொல்ல நேரிடும். கடத்தை தவறிய கொடூர குணமுள்ள உன் முகத்தைப் பார்க்க நான் விரும்பவில்லை.”

“அதைப் பற்றிக் கவலை யில்லை. நான் வந்த காரியம் முதலில் கவனிக்கப்பட வேண்டும். இருந்தாலும் உமக்கும் சாவகாசம் வேண்டியது அவசியந்தான். நாளைக்குப் பணத்தை அனுப்பிவிட்டால், நான் இனிமேல் இங்கு வந்து தொந்தரவு கொடுக்க மாட்டேன். தாங்கள் தங்கள் வார்த்தையைக் காப்பாற்றினால், நானும் சொற்படி நடப்பேன. அதில் சந்தேகம் வேண்டாம்.”

* * * * *

உடனே யாதொரு விதமான பேச்சும் கேட்கப்படவில்லை. எதிர் பாராதவாறு திடீரெனத் தோன்றிய உருவம் இருளில் சீக்கிரம் மறைந்தது. வேணுகோபாலபுரம் ஜமீன்தார், நமக்கு இவ் வுலக இன்ப வாழ்க்கை முடிந்துவிட்டதென எண்ணினார். மிகுந்த ஆயாசமடைந்தவராய் தமது நாற்காலியில் சாய்ந்தார். பெருங் கவலையும், துன்பமும் அவர் மனதில் நிறைந்திருந்தன. முகம் மாறுதலடைந்து விகாரமாகத் தோன்றியது. கவலையும் வெறுப்பும் கொண்டு துன்பமே உருவாய் தோன்றினார். சிறிதும் எதிர்பார்

வாழ்க்கையில் மேன்மையாவது அன்பு செய்தலே, அன்பைப் பெறுதலல்ல; கொடுத்தலே யல்லாது பெறுதலல்ல; பணி செய்வதே யல்லாது பணிசெய்யப்பெறுவதல்ல.”

வாறு திடீரென்று "டமீல்" என்று துப்பாக்கி வெடிச் சத்தம் கிளம்பி அவரை திடுக்கிடச் செய்தது. சரேலென்றெழுந்து, ஜன்னல் வழியே வெளியே தாண்டிக் குதித்து இருளில் பாய்ந்தார். தொடர்ந்து பரிதாபகரமான ஒரு பெண்ணின் குரலும் கேட்டது.

* * * * *

வேணுகோபாலபுரம் ஜமீன்தார் சோமசுந்தரம் பிள்ளை ஓர் நாள் மாலை உலவிவிட்டு, அதிக நேரம் சென்று தமது மாளிகையையடைந்தார். அவரது கவலையும், மனச் சோர்வும், காதல் மனைவி சுகுணமாலினியின் சரஸ சல்லாபங்களால் ஒருவாறு மறைந்தது. தமது அந்தஸ்திற்கேற்றவாறு ஒரு சுதேச சமஸ்தானத்தின் திவானின் குமாரத்தியையே மணம் புரிந்து கொண்டார். அன்றிரவு பத்து மணிக்கு சோமசுந்தரம்பிள்ளை தமது தனிப் படுக்கையறையை அடைந்து ஓர் இனிய நவீனத்தை எடுத்துப் படிக்க வாரம்பித்தார், மணியும் பதினொன்றடித்தது. அவருக்கு எதிர்ப்புரத்தில் திறந்திருந்த ஜன்னல் வழியே குளிர்ந்த காற்று ஜில்லென்று முகத்தின் மீது வீசியது. உடனே புத்தகத்தை மூடிவிட்டு, நிமிர்ந்து ஜன்னல் வழியே வெளிப் பக்கம் நோக்கினார். மின்சார விளக்கின் பிரகாசத்தால் மங்கியிருந்த அவர் கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. பிறகு தம் கண்களை கைக் குட்டையால் துடைத்துக் கொண்டே பார்த்தவர் கலவரமடைந்து விழித்து நோக்கினார். அவர் உடலில் ரத்தம் குளிர ஆரம்பித்தது. பிறகு மெல்லிய குரலில் சில வார்த்தைகள் கிளம்பின:

"ஆ! யார் அது? ஸரஸ மோகனாவா?"

வனப்பு மிகுந்த மங்கையொருத்தி, புன்னகை ததும்பும் முகத்துடன், தனது உடல் முழுவதும், உயர்ந்த கான்பூர் சால்வையால் மறைத்துக்கொண்டு, எதிரே காணப்பட்டாள்.

"ஆம்! ஸரஸ மோகனாவே!" எனச் சிரிப்புக் குரலில் பதில் வந்தது. "மிகுந்த ஞாபக சக்தியுடைய தாங்கள், முன் யோசனையுடன் ஜன்னலைத் திறந்து வைத்துக்கொண்டு, எனக்காகக் காத்திருந்ததற்கு வந்தனம். என வருகையை இங்குள்ள ஒருவரும் அறியலாகாதென்பதே என் எண்ணம்."

சோமசுந்தரம் பிள்ளைக்கு ஒரு நிமிஷம் கழிவது ஒரு யுகமாகத் தோன்றியது. பின்னும் சமீபமாக ஜன்னலை நெருங்கிய இருளில் தோன்றிய இன்ப உருவம், "இத்தகைய வெறுப்பு மிகுந்த வரவேற்பு கிடைக்குமென்று எனக்கு முன்பே தெரியும். இருப்பி

வாழ்க்கையில் உள்ளவை யனைத்திலும் மிகத் தூய்மை வாய்ந்தது அன்பே.

னும் நான் என்ன செய்வது? நான் கருகிவந்த கருமம் [illegible] வேண்டுமன்றோ? தாங்கள் எப்படியும் என்னை மணம் செய்து [illegible] வதாகக் கூறி, தங்கள் அடையாளமாக எனக்களித்த வைர மோதிரம், இதோ இப்பொழுதும் என் விரல்களில் பிரகாசிக்கின்றது. தாங்கள் கூறிய காதல் மொழிகள், அப்படியே என் இருதயத்தில் பதிந்துள்ளன. அதை நான் எப்படி மறக்கக்கூடும்?" மிகுந்த ஆயாசத்துடன் பெருமூச்சு விட்டு, சிறிது கனைத்துத் தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு, "நீ ஆற்றில் மூழ்கி இறந்துவிட்டாயென்று நான் நினைத்தேன். உன் தாயார் அவ்வாறு எனக்குக் கடிதமெழுதியிருந்தாள். அது பத்து வருஷத்திற்கு முன் நடந்த விஷயம்" என்று மெதுவாகக் கூறினார்.

"ஆம். அந்தக் கதையை நாங்கள் யாவரும் சேர்ந்தே கட்டிவிட்டோம். அதுவும் பின்னால் நடக்கவேண்டிய ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றியே. தாங்கள் அப்பொழுது தங்கள் தகப்பனுருக்கு உட்பட்டிருந்தீர்கள். ஆனால் இப்பொழுதோ தாங்கள் வேணுகோபாலபுரம் ஜமீனின் சர்வாதிகாரி. தங்களுடைய விவாகத்தைப் பற்றிய சகல விஷயங்களும் எனக்குத் தெரியும். அதற்காகவே நான் காத்துக்கொண்டிருந்தேன். இப்பொழுது இங்கு சகல அதிகாரமும் வகிக்கும், அந்தத் தங்கள் மனைவிக்கு யாதொரு உரிமையுமில்லை. சட்டப்படி விவகாரம் நடந்தால், நானே யாவற்றிற்கும் உரிமையுள்ளவளாகி, தங்கள் காதல் மனைவியாவேன்."

"மெதுவாகப் பேசு. இத்தகைய பேச்சுக்களை நான் முழுதும் வெறுக்கிறேன். உனக்கு வேண்டியதுதான் என்ன?"

"எனக்கு வேண்டுவதெல்லாம் பணமேயொழிய வேறில்லை. நான் மிகவும் கஷ்ட நிலையிலிருக்கிறேன். ரொம்பவும் பண அவசரம்" என்று கூறி முடித்தாள் ஸரஸ மோகனா.

அதற்குப் பிறகே, நாம் முதல் ஆரம்பித்தவாறு சம்பாஷணை தொடங்கிற்று.

வேணுகோபாலபுரம் ஜமீன்தார் சோமசுந்தரம் பிள்ளை மிகுந்த உயர்தரப் படிப்புடையவரன்று; பொதுவாக, லோக அநுபவமும், உலக விவகாரங்களும் அறிந்துகொள்ளத் தக்க போதுமான கல்வி கற்றார். ஓர்நாள் அகஸ்மாத்தாகக் கோயிலில் சந்தித்த ஒரு [illegible] ணங்கியின் மீது காமுற்றார். அதற்கான ஏற்பாடுகளும் செய்[illegible]

வாழ்க்கையில் நிகழும் செயல்கள் அனைத்தும் மனதோடும் அதன் எண்ணங்களோடும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மனமே அவற்றிற்குக் காரணம்.

டன். அப்பொழுது அவருக்கு வயது சுமார் இருபத்தைந்து. யௌவனத்தின் தன்மையால் அறிவிழந்து, தமது வாழ்க்கையின் வழி தவறினார். சுமார் ஒரு வருட காலம் இன்பத்தில் ஆழ்ந்து மதிமயங்கி யிருந்தார். அப்பொழுது அவர் நிலையில், அவரால் தமது மனதைத் தடுமாற்றமுறச் செய்த ஆரணங்கிற்கு, அவள் விரும்பியதெல்லாம் கொடுக்க முடியவில்லை. கடைசியாக, தான் சொந்த சொத்து விஷயமாகத் தானும் தாயும் சென்னை செல்ல வேண்டுமென்றும், "தாங்களே என்னை உய்விக்க வந்த தெய்வமென்று நம்பி, என் உடலைத் தங்களுக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன். நானோ இனி இங்கு தங்கியிருக்க முடியாது. ஆதலின் தாங்களே கதியென்று நம்பிய அடியாளுக்கு என்ன வழி காண்பிக்கின்றீர்கள்? இப்பொழுது எந்த நிலைமையிலிருக்கிறீர்களென்று எனக்குத் தெரியும். இன்றைக் கில்லாவிட்டால், இன்னும் பல வருஷங்கள் சென்றாகிலும் தாங்கள் எனக்கு உதவிபுரியலாம்" என்றாள்.

"இப்பொழுது இந்தா இதைப் பெற்றுக்கொள். அதிகமில்லை ஒரு ஆயிரம் ரூபாய்தான். இது என் சொந்தப் பணம். இந்த என் வைர மோதிரத்தையும் என் ஞாபகார்த்தமாக அணிந்துகொள். எப்படியும் எவ்வளவு துன்பம் நேரிட்டபோதிலும் நான் ஜமீனுக்கு வந்தவுடன் உன்னை விவாகம் செய்துகொள்ளுகிறேன். இதில் சந்தேகம் கொள்ளாதே" என்று கூறி, மிகுந்த ஆவேசத்துடன் கட்டியணைத்து இறுக முத்தமிட்டு, முத்தமிட்டு இன்ப சாகரத்தி லாழ்ந்தார். இந்த மங்கை யாவள்? ஸரஸ மோகனாவே.

ஐந்து வருடங்கள் ஓடி மறைந்தன. சோமசுந்தரம் பிள்ளையின் தகப்பனார் மரணமடைந்தார். அவர் இறப்பதற்கு ஒரு வருஷத்திற்கு முன், முற்கூறியவாறு, தகுந்த இடத்தில் தம் குமாரனுக்கு விவாகம் செய்வித்திருந்தார். வேணுகோபாலபுரம் ஜமீன் முழுமைக்கும் சோமசுந்தரம் பிள்ளை உரியவரானார். நடந்த விஷயங்களை அறவே மறந்துவிட்டு, சோமசுந்தரம் பிள்ளை தம் புதிய மனைவியுடன் வெகு இன்பமாகக் காதல் வாழ்க்கை நடத்துவதானார். ஸரஸ மோகனா இறந்ததாக ஓர் நாள் வந்த கடிதத்தைப் பிரித்துப் பார்த்து, அதைக் கிழித்துக் கசக்கி யெறிந்தார். ஆயினும் பத்து வருடங்களுக்கு முன் நடந்த விஷயங்கள் கனவில் நடந்ததைப் போன்று சிறிது ஞாபகத்துக்கு வந்தன. ஆயினும் அவற்றைப் பற்றி அவர் அதிகம் நினைத்து வருந்தவில்லை. அதை அத்துடன்

நமது அறியாமை, ஒற்றுமையின்மை, கெட்ட பழக்கங்கள், கொடுமைகளைச் சகிப்பது, அடிமையான எண்ணங்கள், மூடப் பழக்க வழக்கங்கள் முதலியவைகளை அடியோடு ஒழிக்க வேண்டும்.

மறந்தார். பிறகு நிகழ்ந்தவைகளைக் கோர்வையாகக் கூறியுள்ளோம்.

* * * * *

அவ்வாறு காரிருளில் ஜன்னல் வழியாகத் துப்பாக்கி வெடிச் சத்தத்தைக் கேட்டுக் குதித்தோடிய சோமசுந்தரம் பிள்ளை, சிறிது தூரத்தில் ஓர் பெண் கீழ்விழுந்திருப்பதைக் கண்டார். விரைவாக நடந்து, கீழே குனிந்து உற்றுப் பார்த்தார். கீழே கிடந்த உருவம் இப்படியப்படி அசைந்து வாயைத் திறந்து பேச முயன்றது. கூடவில்லை. சிறிது நேரத்தில் தேகத்திலிருந்து உயிர் பிரிந்தது. சோமசுந்தரம் பிள்ளை கொலை! கொலை!! என்று உதவிக்குக் கூப்பிட்டார். கீழே விழுந்து இறந்தது ஸரஸ மோகனாவே! அவள் மார்பின் வழியே சுடப்பட்டிருந்தாள். அவளைக் கொன்ற துப்பாக்கி சில கெஜ தூரத்தில் அப்பொழுதும் புகைந்துகொண்டு, புற்றரையின்மீது கிடந்தது. அதை யெடுத்துப் பார்த்த சோமசுந்தரம் பிள்ளை, அது தம்முடையதாகவே இருப்பதை யுணர்ந்து திடுக்கிட்டார். அவர் மனம் பெரும் அச்சத்தால் பீடிக்கப்பட்டுத் தவித்தது. சோமசுந்தரம் பிள்ளையின் குரலைக் கேட்டு, மாளிகையிலிருந்து சில பணிமக்கள் விரைந்தோடி வந்தனர். ஜமீன்தார் இறந்த அப்பெண்ணை மாளிகையைச் சுற்றியுள்ள தோட்டத்தின் ஒரு மூலையிலுள்ள தனி வீட்டிற்கு அந்தப் பிணத்தை எடுத்துச் செல்லுமாறு உத்திரவிட்டார். சேவகர்களுக்கு நடந்த விஷயம் ஒன்றும் விளங்கவில்லை. மறுநாட் காலை, இக் கொலை காட்டுத் தீபோல் வெகு சீக்கிரத்தில் பரவிவிட்டது. ஜனங்கள் பற்பல விதமாகத் தங்களுக்குத் தோன்றிய விதம் பேசிக்கொண்டனர். சோமசுந்தரம் பிள்ளையே இக் கொலைக்குக் காரணம் என்று பொதுஜன அபிப்பிராயம் பலமாயிருந்தது.

போலீஸ் புலி இன்ஸ்பெக்டர் பீப்பாய் துரை (Mr. Cask) வெகு தடபுடலாக அட்டகாசத்துடன், தமது பரிவாரத்தோடு ஜமீன்தாரின் மாளிகைக்குள் நுழைந்தார். ஒவ்வொருவரையும் தனித்தனியாக விசாரித்தார். கடைசியாக அவர் ஜமீன்தார் சோமசுந்தரம் பிள்ளையைக் கூப்பிட்டு "நீர் பிணத்தருகே, உமது உடம்பு முழுவதும் ரத்தத்துடன் அழுதுகொண்டிருந்ததை முதலில் உங்கள் சேவகர்களே பார்த்திருக்கின்றனர். பிணத்துக்குப் பக்கத்தில் உம்முடைய துப்பாக்கி இருந்ததென்பதும் வெளியாகிறது. கொலை! கொலை!! என்று முதலில் கத்தியதும் தாங்கள் தான். கொலையும் தங்கள் மாளிகைத் தோட்டத்திலேயே நடந்திருக்கிறது. ஆதலால்

ஆக்கல், அளித்தல், அழித்தல்களைச் செய்யும் கடவுளைப் போன்றே மனமும் மக்களது செயல்களுக்கு முதற் காரணமாயிருக்கிறது.

நீங்களே இக் கொலையைச் செய்திருக்கிறீர்கள் என்பதில் தடையில்லை. ஆகையால் உம்மை நான் கைதி செய்வதற்கு வருந்தினும் என்னுடைய கடமையைச் செய்ய வேண்டுவது கடமையாகின்றது'' என்று கூறிச் சோமசுந்தரம் பிள்ளையைத் தம்முடன் மோட்டாரில் அழைத்துச் சென்றார். எவ்வளவோ ஜாமீன் கொடுப்பதாகக் கூறியும் மாஜிஸ்டிரேட் இது கொலைக் கேஸாதலால் இதில் குற்றவாளியை விடுவிக்க முடியாதென்று கண்டிப்பாகக் கூறி மறுத்து ஜாமீன் மனுவைத் தள்ளிவிட்டார்.

ஜமீன்தார் சோமசுந்தரம் பிள்ளை கொலைக் குற்றத்திற்காக கைதி செய்யப்பட்ட விஷயம் அவருடைய குடும்ப வக்கீலான துரைச்சாமி ஐயங்காருக்கு உடனே 'டெலிபோன்' மூலம் தெரிவிக்கப்பட்டது. இச் செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்ட ஐயங்கார் மிகுந்த பதைபதைப்புடன் விஷயங்களைப் பத்திரிகையில் படித்தறிந்து கொண்டார். இருக்கும் சந்தர்ப்ப சாக்ஷியங்களைக் கவனிக்கையில் சோமசுந்தரம் பிள்ளையே கொலையைச் செய்திருக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. ஆயினும் இத்தகைய கொடிய காரியத்தை அவர் செய்திருப்பாரென்று எண்ணவும் அவர் மனது இடங்கொடுக்கவில்லை. எப்படியாயினும் அவரைச் சென்று காண்பதே சரியென்று உடனே சிறைக்குப் புறப்பட்டார். சிறையை அடைந்ததும் அதிகாரிகளிடம் உத்தரவு பெற்று ஜமீன்தார் அடைபட்டிருந்த அறையையடைந்தார். சிறையின் ஒரு மூலையில் துக்கமே வடிவாய் ஜமீன்தார் தலையைத் தொங்கவிட்ட வண்ணம் உட்கார்ந்திருந்தார். தன் அறைக்குள் ஒருவர் நுழைந்ததைக் கண்டதும் தலையை நிமிர்த்தினார். வக்கீலும் அவரது அப்பொழுதைய நிலையைக் கண்டு கண்ணீர் விட்டார். பிறகு அவர் "நான் பத்திரிகைகளில் வெளிவந்த விஷயத்தைப் படித்து அறிந்துகொண்டேன். நீர் அப்படிப்பட்ட காரியம் செய்ததுண்டா?

"நான் அந்தக் கொலையைச் செய்யவே இல்லை. அப்படிச் செய்ய எண்ணியதும் கிடையாது."

"அப்படியானால் உம்முடைய துப்பாக்கி பிணத்தருகில் எப்படி வந்தது? அதுவும் அத் துப்பாக்கியாலேயே அவள் கொல்லப்பட்டிருக்கிறாள். துப்பாக்கிகள் தம்மிடத்தை விட்டுத் தாமே சென்று மனிதர்களைச் சுடுவது கிடையாது."

"என்னுடைய துப்பாக்கியை நான் என்னுடைய காரியாலய அறையிலேயே வைப்பது வழக்கம். அங்கிருந்து அதை நான்

சந்தர்ப்பம் வரும் என காத்திருப்பது சித்தம் குறைந்த செயலாகும். ஆனால் சந்தர்ப்பத்தை சிருஷ்டிக்க வேண்டும்.

எடுக்கவேயில்லை. அது இங்கெப்படி வந்தது என்பது எனக்குத் தெரியாது."

"இவ் விஷயங்கள் எனக்கு நம்பிக்கை தரத்தக்கனவாயில்லை. நீர் ஏதோ சில விஷயங்களை மறைக்கிறீர் என்பது தெரிகின்றது."

ஜமீன்தார் சோமசுந்தரம் பிள்ளை தம்முடைய வாலிப வயதில் நடந்த எல்லாவற்றையும் சுருக்கிக் கூறி முன்னாள் இரவு நிகழ்ந்த சம்பவங்களையும் விவரித்தார். எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்ட துரைச்சாமி ஐயங்காருக்கு உண்மையான விஷயம் எதுவென விளங்கவில்லை. பிறகு அவர் "இந்த சிக்கலான விஷயங்கள் ஒரு வக்கீலின் மூளைக்கு எட்டாது. மிகுந்த சாமர்த்தியமும் யூக சக்தியுமுள்ள ஒரு சிறந்த துப்பறியும் நிபுணனுக்கே இது விளங்கும். நான் ஜயஸிங்கின் துப்பறியும் திறமையைப் பற்றி வெகுவாசக் கேள்விப்பட்டிருக்கிறேன். பல சிக்கலான விஷயங்களில் உழைத்து வெற்றி பெற்றிருக்கிறார். அவரை இந்தக் கொலையில் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். உம்முடைய அபிப்பிராயமென்ன?"

"தாங்கள் கூறுவதற்கு நான் ஒன்றும் தடை சொல்லப் போவதில்லை. என் மனம் குழம்பிப் போயிருக்கின்றது. எப்படியும் நான் ஒரு கொலையாளி என்னும் பெயருடன் இறக்க விரும்பவில்லை. எனக்கும் கொலைக்கும் யாதொரு வித சம்பந்தமும் கிடையாது. ஒரு குற்றமுமற்ற என் மனைவி இதைப்பற்றி மிகவும் வருந்தித் துன்பமடைவாள். சீக்கிரம் சென்று காரியத்தைக் கவனியுங்கள்."

உடனே வக்கீல் துரைச்சாமி ஐயங்கார் விடை பெற்றுக் கொண்டு வெளிவந்து ஜயஸிங்கிற்கு ஓர் தந்தி கொடுத்து தமது கக்ஷிக்காரரின் சார்பாக உண்மைக் கொலையாளியைக் கண்டுபிடிக்க வேண்டிக்கொண்டார். தந்தியைப் பெற்ற ஜயஸிங் தன் நண்பன் ஸ்ரீனிவாஸனை அழைத்துத் தந்தியைக் காண்பித்தான். ஸ்ரீனிவாஸன் அக் கொலையைப் பற்றி பல பத்திரிகைகளில் வெளிவந்திருக்கும் செய்திகளைச் சிகப்பு மையினால் குறிப்பிட்டு ஜயஸிங்கிடம் காண்பித்தான். நிதானமாக அவற்றை வாசித்த பிறகு தந்தியையும் வாசித்து முடித்தான். அவன் மனது சிந்தனையிலாழ்ந்தது. சிறிது நேரம் பொறுத்து 'ஸ்ரீனிவாஸா! நான் உடனே புறப்பட்டு வருவதாக துரைச்சாமி ஐயங்காருக்குத் தந்தி கொடு' என்றான்.

நமது மாதர்கள் பெரும் தூக்கத்தினின்றும் விழித்து, வீரத்தையும் தேசாபிமானத்தையும் போற்றும் நாள் எந்நாளோ, அந் நாளே நம் நாட்டு நன்னாளாகும்.

ஜயஸிங்கும் ஸ்ரீனிவாஸனும் புறப்பட்டு வக்கீல் துரைச்சாமி ஐயங்கார் வசிக்குமிடத்தை யடைந்தனர். வக்கீல் எல்லாவற்றையும் சுருக்கமாகக் கூறினார். ஜயஸிங் அமைதியாக எல்லாவற்றையும் கேட்டான். பிறகு 'நான் முதன் முதலில் சோமசுந்தரம் பிள்ளையைப் பார்க்க வேண்டும். அதன் பிறகே மற்றவற்றை கவனிக்க வேண்டும்.' என்றான். உடனே மூவரும் சிறைச்சாலையை யடைந்து ஜமீன்தார் அடைபட்டிருந்த அறையினுட் சென்றனர். ஜயஸிங் சோமசுந்தரம் பிள்ளையை உற்று நோக்கினான். அவன் மனது சிறிது தெளிவடைந்தது. பிறகு அவன் பல கேள்விகள் கேட்டான். சோமசுந்தரம் பிள்ளை தெளிவாக தமக்குத் தெரிந்த விஷயங்களை விவரமாக எடுத்துரைத்தார். ஜயஸிங் தான் இன்றிரவு முழுவதும் தீர யோசித்து ஒரு முடிவுக்கு வந்த பின் நாளைக் காலை என் ஆராய்ச்சியை ஆரம்பிக்கிறேன் எனக் கூறி தம் நண்பனுடன் போலீஸ் இன்ஸ்பெக்டர் பீப்பாய் துரையின் ஆபீஸை அடைந்தான். துரை தாம் தக்க சாக்ஷியங்களுடன் சோமசுந்தரம் பிள்ளையைக் கைதி செய்ததைப் பற்றி பெருமையாகப் பேசிக்கொண்டார்.

ஜயஸிங்:—இறந்த அந்தப் பெண் யார்? அவள் இருப்பிடம் யாது? எதற்காக இரவில் அந் நேரத்தில் தனியாக ஜமீன்தார் மாளிகைக்குப் போனாள்? அவள் சுற்றத்தார் முதலியோர் எங்கிருக்கின்றனர்?

போலீஸ் புலி:—இறந்தவள் பெயர் ஸாரஸமோகனா. வயது சுமார் இருபத்தாறு. அவளுடைய சொந்த ஊர் இதுவல்ல. ஏதோ ஒரு காரியமாகவே இங்கு வந்தாள் எனத் தெரிகிறது. தாசி குலத்தைச் சேர்ந்தவள் என்று தெரிகிறது. வயதான தாயும், ஒரு சகோதரனும் அவள் தற்காலிகமாக வசித்து வந்த அந்த வீட்டிலிருக்கின்றனர். ஜமீன்தாருக்கும் அவளுக்கும் ஏதேனும் சம்பந்தமிருக்கலாம்.

இவ் விஷயங்களைக் கூறியதற்காக வந்தனம் செய்து விட்டு ஜயஸிங் ஸ்ரீனிவாஸனுடன் விடைபெற்றுக்கொண்டு தனது "லக்ஷ்மி விலாஸ்" த்தை அடைந்தான். அடுத்த நாட் காலை ஜயஸிங் ஸ்ரீனிவாஸனுடன் ஜமீன்தார் சோமசுந்தரம் பிள்ளையின் மாளிகையை அடைந்து கொலை நடந்த இடத்தைக் கவனமாகப் பரிசோதித்தான். ஸாரஸமோகனாவின் காலடிகளும் ஜமீன்தாரின் காலடிகளும் தவிர வேறு காணப்படவில்லை. பிறகு அதன் சுற்றுப்புறமெங்கும் கவனித்தான். ஜமீன்தார் இரவு வாசித்துக்கொண்டிருந்த அறையின்

மானிடர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமெனவே இச் சீவனை நமக்கு கடவுள் கொடுத்திருக்கிறார்.

வெளிப்புறத்தின் சமீபமும் அதைச் சுற்றி சில கெஜ தூரங்களிலும் சில புதிய காலடிகள் காணப்பட்டன. அதை உன்னிப்பாகக் கவனித்து அதை குறித்துக்கொண்டான். அந்தக் காலடிகள் விசேஷமாகக் காணப்பட்டன. அதன் வலது காலடியின் ஐந்தாவது சிறு விரல் அடையாளம் காணப்படவில்லை. எல்லாவற்றிலும் அது இல்லாமலிருந்தது. மற்றும் அகண்டு நீண்ட பாதங்களின் உருவம் விவரமாகப் பதிந்திருந்தது. அவை யெல்லாவற்றையும் ஜயஸிங் நன்றாக பரிசோதித்து அறிந்து கொண்டான். பின்னர் ஜமீன்தாரின் அறையை யடைந்து அதை ஆராய்ந்தான். மாளிகையிலுள்ள எல்லா வேலைக்காரர்களும் துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டதும், பிறகு எஜமானரின் 'கொலை! கொலை!!' என்ற கூக்குரலும், அதன் பிறகு தாங்கள் அந்த இடத்திற்குச் சென்றதும், அங்கு ஜமீன்தார் தம் மீது இரத்தக் கறைகளுடன் உட்கார்ந்திருந்ததும் தவிர தங்களுக்கு வேறொன்றும் தெரியாது என்றனர். பிறகு ஜயஸிங் இன்னும் யாராவது இங்கு வசிப்பவர்கள் இருக்கின்றனரா என்று ஒரு முதிய வேலைக்காரனை விசாரித்தான். எல்லா பணியாளரையும் மற்றுமுள்ளோரையும் தாங்கள் விசாரித்து விட்டீர்கள். ஆனால் ஜமீன்தாரின் அந்தரங்கக் காரியதரிசி அருணாசலம் ஒருவரைத்தான் தாங்கள் விசாரிக்கவில்லை. கொலை நடந்த இரவு முன் மாலை முதல் அவர் சீல் வாயுவினால் அவஸ்தைப்படுகிறார். இது மாதிரி அடிக்கடி திடீர் திடீர் என்று அவருக்கு இது தொந்தரவு விளைப்பது உண்டு. போலீஸ் இன்ஸ்பெக்டர் அவரை விசாரித்தார். அதற்கு அவர் தாம் இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்ததாகவும், ஆனால் தமக்கு துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டதைத் தவிர வேறொன்றும் தெரியாதென்றும், திடீரென்று இரவு அந்த நேரத்தில் வெடிச் சத்தம் கேட்டது தம்மை திடுக்கிடச் செய்து விட்டதென்றும், அதனால் அந்த சீல் வாயு பின்னும் அதிகப்பட்டிருப்பதாகவும், பிறரை இச் சமயத்தில் பார்த்துப் பேசலாகாதென்று டாக்டர் கூறியிருப்பதாகவும் தெரிவித்தான்.

இதைக் கேட்ட ஜயஸிங்கின் மனதில் சில புதிய எண்ணங்கள் தோன்றின. அருணாசலத்தின் அறை, ஜமீன்தாரின் அறைக்குப் பக்கத்திலிருப்பது என்று அறிந்துகொண்டு, அன்று அம் மட்டும் போதுமெனத் திரும்பினான். அடுத்த நாட் காலை சென்றும் அதே பதில் கிடைத்தது. மூன்றாம் நாளும் ஜயஸிங் சென்றான். அன்றைய தினமும் காணமுடியவில்லை. ஜயஸிங் பற்பல சந்தேகங்கொண்டான். ஆயினும் தன்னிருப்பிடம் திரும்பினான்.

* * * * *

தேசமே உங்கள் கோவில். அது உங்கள் ஒவ்வொருவரிலும் திகழ்வதாக எண்ணுங்கள்.

அருணாசலம் தன் அறையில் படுக்கையில் படுத்தபடி வலி பொறுக்க மாட்டாமல் அரற்றியபடி இருந்தான். சிறிது நேரத்தில் டாக்டர் வந்து சேர்ந்தார். பெரிய டாக்டர் ஓர் அவசர காரியமாக வெளிச் சென்றிருப்பதால், தம்மை அனுப்பியதாக வந்த உதவி டாக்டர் தெரிவித்தார். பிறகு தேகமெங்கும் உன்னிப்பாகக் கவனித்தார். கை, கால் பிடிப்புகளில் மருந்தைத் தடவினார். பிறகு கால், கணுக்கால் முதலிய விடங்களிலும், பற்பல சிகிச்சை செய்தார். பிறகு திடீரெனச் சிறிதும் எதிர்பாராதவாறு அறையின் கதவை மூடித் தாளிட்டு விட்டு பின்வருமாறு கூறினார்:— "உம்முடைய நோய் வெகு விரைவில் குணப்பட்டு விடும். இதற்கு முன் கவனித்த டாக்டர் நோயின் உண்மைக் காரணத்தை அறியவில்லை. நான் அதைக் கண்டுபிடித்து விட்டேன். இனி சிகிச்சை செய்வது சுலபம். நேற்றிரவு ஜமீன்தார் சோமசுந்தரம் பிள்ளை, ஸரஸமோகனாவுடன் பேசியதை மறைந்திருந்து ஒட்டுக் கேட்டீர். அதன் பிறகு எக் காரணத்தாலோ ஜமீன்தாரின் ஆபீஸ் அறையிலிருந்த அவருடைய துப்பாக்கியை யெடுத்து, ஸரஸமோகனா அவ்விடம் விட்டு சில கெஜ தூரம் சென்றதும் சுட்டுக் கொன்றீர். அதன் பிறகு கீல்வாயுவினால் தாக்கப்பட்டதாக அப்பொழுது முதல் மூன்று நாளாக எல்லோரையும் ஏமாற்றினீர். ஆனால் நான் ஏமாறவில்லை. நீர் கொலை செய்ததற்குக் காரணம் அநேகமாகக் 'காதல்' விஷயமாக இருக்க வேண்டும். அதற்காக உம்மை கைது செய்கிறேன்" எனக் கூறி ஓர்வித சிழ்க்கை யடித்தான். சிறிது நேரத்தில் ஸ்ரீனிவாஸனும், போலீஸ் புலி இன்ஸ்பெக்டர் பீப்பாய் துரையும், தட தட வென்று அறையின் கதவைத் தட்டினர். பின்னர் உள் நுழைந்து அருணாசலத்தை ஜாக்கிரதையாக விலங்கிட்டனர்.

உதவி டாக்டர் யார்? நமது ஜயஸிங்கே "நான் இனித் தப்ப முடியாது. ஆகையால் உண்மையைக் கூறி விடுகிறேன். இவ்வளவு சாமர்த்தியமாக என்னை இந்த டாக்டர் கண்டு பிடிப்பார் என நான் நினைக்கவில்லை. டாக்டர், ஜயஸிங் என்றே நினைக்கிறேன். என் தந்தை முன்னம் சென்னை அரசாங்கத்தின் மந்திரியாயிருந்தார். அவர் சம்பாதித்த திரண்ட செல்வம் என் அறிவீனத்தால் பாழாயிற்று. நான் அவருக்கு ஒரே குமாரன். ஆகையால், என் இஷ்டப்படி யெல்லாம் நடக்க விடுத்தார். அதுவே இக்கதிக்கு என்னை ஆளாக்கியது. சிறு வயதில் பெற்றோர் தம் மக்களைக் கண்டித்து நல் வழியில் திருப்ப வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதல்லவா? அவர் இறந்ததும், நான் சகவாச

உங்கள் சகோதரர்கள் தாழ்மையான நிலையிலிருந்தால் அதற்குப் பொறுப்பு நீங்கள் என்பதை நினையுங்கள்.

தோஷத்தால் கண்டபடி முறை தவறி நடந்தேன். குடிப் பழக்கம் வெகு எளிதில் பற்றிக்கொண்டது. ஒருவன் உயர்வதற்கும் தாழ்வதற்கும் நண்பர்களும் காரணமாவர். நல்லிணக்கமல்லது அல்லற்படுத்துமன்றோ! என் குணத்திற் கேற்ற நண்பர்களும் சேர்ந்தனர். யுக்த வயதில் தம் மக்களுக்கு விவாகம் செய்து வைக்காததால் நேரிடும் துன்பங்களை அளவிட்டுக் கூற முடியுமோ? பின்னர் வேசையர் வீடுகளுக்கும் செல்ல வாரம்பித்தேன். அதில் ஏராளமான திரவியம் விரயமாயிற்று. இன்றைக்குச் சுமார் ஏழு வருடங்களுக்கு முன் இந்த ஸரஸமோகனாவைச் சென்னையில் சந்தித்தேன். சுமார் மூன்று வருட காலத்தில் என்னிடமுள்ள செல்வம் யாவற்றையும் பறித்துக்கொண்டாள். முதன் முதலில் சந்தித்தபொழுது, தான் இதுவரை புருஷ வாஸனையே படாதவளென்றும் என்னையே புருஷனாகக் கொண்டுள்ளதாகவும் வெகுவாக ஸாகஸம் செய்தாள். நானும் நம்பி ஏமாறினேன். என் சொத்து முழுமையும் கவர்ந்து கொண்ட பிறகு என்னை வெறுத்தாள். ஆத்திரமிகுதியால் எப்படியும் உன்னைக் கொன்று பழி தீர்த்துக்கொள்கிறேன் என்று சபதம் செய்தேன். பிறகு எங்கெங்கோ ஒரு வருஷம் அலைந்து, கடைசியாக என் தகப்பனாரின் நண்பர் ஒருவரால சிபார்சு செய்யப்பட்டு, இந்த ஜமீன்தாரின் அந்தரங்கக் காரியதரிசியாக மாதம் நூறு ரூபாய் சம்பளத்தில் அமர்ந்து உண்மையாகவே உழைத்தேன். எனக்கும் அவருக்கும் யாதொருவிதமான மனஸ்தாபமுமில்லை. கொலை நடந்த அன்றிரவு நான் வழக்கம் போல் பத்து மணிக்குப் படுக்கைக்குச் சென்றேன். ஜமீன்தார் எப்பொழுதும் போல் தம்முடைய படுக்கை யறையில் படுத்துக்கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு ஜமீன்தார் யாருடனோ மெதுவாகக் குசு குசுவென்று பேசுவது கேட்டது. அது ஓர் பெண்ணின் குரலென்பதும் தெரிந்தது. இந்நேரத்தில் யாருடன் பேசக்கூடுமென படுக்கையை விட்டு வெளிவந்து சம்பாஷணையை ஒட்டுக் கேட்டேன். பிறகு அந்தப் பெண் ஸரஸமோகனா என்றறிந்ததும், கடுங் கோபம் கொண்டேன். ஜமீன்தார் அறையினின்று விளக்கு வெளிச்சம் தெளிவாக அவள் முகத்தின் மீது வீசிற்று. கேவலம் இவள் தாசியென்றறிந்தும் என் கோபம் அளவு கடந்தது. அதிலும் நம்மை இவள் அடையு முன்பே ஜமீன்தாரின் வேசையாக இருந்ததுமன்றி, தான் புருஷர் முகத்தை ஏறிட்டுப் பார்க்காத கன்னிகை என்ற மாய ஜாலங்களால் என்னை மயக்கி ஏமாற்றியதை

தேசீய விஷயத்தில் தலையிடுவதில்லை எனச் சொன்னால், அது தர்மத்திலிருந்து தளர்வது என்று திட்டமாய் அறிந்துகொள்ள வேண்டும்.

197899

ருஷிய மாணவர் வாழ்க்கை.

ஜனாப் எஸ். சையது அஹமது அவர்கள்.

ஏராளமான பணத்தைச் செலவு செய்து, பிரமாண்டமான கட்டடங்கள் கட்டி, பற்பல பொருள்களைப் பரப்பி, விலையுயர்ந்த நாற்காலி மேஜைகளைப் போட்டு, இங்குமங்கும் பாராமல், கை கால்களை ஆட்டாமல், நான்கு சுவருக்குள் கைதிகளைப்போல் உட்கார வைத்து, விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் புத்தகங்களி லிருக்கும் பாடங்களைத் தடிப் பிரயோகத்தால் மூளையில் ஏற்றி, கிடைத்தற்கரிய இளமைப் பருவத்தைப் பாழாக்கிக் கையில் விண் ணப்பத்துடன் இளைஞர்களைத் தெருத் தெருவாய் வேலைக்காக அலைய விடுவதுதான் தற்கால இந்தியக் கல்வி முறையாகும். காற்று வேக மாய் வீசினால் அந்தரத்தில் பறந்து போய்விடத் தக்க திரேகக் கட்டு வாய்ந்தவர்களாயும், மனோ பயிற்சி பெறாதவர்களாயும், சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் அற்றவர்களாயும், சோம்பலையே பூஷணமாகக் கொண்டவர்களாயும், அனுபவ சூனியர்களாயும் இந்திய வாலிபர்கள் கலாசாலைகளை விட்டு வெளிவருகிறார்கள். உண்மையான கல்வி இங்கு இல்லை. தேசிய நோக்கத்தைப் பூர்த்தி செய்யத்தக்க வாலிபர்களை உற்பத்தி செய்யவேண்டுமென்று சர்க்காருக்குக் கவலையில்லை. அடி மைப் புத்தியுள்ள குமாஸ்தாக்களைச் சிருஷ்டிக்கும் சாலைகளாகவே நமது சர்வகலாசாலைகள் விளங்குகின்றன.

ருஷியாவிலோ கல்வியளிக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது. கல்வி கற்கும் வயது வந்தவுடன் நன்கு பயிற்சிபெற்ற திறமைசாலிகளான உபாத்தியாயர்களிடம் சிறுவர், சிறுமியர் ஒப்ப டைக்கப்படுகின்றனர். தாம் விரும்பியபடி உருவகப்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்ட களிமண் உருண்டை என்று சிறுவர், சிறுமி யரை உபாத்தியாயர் கருதாது, அவர்களும் அறிவுள்ள, சுயசிந்தனை வாய்ந்த ஜீவன்கள் என்று கொண்டு ஒவ்வொருவரையும் உள்ளூர உற்று நோக்கி, அவர்களிடம் இயற்கையாய் அமைந்துள்ள குணா குணங்களை ஆராய்கின்றனர். அப்புறம் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்கின்றனர். ருஷிய உபாத்தியாயர்கள் மாணவர்களை ஆட்டிவைக்கும் சர்வாதிகாரிகளா யில்லாது வழிகாட்டிகளாகவே யிருக்கின்றனர். மாணவர் விரும்பினால் உபாத்தியாயர்களை விலக்க வும் உரிமையுண்டு. (சமீபத்தில் இத்தகைய சில உரிமைகளை நீக்கி விட்டு, உபாத்தியாயர்களுக்குக் கொஞ்சம் அதிகாரம் கொடுத்திருப்ப தாகப் பத்திரிகையில் படித்தேன்.)

எல்லாரும் கட்டாயமாகக் கல்வி கற்றே தீரவேண்டும். குழந் தைகளுக்காக அழகான இருப்பிடங்களும், கல்விச்சாலைகளும், விளை யாடுவதற்கு நேர்த்தியான தோட்டங்களும் மைதானங்களும் நிர்மா ணிக்கப்பட் டிருக்கின்றன. மாணவர் வாழ்க்கை சோம்பலை உண் டாக்கத் தக்கதல்ல. வெறும் 'புத்தகக் கல்வி' மட்டுமின்றி 'அனுப வக் கல்வி'யும், தொழிற் கல்வியும் அளிக்கப்படுகின்றன. சாதாரண நடுத்தரப் பாடசாலையிலுள்ள மாணவருடைய தினசரி வாழ்க்கை யைச் சுருக்கமாகக் கீழே தருகின்றேன்.

காலை 7 மணிக்கு எல்லோரும் படுக்கையை விட்டு எழுந்திருக்கி றார்கள். (ருஷியா குளிர் தேசமாகையால் சூரியன் உதயமாகிக் கொஞ்சம் உஷ்ணம் அதிகரித்த பிற்பாடே வெளியே எழுந்துவர முடியும்.) 15 நிமிஷம் தேகப் பயிற்சிசாலைக்குச் சென்று விளையாடு கிறார்கள். 7-30 மணிக்குக் காலை உணவு உட்கொள்ளுகிறார்கள். சரியாக 8 மணிக்குப் பள்ளிக்கூடம் ஆரம்பமாகிறது. 12 மணிக் குப் போதனை முடிவடைந்து ஒரு மணி நேரம் இடைவேளைச் சாப் லும் ஈடுபடுகிறார்கள். சிலர் அறிவு வளர்ச்சிக்குரிய நூல்களை வாசிக்

எண்ணியதும் என் மனம் திடமடைந்தது. என்னுடைய பழைய சபதமும் நினைவிற்கு வந்தது. ஆகையால் உடனே ஜமீன்தாரின் காரியாலய அறையை எப்பொழுதும் என்னிடமிருக்கும் சாவியால் மெல்லத் திறந்து அவருடைய துப்பாக்கியை எடுத்து வந்தேன். அதற்குள் அவர்களுடைய சம்பாஷணை முடிந்து சிறிது தூரத்தில் அவள் செல்வதைப் பார்த்தேன். குறிப்பாக துப்பாக்கியால் சுட்டு விட்டு துப்பாக்கியை அங்கேயே எறிந்து விட்டு விரைவாக என் அறையை யடைந்து நோயுற்றிருப்பதாக நடித்தேன். என்னு டைய சபதத்தை விட இவள் நமக்கு முன்னரே ஒருவனால் கற் புக் குலைந்தவள் என்னும் மானக்கேடான விஷயமே, என்னை இக் கொலை செய்யும்படி தூண்டிற்று'' என்றான். இவ்வாறு காதலால் நேர்ந்த கடுங் கொலைகள் அநேகமன்றோ?

புரோகிதர்கள் பொருள் கொடுப்பவர்களைப் பூஜை செய்து, பொருளற்ற வர்களைச் சபிக்கிறார்கள்.

மகா ஜனங்களின் யுகம் மலர்ந்து விட்டது.

பாட்டுக்காகக் கலைகிறார்கள். ஒரு மணிக்கு மீண்டும் பள்ளிக்கூடம் தொடங்கி மாலை 3 மணிக்கு முடிவடைகிறது.

இயந்திர சாஸ்திரம், அரசியல்—பொருளாதார சாஸ்திரம், சமூக சாஸ்திரம், பிராணி சாஸ்திரம், விஞ்ஞான சாஸ்திரம் ஆகியவைகளும், சரித்திரம், கைத்தொழில், தச்சு வேலை, புத்தக பைண்டிங், விவசாயம் முதலிய வேறு தொழில்களும் விசேஷமாகப் போதிக்கப்படுகின்றன. மாணவர்களுக்குத் தக்க புஷ்டியான ஆகாரம் கொடுக்கப்படுகிறது அவர்களுடைய உடை, உறைவிடம் முதலியவைகளில் விசேஷ கவனம் செலுத்தப்படுகின்றது.

மாலை 3 மணிக்கு, பள்ளிக்கூடம் முடிந்தபின், உபாத்தியாயருடன் மாணவர் கூட்டம் கூட்டமாய் ஏற்கெனவே தீர்மானித்து வைத்தபடி தொழிற்சாலைகளுக்கோ, வியாபார ஸ்தலங்களுக்கோ, ஆஸ்பத்திரிக்கோ நேரில் சென்று, அங்கே நடைபெறுவதைக் காணுகிறார்கள். விஷயங்களை விளக்கமாகத் தெரிந்துகொள்ளுகிறார்கள். இளைஞர்கள் தனித்தனியாகவும் போய்ப் பார்த்து வருவதுண்டு. எந்தத் தொழிற்சாலையிலும் போய்ப் பார்க்க மாணவருக்குச் சுதந்திரமுண்டு. அப்படி யாராவது தடை செய்தால், அவ் விஷயம் உடனே பத்திரிகைகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வளவுதான். மாணாக்கரின் நோக்கம் அடுத்த நாளே நிறைவேறிவிடும்.

பள்ளிக்கூடங்களுக்குச் சேர்ந்த தொழிற்சாலைகளும், நிலமும் உண்டு. அங்கே இளைஞர்கள் கைத்தொழிலும், உழவு தொழிலும் நன்கு பயின்றுகொள்ளுகிறார்கள். சாயங்காலத்தில் நாடகங்களுக்கோ, படக்காக்ஷிகளுக்கோ போகிறார்கள். அங்கே இவர்களுக்கு வேண்டிய நாடகமோ, படமோ காண்பிக்கப்படுகிறது. மாணவர்கள் ஒன்றுகூடிச் சிறுசிறு நாடகங்கள் நடிப்பதுமுண்டு.

இரவில் கதைகள் படிப்பதற்கும், கதைகள் சொல்லுவதற்கும், இலக்கியம், விஞ்ஞான சாஸ்திரம் முதலியவைகளைப்பற்றித் தர்க்கிக்கவும் சபைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இளைஞர்கள் மிகவும் உற்சாகத்தோடு இவைகளில் கலந்துகொள்ளுகின்றனர். உபந்நியாச சபைகளில் உபந்நியாசம் செய்கிறார்கள். வருஷா வருஷம் போட்டிப் பந்தயங்கள் நடைபெறுகின்றன; பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஐந்தாவது நாளும் பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை நாளாகும். அன்று எல்லாரும் தமது அறைகளைச் சுத்தப்படுத்துவதிலும், ஆடைகளைத் துவைப்பதிலும், இதர சொந்த வேலைகளி

அவதார புருஷர்களெல்லாம் மனித கோடிகளின் நன்மைக்கே வந்தார்கள்.

தமிழ் மொழியும் பாரதியாரும்.

பண்டித திரு. இராஜமாணிக்கம் அவர்கள்.

தமிழ் நாட்டிற் பிறந்த நாம்—தமிழராய நாம்—நாடோறும் பேசிவரும் மொழி தமிழேயாகும். சங்கப் புலவர் நாவில் உறைந்து, வித்துவான்கள் வாக்கில் விளையாடி, மூவேந்தர் அன்புக்கு உரியதாய் அவர்தம் மடியில் தவழ்ந்து வளர்ந்து, என்றும் பொன்றாப் புகழுடனும் குன்றா இளமையுடனும் உலவிவரும் தமிழ் மொழியினது பெருமை எத்திறத்தது! நாம் சிறு குழவியாய் இருக்கையில் நம அன்னையின் தீம்பாலைப் பருகிப் பசி தீர்ந்து, அவள் மடியிற் கிடக்க, அவள் தன் பவள இதழ்களால் முத்தமளித்துக்

கிறார்கள். மற்றுஞ் சிலர் கிராமாந்திரங்களில் நெடுந்தூரம் சென்று, அங்குள்ள நிலைமையை அறிந்து வருகிறார்கள்.

ஆண்களும், பெண்களும் ஒரு பள்ளிக்கூடத்திலேயே படிக்கிறார்கள். பெண்களுக்காகத் தனி விதிகளோ, தனி உரிமைகளோ கிடையா. ஆண்களோடு அவர்களும் சரிசமமாய்த் திரேகப் பயிற்சி செய்கிறார்கள். எல்லாத் துறைகளிலும் ஆண்களோடு ஈடுபடுகிறார்கள்.

ஓய்வு நாட்களில் மாணவர்களும், மாணவிகளும் ஆங்காங்கே நடைபெறும் விசேஷங்களில் கலந்துகொள்ளுகிறார்கள். தங்கள் தங்கள் சொந்த ஊர் திரும்பியபின் கண்டவைகளையெல்லாம் எழுதி வைக்கிறார்கள். இதனால் விஷயங்களை ஊன்றிக் கவனிக்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டாகிறது. புத்தகங்களில் ஒரு ஊரைப்பற்றிப் படிப்பதைக் காட்டிலும் அதை நேரில் சென்று அறிந்து வருவதே மேல்.

இத்தகைய கல்வி முறையால் ருஷிய வாலிபர், ஆற்றல் வாய்ந்தவர்களாயும், நல்ல நகரவாசிகளாயும் வெளியேறுகிறார்கள். அவர்கள் எத்தகைய சரீரப் பிரயாசை எடுத்துக்கொள்வதிலும் பின்வாங்கக் கூடியவர்களாயில்லை.

பெரும் நோக்கத்திற்காக உங்கள் உயிரையும் அளிக்கத் தயாராயிருங்கள்.

கொஞ்சிப் பாராட்டிப் பேசியது தமிழ் மொழியில் அன்றோ? உலகில் தோன்றியது முதல் உலகினின்றும் நீங்கும்வரை நாம் நம் உற்றார், பெற்றார் முதலாய மக்களோடு அளவளாவுவதும் தாய்மொழியில் அல்லவா?

இவ்வாறு நம் உடலோடும் உயிரோடும் கலந்து ஒன்றாய் மறைந்து ஒளிரும் நம் தமிழ் மொழியை—இனிய தாய் மொழியை—அகத்தும் புறத்தும் ஒளியளிக்கும் ஒப்பற்ற மொழியை—இரவிலும் பகலிலும், கனவிலும் நனவிலும் நம் எண்ணங்களை வெளிப்படுத்தப் பேருதவியளிக்கும் பேரானந்த மொழியை—இம்மை மறுமை யிரண்டிலும் நமது உயிர்க்கு உற்ற துணையாய் இருந்து உதவியளிக்கும் உயர் மொழியை மறப்பதும் அதனைப் பயிற்சி செய்யாது கைவிடுவதும் நமது உயிரையே நாம் அழிப்பதை யொக்கும். எங்ஙனம் அழகு மிக்க செந்தாமரை மலரொன்றைப் பெற்றவள் அதன் அழகையும் இனிமையையும் அனுபவிக்காது வாளாவிருத்தல் அறிவுடைமைத்தாகாதோ, அங்ஙனமே தன்னகத்தே தன்னோடு தோன்றிய தமிழ் மொழியைப் போற்றவும், போற்றி அதன்கண் பொலிவுற்று விளங்கும் உயிர்க்கு உறுதியைப் பயக்கும் உண்மைப் பொருள்களை உய்த்துணர்ந்து இன்பத்தை நுகராமை தமிழராய நம்மனோர்க்கு அறிவுடைமைத்தாகாது.

நமது வயிற்றுப் பிழைப்புக்காகவும், பிற காரணங்களுக்காகவும் ஆங்கிலம் முதலாய பிறமொழிகளை நாம் வருந்திக் கற்கவேண்டுவது இன்றியமையாததாயினும், இவற்றிற்காக நமது தேனினும் இனிய தென்மொழியைக் கற்காது கைநழுவ விடுதல் அறியாமையாகும் அன்றோ? நம் தமிழ் மக்களே தம் தாய்மொழியை நிராகரிக்கின்றனரேயன்றிப் பிறநாட்டார் எவரும் தத்தம் மொழியை நிராகரித்திலர். ஆங்கில மக்கள் முதலில் தமக்குரித்தாய தாய்மொழியாகிய ஆங்கிலத்தை நன்றாகக் கற்ற பின்னரே வேறு மொழிகளைக் கற்கின்றனர்; தமது மொழியைக் கல்லாது பிறமொழிகளைக் கல்லார். இத்தகைய உயர்நோக்கு இருப்பதாற்றான் அவர்கள் அகன்ற அறிவும், பழுத்த நாகரீகமும், கொழுத்த செல்வமும் படைத்துச் சிறப்புற்று விளங்குகின்றார்கள். நம்மவர்களோ, தமக்குரிய மொழியை ஒரு சிறிதும் கல்லாது, தாய்மொழியின் இன்பத்தை நுகராது கொன்னே காலங் கழித்து மாய்கின்றனர்.

ஒரு நாடு அறிவிலும் நாகரீகத்திலும் உயர்ந்து விளங்க வேண்டுமாயின், அந் நாட்டார் தம் தாய்மொழியில் தேர்ச்சியுற்று, ஒற்றுமை பெற்று உயர்வடைதல் வேண்டும். ஈன்ற தாயினை விட்டு, அடுத்த

மனித சமூகம் மதிக்கவில்லை யென்று சத்தியத்தை அவமதிக்க வேண்டாம்.

கத்து முதியாளைப் போற்றல் எத்துணைக் கேடு பயக்குமோ, அத்தன்மைத்து தமிழைப் போற்றாது பிறமொழிகளைப் போற்றல்.

இனிப் பிறமொழிகட்கும் தமிழுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் காண்பாம். தமிழ் இன்ன காலத்தேதான் தோன்றியதென்று எவராலும் வரையறுத்துச் சொல்ல வியலாது. மிகப் பழைமை வாய்ந்து, அஃது என்றும் தன் இளமையும் புகழும் குன்றாது உலவிக் கொண்டு இருக்கின்றது. தமிழைப்போலவே பழைமையுடையனவென்று கூறத்தக்க ஆரியம், கிரேக்கம், இலத்தீன், ஈப்ரு, அராபி, சீனம் ஆய பல நாட்டு மொழிகள் யாவும் உலக வழக்கு ஒழிந்தனவாகத் தமிழ் ஒன்றே பரம்பொருள்போல நிலவுதல் அதன் தனிமாண்புக்குரிய சான்று அன்றோ?

இனித் தமிழ் நூல்களை ஆராயினும் அதன் ஏற்றம் நனிவிளங்கும். மொழியின் அமைப்பையும் தமிழ் மக்களின் பண்டைய நாகரீக இயல்பினையும் திறம்படக் கூறும் ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியம் என்ற புதைபொருள் அமைந்து புத்துயிர் அளிக்கும் புனித நூலை வேறு எம் மொழியிலும் காண இயலாது! இயலாது!! அறம்—பொருள்—இன்பம்—வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் முற்றும் விரித்துக் கூறும் திருக்குறள் போன்ற அரியதொரு நூலை வேறு எம் மொழியில் காண இயலும்? இத் திருக்குறளை ஆங்கிலர், ஜெர்மானியர், பிரஞ்சுக்காரர் போன்ற பல நாட்டவர் தத்தம் மொழியில் மொழிபெயர்த்துக்கொண்டனர் எனின், திருக்குறளின் ஏற்றம் எத்துணை என்று யாம் கூறவல்லேம்! சங்க காலக் காப்பியங்களாய சிந்தாமணி—சிலப்பதிகாரம்—மணிமேகலை என்பன போன்ற அறிவு கொழுத்தும் அரிய நூல்களை யொத்தன எங்குக் காண்பது? பத்துப் பாட்டு—எட்டுத் தொகை போன்ற இயப்பற்கரிய விழுமிய கருத்துக்களைக் கொண்டு, புகழோடு உலவும் நூல்களுக்கு நிகர் எந் நாட்டில்—எம் மொழியில்—எந் நூலைக் கூறக்கூடும்? பக்திச் சுவை சொட்டும்—மனங் கரைத்து மலமகற்றி மாண்புறச் செய்யும் தேவாரம், திருவாசகம் முதலிய அன்பு நூல்களை வேறு எம் மொழியில் காணலாம்? புறத்தையே பெரிதெனக் கொண்டு அகத்தை அடியோடு துறந்த—இயந்திர சக்தி நிறைந்த மேல்நாடுகளில் இத்தகைய நூல்களைக் காணவும் இயலுமோ?

தமிழின் அருமையை நன்குணர வேண்டுமாயின், தமிழ்க் கவிகளைக் கற்கவேண்டும். அவற்றை ஊக்கத்தோடு படித்துப் பொருள் காணின், தமிழின் அருமையும், தமிழ்ப் புலவர் பெருமையும் நன்

நீங்கள் நினைத்து நிலையான தீர்மானத்தை அடைந்துவிட்டால், ஈசனே எதிரிடையாய் வந்தாலும் அச் செயல்களை நிறுத்த வேண்டாம்.

கறியக்கூடும். தமிழ்ப் புலவர்கள் தமிழை எத்துணைச் சிறப்பாகக் கருதி வந்தார்கள்—அதன் இனிமையை எவ்வாறு நுகர்ந்தார்கள் என்பன அவர்தம் நூல்களில் காணலாம். வம்பரும் போற்றும் கம்பர் பெருமான் தாம் பாடிய இராம காதையில் தமிழ் மொழிக் கவியின் அருமையைப் பாராட்டும் திறம் கண்டு மகிழத் தக்கதாகும். மிதிலைக் காட்சிகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கண்டு சென்ற கோசிகனும் கோசலக்குரிசில் இராமனும் இளையனும் சனகன் மாமனை நண்ணினர். வேறெங்கும் கண்டு கண்டு சென்றவர் அங்குமாத்திரம் கண்டு சிறிது நிற்கும்படி நேர்ந்தது. அவ்வாறு அன்னவர் நின்றதையும், நின்றதற்குக் காரணமாயிருந்த காட்சியையும் கூறும் பாசுரத்தில் கம்பர் தமிழ்க் கவியின் அருமையைப் பாராட்டுகின்றார்.

"பொன்னின் சோதி போதினி னாற்றம் பொலிவேபோல்
தென்னுண் டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் மாடே கழிபேடோ
டன்னம் மாடு முன்றுறை கண்டங் கயனின்றார்."

'பொன்னுக்கும் மலருக்கும் தேனுக்கும் முறையே ஒளியும் மணமும் இனிமையும் இயற்கையாய் அமைந்து பொலிவதுபோலச் செவ்விய தென்மொழியாகிய தமிழ்க் கவியில் பொலியும் இன்பமே இவள் (இச் சீதை)' எனக் கம்பர் கூறி மகிழ்வது கருதத் தக்கது. இயற்கையாகப் பொன்னுக்கும் மலருக்கும் தேனுக்கும் உள்ள குணங்களைப்போன்று, தமிழ்க் கவியில் இன்பம் பொலிகின்றதென்று கூறும் கம்பர் திறம் பாராட்டற்பாலது. 'அந்த இன்பமே சீதை' எனக் கூறுவது, பின்னுமோர் படி தமிழின் பெருமையையும் கம்பர் கவித்திறனையும் கவினுறக் காட்டுகின்றன. சீதையின் தனிப் பேரழகின் பெருமையையும், தென்மொழிக் கவியின் அருமையையும் கம்பர் வெகு அழகாக விரித்துளார். 'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளில் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞர்' என இக் கம்பரே நகரப் படலத்து முதற் செய்யுளில் தமிழின் தனி மாண்பையும் அம் மொழிப் புலவரையும் சிறப்பித்துள்ளார். இத்தன்மைத்தென்று இயம்புதற்கு இயலா வகை உரை கடந்ததாய், உணர்ந்தவர் உள்ளம் தூயதாக மென்மேலும் இன்பம் பெருகும் தன்மையில் தமிழ்க் கவியும் சனகன்மா மகளும் ஒற்றுமை கொண்டு விளங்கும். ஆகவே, தமிழ்க் கவியால் சீதையும், சீதையால் தமிழ்க் கவியும் மாறி மாறிச் சிறப்பெய்தக் காண்கின்றோம் அன்றோ?

சர்வ ஜனங்கள் உங்களுக்குத் துணையா யிருந்த போதிலும் அல்லது இல்லாத போதிலும் அல்லது தன்னந்தனியாய் இருந்த போதிலும், உங்கள் கடமையைப் பூரணமாகச் செய்யுங்கள்.

இன்னபடியே சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் பெண்களைத் 'தமிழ்தழிய சாயலவர்' என்றும் 'தமிழ் (இனிமை) தழீஇய சாயலையுடைய பெண்கள்' என உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலுங் காண்க. (சுரமஞ்சரியார் இலம்பகம்—செய்யுள் 2026). எனவே, தமிழ் அல்லது இனிமை என்னுஞ் சிறந்த அமுதைப் பருகாதிருத்தல் நம் நாட்டிற் பிறந்து நமக்கெனவுள்ள அரிய மொழியைப் பற்றாதிருத்தல், அன்பர்களே! எத்துணை வருந்தத் தக்கது!

நமது நாடு—மொழிப் பற்று இழந்துள்ள நம் தமிழ் நாடு—வறுமையால் வாடும் தமிழ் நாடு—அடிக்கடி தமிழ்ப் புலவர்களைமட்டும் பெற்றுக்கொண்டே வருகின்றது. அப் புலவர் பெருமக்களுள் நாம் ஈண்டெடுத்துக்கொண்ட பாரதியார் ஒருவர். அவர் தமிழ் மொழியைப் பரப்பத் தம்மால் இயன்றன முயன்றுளர். அன்னார் கூறியுள்ளவை மனமுருகக் கூடியன—ஆவேசங் கொள்ளச் செய்வன—உடனே தமிழைக் கற்க ஆர்வத்தை யூட்டுவன. அவர் கூறியவை, தமிழ்மாட்டு அவர் கொண்டிருந்த அளவுகடந்த பற்றை அழகுறக் காட்டுகின்றன வென்னல் மிகையாகாது. தமிழ் நாட்டிற்கே—தமிழ் மக்களுக்கே தம் அரிய தாய் மொழியில் பாக்களை யியற்றி அறிவு கொளுத்திய பெருமை பாரதியாருக்கே உரியது. நாட்டுப் பற்றென்னும் அரியாசனத்தில் வீற்றிருந்து சுதந்திரக் கொடி நாட்டியவர் ஸ்ரீமான் பாரதியாரேயாவர். அவர் தமிழ் மொழியினிடத்து எத்துணைப் பற்றுக்கொண்டவர் என்பதை இனிக் காண்பாம்:

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்!
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"

என்னும் பாரதியார் பாவினுக்குள்ள அருமை பெருமைகளைக் கூற யாரே வல்லவர்! பாரதியார் பல மொழிகளில் வல்லவர் என்பது 'யாமறிந்த மொழிகளிலே' என்ற இரு சீர்களால் அறியக் கிடக்கின்றது. பல மொழிகளில் வல்லவர் எனினும் 'தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்' என்றமையால், தமிழ் மொழியின்

உங்கள் வாழ்வைப் பற்றி அறிந்து கொள்வது பெரும் தர்மம் என்று எண்ணுங்கள்.

அருமை பெருமைகளை ஆராய்ந் தனுபவித்த திப்பிய புலமை சான்ற பெரியார் அவர் எனக் கொள்ளக் கிடக்கிறது. 'தமிழராய்ப் பிறந்து, தமிழ் மொழி ஞானமின்றிப் பாமரர்களாய் (Illiterates), விலங்குகட்குச் சமானராய், உலகம் இகழத்தக்க நிலையில் தமிழரே! நீவிர் நுமது தாய் மொழியைப் பயிலாதிருத்தல் நன்றோ? சொல்லுங்கள்!' என்று கேட்டவர்—படிப்பவர் கன்மனதுங் கரைந்து, மொழியிடத் தார்வங்கொள்ளுமாறு தாம் கொண்ட மொழிப்பற்று நிறைந்த நய மொழிகளால் பாரதியார் கூறுவன தனியழகு பெற்றே மிளிர்கின்றன. 'தமிழினது ஓசை—தேமதுரத் தமிழோசை—உலகம் எலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று தமிழராய நம்மனோர் கடனைத் தெளிவாகக் கூறியிருப்பது அவரது மொழிப்பற்றைக் குன்றின் மீதிட்ட விளக்கென ஒளிரச் செய்கின்றது. 'தேமதுரத் தமிழோசை' என்ற சீர்களைப் பாரதியார்—அகம் அரை—முகம் மலர—மனமுருகிப் பாடியிருத்தல் வேண்டும்! வேண்டும்!!

இரண்டாவதாகப் பாரதியார் தமிழ்ப் புலவர் பெருமக்களைப் பாராட்டுகின்றார். நாம் முன்னர்த் தோற்றுவாயிற் கூறியாங்கு, தமிழர் தமிழ் மொழியை அசட்டை செய்திருத்தல் கொடிது—கொடிது என்பதை அறிஞர்—பாரதியார் நன்குணர்ந்தன்றோ தமிழரை விளித்துத் தமிழ்ப் பெருமையைக் கூறுகின்றார். அன்னார் அறிவு மொழிகளேனும் நம் தமிழ் மக்கள் அகத்திற் பாயுமோ! தங்குமோ!! அன்னார் தமிழைத் தழைத்தோங்கச் செய்வரோ!!! கூறுவர் அச் செந்நாப் புலவர்:

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!"

எனத் தமிழ்ப் புலவர் தனிமாண்பையும், தமிழ் மொழியைப் பரப்பும் வகையையும் கனிவு மொழிகளால் கழறியுள்ளார். 'மொழிப் பற்றில்லாதார்க்கு நாட்டுப் பற்றுண்டாதல் அரிது' என்பர் மேலோர். அவ் வுரைப்படியே நம் அறிஞருக்கு முதலில் மொழிப் பற்று உண்டாகிப் பின் நாட்டுப் பற்று உண்டாகியது. மொழியே ஒரு நாட்ட

தான் மட்டும் சுகமாயிருக்க வேண்டுமென்று முயலுவது பேராசைக்குச் சமானமாகும்.

வரைச் சிறப்பிக்கும் சீரிய கருவியாகும். மொழியிற் புலமை யெய்தானொருவன் தன் நாட்டைப்பற்றி எங்ஙனம் என் சொல்லிப் பெருமை பாராட்டுவன்! அந்தோ! பல்லோர் கூடியுள்ள அவையில் அவன் தலை நாணி—உடல் நாணி—ஒவ்வோர் உறுப்பும் நாணி அறிவு கெட்டு நிற்கும் நிலையே அடையக்கூடும். மொழிப் பயிற்சி யில்லாதவன் தாய் நாட்டிற்குத் தொண்டு செய்ய அருகதை யற்றவனேயன்றோ! மேல் நாட்டார் தம் மொழியைப் பரப்பச் செய்யும் வழிகள் ஒன்றிரண்டல்ல; பல. நாமோ—நம் பழங் கதைகளைச் சொல்லிக்கொண்டு, மேடையேறிப் பண்டைத் தமிழர் நாகரீகம்—பண்டைத் தமிழ் நாடு—பண்டைத் தமிழ் மாதர் என்னும் பழைய கதைகளைப் பேசிப் பேசிப் பழைய பஞ்சாங்கங்களாக இருக்கின்றோமேயன்றி, மொழியைப் பரப்ப யாது செய்துளம்? எங்கும் சுயநலம்! எங்கும் தூர்க்குணம்! எங்கும் ஆங்கில மணம்! என்ன கொடுமை! ஆங்கிலம் கற்றவராகினும் தமிழ் மொழியில் போதிய பயிற்சி பெற்று, அரிய ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கலாகாதா? இறவாத புகழ்கொண்ட தமிழ் உரைநடை நூல்கள் பல புதிதாகத் தமிழறிஞர் வெளியிடலாகாதா? நம் மொழிப் பெருமையை வெளிநாட்டார் போற்றுமாறு அதை உன்னத நிலைக்குக் கொண்டுவருதல் தமிழராய நம்மவர் கடமையன்றோ? கூறுங்கள்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்"

என்று பாரதியார்—மொழிப்பற்று நிறைந்த பாரதிப் பெரியார் கூறியுள்ளவை கவனிக்கற்பாலன—செயற்பாலன. மேனாட்டுப் புலவர்களாய ஸ்காட், ஷெல்லி, மில்டன், கதே, கோல்ட்ஸ்மித், இன்னோரன்ன பெருமக்கள் இயற்றிய அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல்—இயற்கைத் தத்துவ நூல், இரஸாயன நூல், வான நூல் முதலிய நவீன நூல்களை மொழிபெயர்த்தல்—தமிழ் மக்களுக்கு எத்துணைப் பேருதவியளிக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

கடமையை நிறைவேற்றுவது சந்தோஷத்தைப் கொடுக்கவில்லையென்றால் வேறு எதுதான் கொடுக்கப் போகிறது?

மானிட சேவையும் தெய்வீக வாழ்க்கையும்.

திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.

இந்திய மகாஜனங்கள் சுய ஆட்சியை ஸ்தாபிக்கும் காலம் நெருங்கிவிட்டது. ஸ்வதேசியத்திலும், பரதேச வஸ்திர பகிஷ்காரத்திலும் ஜெயம் பெற்றுவிட்டால் ஸ்வராஜ்யம் ஸ்தாபித்துவிடலாமென்று, மஹாத்மா கோஷித்து வருகின்றார். மஹாத்மா வஸ்திரத்தில் ஸ்வதேசியத்தை ஓயாமல், ஒழியாமல் வற்புறுத்தி வருவதின் ரகசியத்தை பாரத மக்கள் நன்குணர்ந்தால்,

---

பாரதியார் இவ் விருபதாம் நூற்றாண்டில் புகழ்பெற்று விளங்குவதற்கு அவர் கொண்ட வெறும் தேசப் பற்று காரணமன்று. தமிழ்மொழியில் ஆன்ற அறிவும் அகன்ற ஆராய்ச்சியும் பெற்றுத் தமிழ்க் கவிகளை—தேசாபிமான மூட்டும் கவிகளை—அடிமைப் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடர்களை அறிவுக் கண் பெற்றெழச் செய்த அரிய தமிழ்க் கவிகளைப் பாடியதே என்க. தேசிய இயக்கத்தைப் பற்றி ஒன்றுமே யறியாத என்னைத் தேசீயப் பற்றுடையவனாக—நாட்டுப் பற்றுடையவனாகச் செய்தவை பாரதியார் பாக்களே என்னல் மிகையாகாது. "உள்ளத்தில் உண்மையொளி உண்டாக வேண்டுமாயின், பரந்த சிந்தையும் விரிந்த நோக்கமும் பெறவேண்டுமாயின், நம் நாடு பிறநாடுகளைப்போல் முன்னேற வேண்டுமாயின், மேனாட்டார்போன்று பெருமிதத்தோடு தலைநிமிர்ந்து நடக்க வேண்டுமாயின், அகமும் புறமும் ஒளிபெற்று ஒழுக்கமுற்று வாழவேண்டுமாயின், நாம்—தமிழராகத் தமிழ் நாட்டிற் பிறந்த நாம், நம் தாய்மொழியை முதலிற் கற்கவேண்டும். தாய்மொழிப் பற்றே நாட்டுப் பற்றுக்கு முதற் படியாகும். தமிழரே! என் புன்மொழிகளைக் கேட்டு நடப்பீராக" என்று பாரதியார் புகன்றுள்ள பொன்னுரைகளை மனத்திருத்தித் தமிழர் தாய்மொழியைக் கற்று விடுதலை பெற்றுச் சிறப்படையுமாறு திருவருள் துணைகூட்டுமாக.

பாசமற்றுப் பணி செய்வதே துக்கத்தையும் துன்பத்தையும் அகற்றும்.

அதைப் பூர்ணமாகப் பூர்த்திபண்ணாம லிருக்கமுடியாது. ஸ்வதேசியத்துக்கு இரண்டு அம்சங்களுண்டு. (1) தேசீயம் (2) தெய்வீகம். தேசீயமாவது அந்நிய நாட்டு வஸ்திரங்களைப் பாரத மக்கள் விலக்கிவிட்டால், இங்கிலாந்திலுள்ள ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுடைய ஜீவனத்தைத் தாக்கும். இது தொழிலாளர்களுடைய பார்லிமெண்டு சபையிலுள்ள பிரதிநிதிகளைக் கவனிக்கச் செய்யும். பிறகு பார்லிமெண்டு சபைகள் விழித்துக்கொண்டு இந்தியா விஷயத்தைப் பற்றி நிரம்பவும், கவலையுடனும், அதிவேகத்துடனும் கவனிக்கும். ஜீவனற்ற இந்தியர்களென்று அவமதிப்பாக இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், தன துன்னதமான மமதை பொருந்திய நிலையிலிருந்து ஒரு படி இறங்கிய பாரத மக்களைச் சமமாகப் பாவித்து, பாரத மக்கள் வேண்டும் உரிமையான சுய ஆட்சியை அவர்களுடைய நோக்கப்படி ஸ்தாபிக்க ஒப்புக்கொள்ளும்படியான தன்மை ஏற்படும். இதுதான் தேசீய அம்சம்.

இரண்டாவது அம்சமாகிய தெய்வீக அம்சத்தைத்தான் பாரத மக்கள் நன்குணர்ந்து அனுஷ்டிக்க வேண்டும். தனக்குச் சமீபத்திலும், சுற்றுப் பக்கங்களிலு முள்ளவர்களுடைய க்ஷேமத்திற்காக மனிதன் உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறான். சமஸ்த கோடி ஜீவராசிகளும் சுகமாயிருக்கத் தீவிரமான எண்ணமும், இவ் வெண்ணத்துக்குத் தக்க காரியமும் செய்ய ஒவ்வொரு மானிடனும் கடமைப்பட்டிருக்கிறான். அதாவது ஒவ்வொரு ஸ்திரீ புருடனும், தேசம் உலகத்தில் ஓர் அம்சமென்றும், தனக்காகவும், உலகுக்காகவும் உழைத்தால்தான், தற்காலம் இக் கோரமான நரக உலகம், கடவுள் வாசம் செய்ய யோக்கியமான சுவர்க்க லோகமாகும் என்பதை நன்குணரல் வேண்டும்.

மனிதன் முக்தியடைய விரும்புகிறான். தான்மட்டும் முக்தி பெற்றுப் பேரானந்தத்தை அனுபவிக்க விரும்பி முயலுகிறவன் பெருத்த சுயநலம் பாராட்டுபவனாகிறான். ஆகையால், உத்தம புருடன் பிறருடைய நன்மையை நாடியே எப்பொழுது முழைப்பான். எப்பொழுதும் உலகம் சுகிக்கவேண்டுமென்கிற ஒரே எண்ணம்தான் இவனுடைய ஹிருதயத்தில் கொதித்துக்கொண் டிருக்கும். இக் கொதிப்பிலிருந்தே திவ்ய தேஜசும் திவ்ய சக்தியு முண்டாகும். இந்தத் தேஜசே உலகின் தடித்த அந்தகாரத்தை ஒழிக்கும். இந்தத் திவ்விய சக்தியே தற்காலத்தில் உலகில் பரவிவரும் முரட்டுத் தன்மையைத் தைரியமாகத் தாக்கித் தெய்வீக ஆட்சியை நிலைநிறுத்தும்.

பேய், பிசாசுகளைப் பற்றிய பயங்கரமான கதைகளை சிறு குழந்தைகளுக்கு ஒருக்காலும் சொல்லக் கூடாது.

இந்தத் தெய்வீக ஆட்சியை ஸ்தாபிக்க ஸ்வதேசியம் முக்கியமான ஒரு கருவி. ஆகலால் இந்தத் தெய்வீக ஸ்வதேசியத்தைப் பாரத மக்கள் மட்டுமல்ல, உலக மக்களும் மேற்கொள்ள வேண்டும்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஊண், உடை, ஞானம். ஊண், உடை விஷயங்களில் மனிதன் படும் பாட்டில் ஆயிரத்திலொரு அம்சமாவது ஞானம் பெற முயற்சிப்பானானால், மானிட வர்க்கத்தின் துன்பங்கள் மாயமாகப் பறந்துவிடும். பெரும்பாலும் மனிதர்கள் பசிக்காக உணவு உண்கிறதில்லை. நாவுக்காக இயற்கையாயுள்ள சுவையைப் பலவிதமான ஆகாரங்களால் மாற்றிவிடுகிறார்கள். தன் சுயத் தன்மையை யிழந்த பேய்பிடித்த நாவுக்கு மனிதன் அடிமையாகிவிடுகிறான் விதம் விதமாகத் தின்பண்டங்களையும், ஆகாரங்களையும் கண்டுபிடித்து, வயிறு போதும் போதும் என்று கதறினபோதிலும், நாவின் ருசியைத் திருப்தி செய்யும்பொருட்டு உள்ளே தள்ளிவிடுகிறான். கொஞ்ச காலத்தில் மனிதன் வியாதிகளுக்கிரையாகவேண்டுமே யென்று கவலைப்படுவதில்லை. வியாதிகளைத் தீர்க்க மருந்துகள் சாப்பிட்டுத் தேகத்தைக் கெடுத்துக்கொண்டு விடுகின்றான். தேகம் கெட்டுப்போனால் மனதும் கெட்டுப்போய் விடுகிறது. ஞான மார்க்கத்திற்குப் பெருத்த இடையூறு முண்டாகிவிடுகிறது.

பொதுவாக ஒருவனுடைய குணம், நடை இவைகள் அவனுண்ணும் ஆகாரத்தைப் பொருத்தேதானிருக்கும். பால்ய பருவம் முதலே ஒருவன் சாத்வீக ஆகாரம் சாப்பிட்டு வருவானானால் ஞான சம்பத்து வெகு இலகுவாக அவனுக்குண்டாகிவிடும். அவன் குரு உபதேசத்திற்குத் தகுந்த பாத்திரனாகின்றான். ஆகையாலேதான், நம் பெரியோர்கள் ஞான மார்க்கத்தில் போக விரும்புகிறவன் சாத்வீகமான ஆகாரத்தையே உட்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள்.

உடை விஷயத்திலும், படாடோபங்கள் ஆடம்பரங்களை ஒழித்து அடக்கம் ஒடுக்கமாகவும் மானத்தைக் காப்பாற்ற அத்தியாவசியமான உடைகளை உடுத்தினால் போதாதா? இப்படி மனிதன் ஊண் உடை விஷயத்தில் அனாவசியமாக காலத்தைக் கழிக்காமல் ஞான மார்க்கத்தில் காலத்தை செலவிட்டால் தான் சீர்படுவதோடு உலகமே தூய்மை அடையும்.

சென்ற 80 வருஷங்களுக்குள் அடிமையிலிருந்து நீங்கின அமெரிக்க தேசத்துக் கருப்பு மனிதர்கள் 100-க்கு 77 பேர்கள் படித்திருக்க 100-க்கு 10 பேர் மட்டும் படித்த (சுதேச சமஸ்தானம் உட்பட) நமது நாட்டார்கள் நமது பழைய பெருமைகளைப் பேசுவதைப் போன்று வேறு அவமானம் ஒன்றுமில்லை.

உலக அமைதிக்கு விரோதிகள் யார்? உலகத்தில் சமாதானத்தையும் சுதந்திரத்தையும் நிலை நிறுத்தக் கூடியவர் யார்? மனிதன்தான் உலக அமைதி யின்மைக்கும் அமைதிக்கும் காரணம். எவன் ஆசாபாசங்களிலிருந்தும், சுகம், துக்கம், நன்மை, தீமை முதலான பந்தங்களிலிருந்தும் "நான் செய்கிறேன். நான் மேலோன். நான் கீழோன்." முதலான அகங்கார பாவங்களிலிருந்தும், தனதுண்மையான ஸ்வரூபத்தை மறந்து, பயம், சுயநலத்தன்மை, பொறாமை, வஞ்சனை, துவேஷம், பாசாங்கு முதலிய தார்க்குணங்களுக்கு அடிமையாகி விடுகிறானோ அவன் தனக்கும், உலகுக்கும விரோதியாகி விடுகிறான். தற்காலத்தில் இத்தகைய மனிதர்கள் தான் மலிந்து கிடக்கிறார்கள். இவர்களுடைய ஆதிக்கத்திலே சிக்கி உலகம் தவிக்கிறது. தான் வேறு உலகம் வேறு, தான் வேறு ஈஸ்வரன் வேறு, தன் சுகம் வேறு பிறர் சுகம் வேறு முதலான கேவலமான வேற்றுமைகளும் பிரிவினைகளும் அபரிதமாக உலகில் வழங்கி வருகின்றன. இப் பிரிவினைகளே மனிதனுடைய ஜீவநாடியை சரியானபடி துடிக்க விடாமல் ஸ்தம்பிக்கச் செய்துவிடுகிறது. இப் பிரிவினைகளே மனிதனைப் பல விதமான கேவலமான பயங்களுக் கடிமைப்படுத்தி விடுகின்றன. பயமே மனிதனைப் பொய், திருட்டு, கொலை, பரஸ்திரீ கமனம் முதலான மகா பாதகங்களைச் செய்யத் தூண்டி விடுகிறது. பயமோ ஞானத்தைக் குறைத்து அஞ்ஞானத்தைத் தலைவிரித்தாடச் செய்கிறது. பயமும் அஞ்ஞானமும் தான் உலகத்திலுள்ள சகல விதமான போராட்டத்திற்கும் ஆதாரம்.

ஞானச் சுடர் எந்த ஹிருதயத்தில் பிரகாசமாக ஜ்வலித்து கொழுந்துவிட் டெரிகிறதோ அவ் வாத்மாவானது ஸ்வராஜ்ய ஸ்திதியைப் பெற்றுவிட்டது. அவ் வாத்மாவே மனிதனுடைய சட்டமில்லாத சட்டங்களை யெல்லாம் நிர்ப்பயமாகக் கண்டித்து விளங்கும். இத்தகைய ஜீவன் முக்தர்கள் தான் தற்காலம் உலகுக்குத் தேவை. இம் மகா புருஷர்கள் தான் உலகில் அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலை நாட்டுவார்கள். மகத்தான நம்பிக்கையும், பரிசுத்தமான மனதையுடைய ஒவ்வொரு மனிதனும் இந்த தெய்வீக உலகச் சேவை செய்ய முடியும்.

பயம் வேண்டாம்; சந்தேகம் வேண்டாம்; பாரத மக்களே! கலியுகத்துக்கு தர்ம மூர்த்திகள் நீங்கள்தான்; சத்திய மூர்த்திகள் நீங்கள்தான்; கலியுகமொழிந்து சத்ய யுகம் அல்லது ஈஸ்வரனுடைய ஆட்சியை திரும்ப ஸ்தாபிக்கப் போகிறவர்கள் நீங்கள்தான். லோக மாதாவான மகா சக்தி அவளுடைய சேவைக்கு உங்களை அழைக்கி

மனோதிடம் தேவை யெனில், தேக திடம் அவசியம் வேண்டும்.

பைந்தமிழ்ச் சோலை.

சோலை செழிக்க வேலை.

சுவாமி திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள்.

தமிழாலயம்.

பைந்தமிழ்க் காதலர் வருக! இதோ தமிழாலயம்; இக் கோயில் உலகத் தோற்றத்துடன் தோன்றியது. மனித மரபு முன்பு இங்கேயே தோன்றிற்று. இதன் பெரும் பரப்பைக் கடல் விழுங்கிற்று. எஞ்சி நிற்கும் இத் தொல் பெருங் கோயிலைத் தங்கமணிக் கோயிலாக்குவோம். இதற்கு ஒரு வெற்றிக் கோபுரம் எழுப்புவோம். தமிழன்பீர், உங்கள் கைகளுக்கு அல்லும் பகலும் வேலையுள்ளது. உங்களாவியின் ஒவ்வொரு மூச்சும் இத் தமிழ்க் கோயிலின் அருட்

ருள். ஈஸ்வரனைத் தஞ்சமடைந்து உங்களுடைய சர்வத்தையும் மகா சக்திக்கு அர்ப்பணம் செய்து விடுங்கள். அதாவது பூரண சமர்ப்பணம் செய்து விடுங்கள். பிறகு பாருங்கள் மகா சக்தியினுடைய லீலைகளை! உங்களுள்ளங்களில் பொங்கித் ததும்பும் ஆநந்த வெள்ளம் உலகு முழுவதும் பாவி உலகத்தைப் புனிதமாக்கும். நீங்கள் உண்மையில் உங்களுக்காக உழைக்கவில்லை. அஞ்ஞானப் பெருக்கத்தால் மனிதன் தானும் கெட்டு உலகத்தையும் கெடுத்து விடுகிறான். அஞ்ஞானத்தை பூரணமாக ஒழிக்கக்கூடியவன் ஈஸ்வரனே. இந்த ஈஸ்வரனுக்குப் பூரண சமர்ப்பணம் செய்து விட்டால் ஈஸ்வரன் தன் மந்திரியாகிய மகா சக்தியை யேவி உன்னை சுத்தப்படுத்தி, உன்னை சித்தனைக் செய்து தன்னுடைய மேலான உலக சேவையில் உன்னை ஈடுபடுத்தி விடுவான். இப்படி சேவை செய்வது தான் புருஷார்த்தம். இந்த சேவைதான் உண்மையான தைரியம், வீரியம், சௌகரியம் விளங்கும். இந்த சேவையில்தான் பூரணமான உன்னதமான தெய்வீக வாழ்வு வாழலாம்.

வந்தே மாதரம்.

ஒவ்வொரு கண்ணீரும் ஒவ்வொரு உண்மையைக் காண்பிக்கும்.

பணிக்காகுக. அருங் கலைகள், சிற்பம், பண், பனுவல், பரதம், கூத்து, இயலறிவுத் துறைகள், விதவித இயக்கங்கள், பொன், பொருள் அருள், ஆற்றல், அழகு, வீரம் இலங்கும்படி இவ் வாலயத்தைப் புதுக்கி யமைப்போம். இதில் இப்போது படர்ந்த சாதிச் சண்டை, சமயப்போர், வாது, வழக்கு, வேற்றுமை, பொறாமை, சிறுமை, அகந்தை, வறுமை, மடமை சோம்பல்களை வேரோடு பெயர்த்தெறிவோம். நமது தமிழன்னையின் இன்ப முன்னேற்றத்திற்கு எதிர் நிற்கும் எதையும் எற்றியெறிவோம். நாம் தமிழன்னையின் அருள் வீரர்! தன் மனதிலெழுந்த மானத வோவியத்தைச் சலவைச் சிலையிற் பதிக்கும் சிற்பி, அதே குறிப்பாகக் கருத்தூன்றி அக்கம் பக்கம் பாராது பேசாது வேலை செய்கிறானன்றோ. அதுவே தொழில் யோகம். அம்மாதிரி தமிழைச் சித்தரிப்போம்.

தமிழம்மை.

ஓரிடம் கூடிய ஒன்னலர் போலின்றி, வேற்றுமை யிடர்களின்றி, முன்னேற வேண்டுமாயின் நாமனைவரும் தமிழம்மையின் வீரச் செல்வர்களென வுணரவேண்டும். இங்கு எத்தனையோ சமய வகுப்புக ளிருக்கலாம்; ஆனால் தமிழகத்திற் பிறந்த ஒவ்வொருவருக்கும் தமிழன்னை பொது; தமிழ் பொது; தமிழ்ப் பணி பொது; தமிழகம் பொது. பங்கிம் சந்திரரின் வந்தே மாதரப் பாட்டைக்கொண்டு ஸ்ரீ அரவிந்தர் பாரத மாதாவின் திருவுருவை விளக்கி நாட்டை ஒரு சக்தியன்னையாக வணங்க ஆவேசமூட்டினார். அதன்பின் நாட்டியக்கம் எவ்வாறு முன்னேறியது என்பது அனைவரும் அறிந்ததே. ஆதலின் தமிழர் ஒரு குல அருட் புதல்வராக முன்னேற வேண்டின் தமிழம்மை வணக்கம் இன்றியமையாதது. இதோ பார் எதிரே, எனது தமிழ்த் தெய்வம், விளங்குகிறாள்! எந்தாய் வாழிய! எந்தாய் வாழிய! வாருங்கள் சிற்பிகளே, தமிழன்னைக்கு ஒரு பொன்மணிச் சிலை சமைப்போம்!

அரனருட் புதல்வி; அருங்கலைச் செல்வி;
வானருள் முதல்வி; வாழிய தமிழ்த்தாய்!
அறிவனல் விழியாள்; அமுதக் கதிர்விரி
முழுமதி முகத்தாள்; மோகனக் காந்தம்
வீசிடும் அழகி; மின்னெனத் தெரிக்கும்
பொலிநகை முத்தம் பொழிந்திடு வாயாள்!
தவச்சுடர் காந்துந் தணல்மணி முடியாள்;

ஒரு அவதார புருஷன் செய்யும் வேலையை ஒரு ஜன சமூகம் செய்யும்.

மணியினும் பொன்னினும் அணிபெறுங் கோடி
வாடா நறும்பா மாலை களணிந்தாள்;
தென்னா டெல்லாந் தன்னா டாகப்
பாண்டிநா டெனும் பளிங்கணை யமர்ந்தாள்
வைகையும் பரணியும் மலரடிச் சிலம்பாம்;
இலங்கை யன்னம் இணையடி தாங்க
வீற்றிருக் கின்றாள் வீரர்க் கிறைவி.
எழுதா மறையாம் இன்னிசை பிழியும்
காவிரி யாழைக் கைத்தலம் பிடித்தாள்.
குமரியி லூன்றி யிமயமீ தலவும்
வெற்றிக் கதிர்க்கொடி விளங்கப் பிடித்தாள்.
சிவனார் சூலந் திருக் கரங்கொண்டாள்
இயலிசை நாடக வியன் கலையணிந்தாள்.
முருக வேள் மயிலிது முகிலெனத் தோகை
விரித்து நடஞ்செயுங் கருஞ்சுருள் விரிந்தாள்.
ஐந்திணைச் செல்வம் அளக்கருஞ் செல்வி
எட்டுத் திசையும் இசைபரந் தொலிக்க
வார்கடல் முரசம் வாழிய வென்னக்
கார்வரை யிருபுறம் கைலாகு தர
பொன்னும் பச்சையும் பூவுங் கனியுங்
குலுங்குஞ் சோலைக் குளிர்நிழல் வீற்றாள்
தமிழீர் வணங்கீர், தரணியீர் வணங்கீர்!
அறிவுத் தெய்வம் அருளொளித் தெய்வம்
அழகுத் தெய்வம் அருந்தமிழ்த் தெய்வம்!
எந்தாய் வாழ்க! எந்தாய் வாழ்கவே!

அன்பீர்! இந்தத் தமிழ்த் தெய்வத்தை உமது உள்ளக் கோயிலில் ஒளிபெற நாட்டுமின்! ஓவியப் புலவீர், காவியப் புலவீர், இத் தமிழ்த் தெய்வத்தை அமுதக் கோலால் அழகுற எழுதுமின்; அமுத மொழிகளால் இனிதுறப் பாடுமின். இந்தத் தமிழம்மையை அன்பு, அறிவு, அருள், அழகு, அணி, கலை, கவி, ஓவியம், சிற்பம் முதலிய பற்றால் வழிபடுமின்! இதுவே முதற் கடன். தமிழம்மையை உள்ளக் கோயிலில் வைத்து அன்பு மலர் சொரிமின். அவளருளாலே அனைத்தும் நலமாம். ஒவ்வொரு கோயிலிலும் இச் சிவச்செல்வியின் திருவுரு விளங்குக. உண்மையான கலை வளர்ச்சியால் அங்கு அவளை ஆயிரக் கணக்கான அன்பர் கூடி, இசை பாடி, அருளை நாடி, வழிபடுக. நமது தமிழகக் கோயில்களில் இத் தமிழம்மை சந்நிதி விளங்

உலகம் உருண்டை என்று சொல்லியவரை அன்று தண்டித்தார்கள். இன்று உலக மெல்லாம் அவரைக் கொண்டாடுகின்றது.

குக; அவள் சந்நிதி முன் முத்தமிழ்க் கலை நிலயம் முதன்மையுற்றிலங்குக. அதில் ஆயிரக் கணக்கான தமிழ் மணிகள் அருங்கலை பயில்க. தமிழன்பர் தமது குழந்தைகளுக்குத் தமிழம்மை, தமிழாயி, தமிழப்பன், தமிழ்முருகன் என்ற பெயரையிடுக. இதனால் தமிழுக்கு ஒரு அருட்பெருமை விளங்கும். நான் தமிழன், தமிழர் அனைவரும் தமிழ்த்தாய் மைந்தர், என்னுடன் பிறந்தார் எனும் உணர்வு எழுந்தோங்கவேண்டும். எந்தாய் வாழ்க! எனும் மந்திரம் வந்தேமாதரம் போல எங்கும் ஒலிக்கவேண்டும். இது தமிழர் செய்யும் முதல் வேலை.

தமிழ்க் கழகம்.

தமிழ்க் கலை வளர்ச்சி அரிய பெரிய முயற்சி. முன்னே முத்தமிழ்ச் சங்கம் பலவான கலைக்கிளைகள் பரந்து அருங்கனி குலுங்கியது. இன்று ஆங்காங்கு விளங்கும் கழகங்கள் பெரும்பாலும் ஒரு துறையிலேயே (இலக்கியத்திலேயே) பாடுபட்டு வருகின்றன. இலக்கியம், இலக்கணம், செய்யுள், இசை, கூத்து, உரைநடை, பொருணூல், பொருட்சேர்வு நூல், செடி நூல், பயிர் நூல், உயிர் நூல், உடல் நூல், தரை நூல், ஒளி நூல், மருத்துவம், சிற்பம், ஓவியம், உலகாராய்ச்சி, பத்திரிக்கை, பொருளாதாரம், சமயாராய்ச்சி, உள்ளறிவாராய்ச்சி, உலகறி வாராய்ச்சி, உலக வரலாறு, கைத்தொழில், வாணிபம், அருங் கலைகள், ஆட்சி முறை முதலிய எல்லாக் கலைப் பயிற்சிக்கும், வளர்ச்சிக்கும் நமது தமிழகத்தில் அணிபணியாக அழகான இடமமைந்திருக்கவேண்டும். நாம் இப்போது இருக்கும் நிலையில் தமிழை எவ்வாறு வளர்க்க வேண்டுமென்பதற்கு ஒரு உதாரணம் காட்டுவோம்.

பிரெஞ்சு மொழியின் உதாரணம்

ஐரோப்பிய மொழிகளில் ஆங்கிலம், ஜெர்மனி, பிரெஞ்சு, இம்மூன்றும் முதன்மை பெற்றுள்ளன. இவற்றில் பிரெஞ்சிற்கு மிகவும் உயர்ந்த இடம் தந்திருக்கின்றனர். சமாதான உடன்படிக்கைகளும், நாடுகளிடையே நடக்கும் விவகாரங்களும் பிரெஞ்சிலேதான் நடைபெறுகின்றன. பிரெஞ்சு மிகவும் இனிய மொழி, அதன் உச்சரிப்பும், இலக்கணமும் இராசுபோல அளந்து அமைக்கப்பட்டுள்ளன. இன்று பிரெஞ்சு 6,00,00,000 (ஆறு கோடி) பேர்களால் பேசப்பட்டு வருகிறது. இம் மொழியின் வளர்ச்சி தமிழருக்கு அரிய உதாரணமாகும். பாரத நாட்டிற் பயிலும் மொழிகளுக்குத் தாய் ஆரியம், தந்தை தமிழ். அதுபோல் ஐரோப்பிய மொழிகளுக் கெல்லாம் தாய்

வீண் வாய் வேதாந்தம் பேசுவதில் பயனில்லை.

கிரேக் (யவனம்), தந்தை லத்தீன். பெரும்பான்மையான இயலறிவுச் சொற்கள் இவற்றினின்று போந்தனவே. 6 கோடி மக்களால் இன்று பேசப்பட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரும் பிரெஞ்சு மொழி தனி மொழியல்ல. முதலில் பிரான்சிற்கு கால் (Gaule) எனப் பெயர்; அதிலிருந்தோர் கால்லாஸ் (Gauloise) என்ற ஒருவகை ஸெல்திய பாஷை (Celtique) பேசிவந்தனர். கி. மு. 59—51-ல் யூலியகேசரி காலைப் படையெடுத்து வெற்றிகொண்டான். அவனுடன் வந்த சிப்பாய்கள் அங்கேயே தங்கி ஜனங்களிடை தாங்கள் பேசிய கொச்சை லத்தீனை (Latin rustique)ப் புகுத்தினர். [லத்தீனில் அறிஞர் பேசுவது ஒரு வகை; சாதாரணமாகப் பொதுமக்கள் பேசுவது ஒரு வகை.] பொதுமக்கள் பேசிய கொச்சை லத்தீனும் காலில் வசித்தவர்கள் வாய்ப்பட்டுப் பின்னும் கொச்சையாகத் திரிந்தது. பிரெஞ்சில் அறிஞர் பேச்சு, பொதுமக்கள் பேச்சு என்று இரண்டாயிற்று. கொச்சை லத்தீனே பிரெஞ்சாயிற்று. [உதாரணமாக legalem (லெகலம்) என்பது சுயம் லத்தீன்; இதை அறிஞர் Legal (லெகல்) என்று உச்சரிப்பர்; பொதுமக்கள் வாயில் இது loyal (லொய்யல்) ஆயிற்று.] 14-வது நூற்றாண்டில்தான் பிரெஞ்சு மொழியே ஒரு உருப் பெற்றது. அப்போது அதில் 8000 வார்த்தைகள்கூட இல்லை. பிறகு அறிஞர் பலர் பல துறைகளில் உழைத்துச் சென்றவிடமெல்லாம் ஆங்காங்கு அவ்வம் மொழிகளில் பொதுவாக விளங்கும் நயமொழிகளைத் தமது தாய் மொழியில் சேர்த்தனர். அறிஞர் கிரேக்கினின்றும், லத்தீனின்றும் இயலறிவுச் சொற்களையும், தாராளமாக எண்ணங்களை வெளியிடற்கு வேண்டிய பல அரும் பதங்களையும் கடன் வாங்கிக்கொண்டனர். குரூசேட் போரின்போது பல அரபி மொழிகள் பிரெஞ்சு பாஷையில் நுழைந்தன. பல வடமொழிப் பதங்களும் தமிழ்ப் பதங்களுங்கூடப் பிரெஞ்சில் அப்படியே வழங்குகின்றன. ஜெர்மனி ஸ்பெயினுடனும், ருஷ்யாவுடனும் போர் தொடர்ந்த காலை, அத்தேய மொழிகள் பல பிரெஞ்சில் கலந்துகொண்டன. சமயல், சண்டைக்கு வேண்டிய மொழிகள் ஜெர்மன் மொழிகள். கடல் வாணிபம், கப்பல் போர்ச் சொற்கள் இத்தாலியன் மொழிகள். அரசியல், வாணிப மொழிகள் ஆங்கிலத்தினின்று பெறப்பட்டன. சீன மொழிகளும், இந்திய மொழிகளும் பிரெஞ்சில் தக்கவாறு கூட்டப்பட்டன. பிரெஞ்சுத் தேனீக்கள் உலகெங்கும் சுற்றி ஆங்காங்கு கேட்ட மொழி மலர்த் தேனைக்கொண்டு தமது மொழியைப் பெருக்கின. இவ்வாறு பல மொழிக் கலப்பில் பெருகிய பிரெஞ்சு மொழி, இப்போது 32,000 வார்த்தைகள் கொண்டு, இன்னும் மிகப் பெருகிவருகிறது. இதைத் தவிரச் சிறப்புப் பெயர்

மனித சமூகத்திற்கு எத்தனை இன்னல்கள் சுய லாபத்தை உத்தேசித்துச் சிலர் தோற்றுவிக்கிறார்கள்!

கள் சுமார் 8000 உள்ளன. பிரெஞ்சில் மிகவும் அரிய கவிகளும் புலவர்களும் உள்ளனர். அவர்களுக்கெல்லாம் நல்ல ஆதரவு கிடைக்கிறது. பிரெஞ்சு மொழி எல்லாத் துறைகளையும் ஆழம் பார்த்திருக்கிறது.

பிரெஞ்சுக் கழகம்.

இதற்குக் காரணம் பிரேஞ்சுக் கழகம் (Academie francaise) இதையே தமிழருக்கு உதாரணமாகக் காட்டுகிறேன். இதுமாதிரி தமிழர் தமிழை வளர்க்கவேண்டும். பிரெஞ்சுக் கழகம் 1634-ல் (13-வது லூயி காலத்தில்) மந்திரி ரிஷெலு (Richelieu) என்பவரால் ஏற்பட்டது. இதனால் இவர் பிரெஞ்சன்னை யீன்ற இசை மாந்தரில் தலைசிறந்து விளங்குகிறார். இந்தப் பிரெஞ்சுக் கழகம் எல்லாக் கலைகளையும் வளர்த்து வருகிறது. பெரும் புலவர் மணிகள் (முற்காலத் தமிழ்ச் சங்கம்போல) இதில் விளங்கி, இதன் கொள்கைகளை வெற்றியுற நிறைவேற்றுகின்றனர். பல துறைக் கலைகள் ஒவ்வொன்றும் சுமார் 40 புலவர்களின் தலைமையில் ஆராயப்பட்டு வருகின்றன. (1) மொழி வளர்ச்சிக் குழாம், அற்புதமான பிரெஞ்சு அகராதியைக் கணக்கற்ற படங்களுடன் வெளியிட்டுள்ளது. லாரூஸ் அகராதி வெப்ஸ்டரைப் போன்றது. இன்னும் ஆண்டுதோறும் புதுப் புது மொழிகள் அச்சிட்டு அதிற் சேர்க்கப்பட்டு வருகின்றன. உலக வீரர்கள், பெரியோர், அறிஞர் வரலாறுகள், சரித்திரம், இயலறிவு, விஷயங்கள் எல்லாம் கோர்வையாக அழகிய படங்களுடன் பிரெஞ்சகராதியிற் காணலாம். (2) இலக்கணக் குழாம் பிரெஞ்சிலக்கணத்தைச் சீர்பெற முறை வகுத்து, திட்ட நுட்பமாக அரிய உதாரணங்களுடனும் ஒவ்வொரு சூத்திரத்திற்கும் ஏற்றபடி பெரியோர்களின் மேற்கோள்களுடன் அருமையாக வெளியிட்டுள்ளது. இயல், இசை, நாடகம் மூன்று துறைகளிலும் பிரெஞ்சு இப்படி முன்னேறி யுள்ளது. (3) இலக்கியக் குழாம், கவிதை உரை நடை இரண்டையும் இரு கண்ணைப் போற்றுகின்றது. தக்க பிரெஞ்சுப் புலவர்களுக்கு இக் கழகம் போதிய ஊதியந் தந்து அவர்கள் புலமையைத் தனதாக்கிக் கொள்ளுகிறது. பதினாலாவது லூயி இப் புலவர் மணிகளைப் பெரிதும் ஆதரித்தான். கொர்நெல், ராஸின், மோலியர், பாலு, லாஃபோந்தன் முதலிய பெரும் புலவரேறுகள் அக் காலத்தில் பிரெஞ்சுக் கலை அழகும் பொருளும் கொஞ்சும்படி செய்தனர். மோலியர் நாடகத்திற்குத் தனது அரண்மனையிலேயே மன்னன் இடந் தந்தான். புலவர்களுக்கு மன்னன் போதிய பரிசிலீந்தான். பரிசில் வாங்க வரும்போதெல்லாம் புலவர்கள் ஒரு நல்ல காவியம் இயற்றி வந்து

பாமனுக்கும் பாமரனுக்கும் நடுவில் ஒருவனும்—தரகனும்—பூசாரியும்—ஆச்சாரியும் வேண்டவே வேண்டாம்.

கழகத்தில் அரசன் முன்னே அரங்கேற்றுவர். பெரிய சோம்பேரிகளைக் கூட இது தூண்டிப் புகழ் பெறச் செய்தது.

புலவரைப் போற்றல்.

ஒரு சிறு உதாரணம் காண்க. லாஃபோந்தன் (La Fontaine) அரிய கவி, பெரும் புலவன். ஆனால் தீர்க்க ஸூத்ரி; சிறிதும் லௌகிகம் தெரியாதவன். மறதியில் இணையற்றவன். அவன் மறதியில் பல நகைச் சுவைகள் உண்டு. அவனுக்கும் அவன் மனைவிக்கும் ஏழாம் பொருத்தம். இவன் நாளெல்லாம் புத்தகங்களை மூளையில் ஏற்றுமதி செய்தே காலந் தள்ளுவான்; சாப்பாட்டைக் கூட மறந்து விடுவான். அவளும் நாவல்களைப் படித்து, வெளியே தனது நண்பர்களுடன் உல்லாசமாகத் திரிந்து வீட்டிற்கு வருவாள். அப்போதுதான் இருவருக்கும் வீட்டு நினைப்பு வரும். இக் கணவனிடம் மனங் கொள்ளாமல் மாரி எரிகர் (Marie Hericart) என்ற அவ் வுத்தமி பிறந்த வீட்டிற்குப் போய்விட்டாள். லாஃபோந்தன் சுவை சொட்டும் கடிதங்கள் எழுதிப் பார்த்தான். மடமயில் வரவில்லை. நேரே அவளிருந்த ஊருக்குச் சென்றான். அங்கே ஒரு நண்பன் வீட்டில் மூன்று நாட்கள் படிப்பில் தன்னை மறந்து வந்த காரியத்தையும் மறந்து மனைவியையும் மறந்து, வீடு திரும்பினான். இப்படிப்பட்டவனின் புலமை கிளர்ந்தொளிரச் செய்தது நண்பரும் மன்னனும். பாலு, ராஸின் என்ற கவி மணிகளும், ஃபோகே, என்ற பிரெஞ்சு மந்திரியும், போய்யன் சீமாட்டியும் இவ்வரிய கவியின் புலமையை வெளிப்படுத்தினர். குழந்தைகளைத் தடவி வளர்ப்பது போலக் கவிகளைத் தட்டிக் கொடுத்துப் போற்றி வளர்க்க வேண்டும். ஒவ்வொரு நண்பரையும் குறித்து அவ்வப்போது லாஃபோந்தன் சிறு கதைகள் இயற்றினான். தன்னை ஆதரித்த செல்வர்களுக்காகக் கதை யியற்றினான். 1683-ல் அவனுக்கு பிரெஞ்சுக் கழகத்தில் ஒரு இடம் கிடைத்தது. மன்னனிடம் பரிசில் பெறும் போதெல்லாம் புலவர்கள் தங்கள் புலமையை விளக்க வேண்டுமாதலின், லாஃபோந்தன் அவ்வப்போது அழகிய இனிய திட்ப நுட்பமான சிறு கதைக் கவிதைகள் இயற்ற நேர்ந்தது. அவையே இப்போது அவன் பெயரால் சுமார் 12 நூல்களாக விளங்குகின்றன. அவன் கதையைப் படிக்காத பிரெஞ்சுக்காரன் இல்லை. "அகஸ்டர் விர்ஜில்களை ஆக்கினான். லூயி பாலுகளை ஆக்கினான்". (Louis made Boileaux, Auguste Virgiles) என்பது பழமொழி. பாலு என்பவர் பிரெஞ்சுக் கவிமணி. இவ்வாறு ஒவ்வொரு பிரெஞ்சுப் புலவர் புலமையும் வெளிப்பட்டதற்குப் பல கதைகளுண்டு. ஒரு

பழங் குப்பைகளே பொக்கிஷமெனப் பாதுகாத்து, மகா ஜனங்களிடம் மறைந்துள்ள பெருமைகளை, சக்திகளை பாழாக்குவது மதியீனமாகும்.

சோறு பதம் பார்த்தோம். இப்படிப்பட்ட ஆதரவில் பிரெஞ்சு இலக்கியம் செல்வச் சித்திரப் பொலிவுடன் இலங்குகின்றது. அனதோல் பிரான்ஸ், விக்டர் ஹ்யூகோ, கொர்நெல் போன்றவர்களின் நடையழகு இணையற்றன. அம்மாதிரி தமிழ்ச் செல்வி பொன்னணி நடை பயில வேண்டுமென்பது எனது முயற்சி. இப் புலவர் மணிகளால் ஏராளமான நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. கழகம் மதிக்கும் நூல்களையே பிரெஞ்சு மக்கள் போற்றுவர். கண்டபடி தான்றோண்டித்தனமாக எழுதும் இலக்கியங்கள் இங்கே ஆதரிக்கப் பெறா. முதல்தரமான இலக்கியங்களுக்கே இங்கு இடம்.

ஆராய்ச்சி.

இன்னும் இக் கழகச் சார்பில் இயல் நூலாராய்ச்சிக் குழுவில் 71 பேர்கள், கணக்கு, உயிர் நூல், சட நூல், பயிர் நூல், தரை நூல், ஒளி நூல் முதலிய எல்லாக் கலைத் துறைகளிலும் உழைத்து பிரெஞ்சு மொழியை ஜெர்மன் மொழிக்கு அடுத்தபடி ஒப்பற்ற இயலறிவுக் களஞ்சியமாக்கி விட்டனர். இம் மாதிரியே சரித்திர ஆராய்ச்சி, நுண்கலை (fine arts) ஆராய்ச்சி, (இதில் ஓவியம், சிற்பம், இசை முதலிய புலனின்பக் கலைகள் நாற்பது புலவர் தலைமையில் எல்லையற்று வளர்க்கப்படுகின்றன.) இன்னும் தத்துவ, மத ஆராய்ச்சி, அரசியல் ஆராய்ச்சிகள் 40 அறிஞர் தலைமையில் நடைபெறுகின்றன. ஒவ்வொன்றிற்கும் தனித் தனி இலாகா. ஒவ்வோரிலாக்காவிலும் பல கிளைகள்; ஒவ்வொரு கிளைக்கும் தேர்ந்தெடுத்த புலவர்கள் உள்ளனர். உதாரணமாக இயலறிவுக் கழகத்தைப் பார்ப்போம் (Academie des Sciences) அதில் கோட்டுக் கணக்கு (Geometry), யந்திர ஆராய்ச்சி, பூகோளம், பொருள் நூல், ரஸாயனம் (பொருட் சேர்வு நூல்), சுரங்க ஆராய்ச்சி, செடியாராய்ச்சி, பொருளாதார ஆராய்ச்சி, உயிர் நூல் ஆராய்ச்சி, மருத்துவம் முதலியவை ஒவ்வொன்றும் முறையே ஆறு புலவர் பார்வையில் நன்கு முன்னேறி வருகிறது. இவ்விதமாக நீதி நெறி அரசியல் இலாகாவில் தத்துவ நூல், சன்மார்க்கம், சட்டம், அரசியல் பொருளாதாரம், சரித்திரம் இவை முறையே எட்டுப் புலவர் தலைமையில் நன்கு ஆராயப்பட்டுச் செழிக்கின்றன. இப் புலவர்களுக்கு இருக்க இடமும், பிழைக்கப் போதிய வருமானமும் அரசாங்கமே தருவதால், எக் கவலையுமின்றி புலவர் மணிகள் தாய் மொழிக்காகப் பாடுபடுகின்றனர்.

இந்து சமூகத்தில் விபசாரம் இருப்பதற்குக் காரணம் பெண் மக்களுக்குச் சொத்துரிமை இல்லாமையாகும். கணவனால் விரட்டப்பட்ட பெண் மக்களும், ஆதரவின்றி விதவையான பெண் மக்களும் வயிற்றுப் பிழைப்பிற்கு வேறு வழி யில்லாமல் பலர் விபசாரத்தை மேற்கொள்ளுகின்றனர்.

தமிழ்க் கலை வளர்ச்சி.

இம் மாதிரித்தான் பாண்டியரும், சோழ மன்னரும் அக் காலம் கலை வளர்த்தனர். சத்தி முற்றப் புலவர் வரலாறு தங்களுக்குத் தெரியும். மதுரை ஆயிரக் கால் மண்டபத்தில் ஒரு தூணில் மிகவும் அழகாக முருகன் திருவுருவொன்று செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்; அக் காலத்தில் அதன் சிற்பி தனது முழுக் கருத்தையும் தனது கலைத்திறனில் ஊன்றி சிலை யமைத்துக் கொண்டிருந்தான். அவனுக்குத் தம்பலம் தாங்க ஒரு ஆள் உண்டு. அந்த ஆள் அப்போது வெளியே சென்றிருந்தான். அவ் வேளை பாண்டியன் வந்து "ஆகா தம்பலத்திற்காக சிற்பி திரும்பும் போது பையனைக் காணாது வருந்துவான்; சிற்பத்தில் ஊன்றிய கருத்து சிதையாது நாம் தம்பலம் பிடிப்போம்" என்று அரசன் தொழிலாளிக்கு, வேலை முடியு மட்டும் தம்பல மேந்தி நின்றான். வேலை முடிந்த பிறகே கலையாளி திரும்பிப் பார்த்தான். என்னே, மன்னன்! வியந்தான்! "புலவ, நின் கலையின் அருமை என்னைப் பணி கொண்டது" என்றான் பாண்டியன். அவ்வாறு வளர்க்கப்பட்ட ஒப்பிலாத் தமிழ்க் கலைத்திறன் மதுரை, சிதம்பரம், திருப் பெருந்துறை, இராமேசுவரம், திருநெல்வேலி, தஞ்சாவூர், கும்பகோணம் முதலிய இடங்களில் நம் முன் பேசி நிற்கிறது. இவ்வாறு வளர்க்கப்பட்ட அருங் கலைச் செல்வி இன்று மெழுக்குப் பிடித்து மூலையில் உறங்கலாமா? போல்ஷிவிக் ரஷியா ஒரே ஆண்டில் ரஷிய சமுதாயம் முழுமையும், ஒவ்வொரு ரஷ்ஷியக் கரத்தையும், தோளையும், மதியையும் நாட்டின் முன்னேற்றத்திற்காக விசையாக முடுக்கி வீறுடன் வேலை செய்வித்தது போலத் தமிழ்க் கரங்களனைத்தையும் தமிழாலயப் பணியில் ஊக்க வேண்டும். தமிழ்க் கலை வளர்ச்சிக்கு ஏராளமான புலவர் மணிகள் முன்வர வேண்டும்; அவர்கள் உழைப்பெல்லாம் பொதுவாக வேண்டும். உழைப்பும், பயனும், பொருளும் பொதுமை பெறலே மிக வுயர்ந்த நலமாகும். அதையே உலகு இப்போது வேண்டுகிறது. அதாவது ஒரு கவிக்குக் கஞ்சிக் கவலை கூடாது. அவன் பிழைப்பிற்கு வேண்டியதைப் பொதுக்கழகம் தரும். தனது நூல்களை அச்சிட்டு விற்கும் கவலையும் அவனுக்கில்லை அதுவும் கழகப் பொறுப்பு. இப்படியாகக் கலைப்புலவர்கள் கவலை யற்றுத் தமது கலைத்திறனால் நாட்டை அழகு செய்வர்; கலைக் கழகம் அவர்கள் கலைத்திறனை ஏற்றுப் பேணிப் போற்றி, விளக்கி வணிகக் கழகத்தின் மூலம் விற்றுப் பொருளாக்கி அப் பொருளைக் கலைவளர்ச்சிக்கே சேமநிதி யாக்கும். தமிழ்க்கலை விரிவடைய வேண்டுமாயின் ஒரு புதிய "தமிழ்க் கழகம்" தோன்ற வேண்டும். அதில் அடியில் வரும் அருங்கலைக் கிளைகள் அனைத்தும்

மனிதர்களை நேசிப்பதே கடவுளை நேசிப்பதாகும்.

ஆராய்ச்சி மேடை.

கீதா போதனை.

மகாத்மா காந்தி எழுதியது.

ஸ்ரீமான் பி. எஸ். சுந்தரம் (தமிழ் மொழிபெயர்ப்பு.)

கிடைக்குமிடம்: சுதந்திரச் சங்கு காரியாலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

விலை அணா இரண்டு. பக்கம் 56.

புவியிலுள்ள பெரிய நூல்களில் பகவத் கீதை புனித ஸ்தானத்தை வகிக்கும். நந்தகுமாரனைக் கொன்ற வாரன் ஹேஸ்டிங்ஸே இந் நூலைக் கண்டு பிரமித்தார் என்றால், மற்றவர்கள் மனத்தை அது என்ன செய்யும் என நான் ஜோசியஞ் சொல்ல விரும்பவில்லை. பகவத் கீதையைப் படிக்காதவன் பாரத வாசியாயிருக்க அருகதை இல்லை. இந்தக் கீதையை சட்டென அறிய இந்த கீதா போதனை சுருக்கு வழியாகும். மகாத்மா ஜெயிலிலிருக்குங்கால் சபர்மதி ஆசிரம

அமைய வேண்டும். (1) இலக்கண இலக்கியப் பகுதி:— (கவிதை, நாடகம், கதைகள், கற்பனைகள், புலவராராய்ச்சி, லாரூஸ், வெப்ஸ்டர் மாதிரி தமிழ்ப் பேரகராதி தயாரித்தல் முதலியன இதன் வேலை.) இதற்கு சுமார் 200 புலவர்கள் வேண்டும். (2) நுண் கலைப்பகுதி:— ஓவியம், சிற்பம், கல், செம்பு, மரம், கண்ணாடிகளில் வேலைப்பாடுகள், நெசவு, காகிதம் செய்தல், இரும்பு, ஈயம், செம்பு, பித்தளை, வெள்ளி, தங்கம் முதலிய உலோகங்களை உருக்கி வார்த்துப் பல தொழில்களியற்றல், தச்சு, கொத்து, கருமான் தொழில், சங்கீதம் (இசை) நடனம் (கூத்து) முதலிய கலைகள் இதனடியில் தனித் தனியாக வளர வேண்டும். இவற்றிற்கெல்லாம் புதிதாக மேனாட்டு முன்னேற்றத்தை ஆராய்ந்து சாத்திரங்கள் படங்களுடன் எழுதி வெளியிட வேண்டும். இப் பணிக்கு சுமார் 300 பேர் வேண்டும்—எல்லாரும் நல்ல தொழிலாளிகளா யிருத்தல் வேண்டும்.

பக்தர்களென்று கூறிக்கொண்டு ஹிந்துக்களாகிய நாம் நமது சகோதரர்களாகிய ஹரி ஜனங்களைத் தாழ்த்தி ஒடுக்குவது சரியா? இப்படிச் செய்யத்தான் ஹிந்து மதம் போதிக்கிறதா?

வாசிகளுக்கு கீதையின் கனிந்த ரசத்தை வாரந்தோறும் சரஸ்வதி வாகனமான சிறு கடிதங்கள் மூலமாய் அனுப்புவித்தார். பதின்மூன்று வாரங்களில் 13 அத்தியாயக் கருத்தை முடித்தார். இன்னும் மிகுதியான 5 அத்தியாயக் கருத்தை எழுதுவதற்குள் விடுதலையடைந்துவிட்டார். சர்க்கார் அவரைச் சீக்கிரமாய் விடுதலை செய்தது பகவத் கீதையின் பூர்ண கருத்தை வெளியிடாமலிருக்கவேண்டுமென்பதற்கோ எனக்குப் புரியவில்லை. எது எப்படியிருந்தபோதிலும் பகவத் கீதையை நன்றாய்ப் படித்தால், ஒருவன் தலைகீழாய் நிற்பான் என்பதில் சந்தேகமில்லை. இப்படி உங்களுக்குத் தலைகீழாய் நிற்கத் தரணியிலே பெரிய மாறுதலுடனாக விரும்பினால், பகவத் கீதை சாரமடங்கிய மகாத்மா எழுதிய கீதா போதனையைப் படியுங்கள். இந்த கீதா போதனையைப் பெரும் உற்சாகத்துடன் ஸ்ரீமான் பி. எஸ். சுந்தரம் மொழிபெயர்த்துள்ளார். இந்நூலை வெளியிட்ட "சுதந்திரச் சங்கு" காரியாலயத்திற்குத் தமிழ் நாடு வந்தனமளிக்க வேண்டும்.

எம். ஆர். ஜ.

சத்திய சமாஜம்.

ஆசிரியர்:—ஸ்ரீமான் க. சந்தானம் அவர்கள்.

விலை: 4 அணா. பக்கம் 76.

கிடைக்கும் விலாசம்:—எஸ். கணேசன், திருவல்லிக்கேணி, சென்னை.

இந்தப் புத்தகத்துக்கு "சத்திய சமாஜம்" என்று பெயரிடப்பட்டது ஏனோ தெரியவில்லை. சத்தியத்துக்கும் சமாஜத்துக்கும் உள்ள சம்மந்தத்தைப்பற்றி இதில் கேள்வியே இல்லை. "ஆதர்ஸ சமாஜம்" என்பது இதைவிடப் பொருத்தமான பெயராகும்.

இதிலுள்ள கடைசிப் பாரா, புஸ்தகத்தின் சாராம்சத்தை அப்படியே கொடுக்கிறது.

"ஒழுங்கான பிரவிருத்தி தருமத்தை நிச்சயித்து, அதன்படி ஜனங்கள் ஒழுகவேண்டிய முறைகளைத் தேடுவதே சமூக நன்மையை நாடுவோர் கடமை. இந்தப் பிரவிருத்தி மார்க்கத்தின் லக்ஷ்யம் ஆனந்தம். இதன் அம்சங்கள் ஆரோக்யம், அறிவு, அழகு, அன்பு. இதன் ஆதாரங்கள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்.

தூக்கு தண்டனைகளை ஒழிப்பதே நல்லது. உயிர் போக்கியவனது உயிரைப் போக்கினால் எவருக்கேனும் நன்மை உண்டா?

தன்னைச் சார்ந்தவர்களுக்கு இந்த ஆனந்தத்தை அளிக்கவல்லது சத்திய சமாஜம்."

"சமூக நன்மையை நாடுவோர் கடமை"யைச் செய்ய ஆசிரியர் இப் புத்தகத்தில் முயற்சி செய்து, அம் முயற்சியில் பெரிதும் வெற்றி பெற்றிருக்கிறார்.

"மதியும் மதமும்" என்ற அத்தியாயம் புத்தகத்தில் $\frac{1}{3}$ பாகத்துக்கு மேலிருக்கிறது. மதியின் தன்மையும், அறிவைப் பெருக்கும் சாதனங்களும், மனித வாழ்க்கைக்குப் பயன்படும்படி அது பல துறைகளிலும் பெருகியிருக்கும் விவரங்களையும் கூறிவிட்டு, மதம் என்றால் என்ன? என்று கேள்வி போடுகிறார். சேதன அசேதனங்களின் ஞானத்தைப்பற்றிச் சொல்லி, மதம் என்பது இன்றியமையாததென்றும், கடைசிக் கடைசியில் மனிதனுக்கு உதவுவது அதுதானென்றும் வாதாடுகிறார். "அவ்வப்போது தோன்றும் பெரியார்களின் மனதில் உதிக்கும் எண்ணங்களை ஆதாரமாகக்கொண்ட கொள்கைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் மதம் என்று பெயர்," "நன்மை, தீமை, நியாயம் என்ற வித்தியாசங்களை ஒப்புக்கொள்ளாத மனிதன் இல்லை. ஆகலால் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மதம் இருந்தே தீரவேண்டும்." காமம், குரோதம், லோபம் முதலான தீய பிரவிருத்திகளைப் பாரம்பரையான ஏற்பாட்டால் கட்டுப்படுத்த மதம் பெரியதொரு சாதகமாக இருப்பதால், அதன் பெயரால் ஏற்பட்ட சில தீய பழக்கங்களுக்காக மதத்தையே அழித்துவிட முன்வருபவர்கள் யோசனையற்றவர்கள் என்று வெகு திறமையாக நிரூபிக்கிறார். ஆனால் குருட்டுப் பழக்க வழக்கங்களை எதிர்த்துத் தொலைக்கவேண்டிய அவசியத்தையும் நன்கு விளக்குகிறார்.

ராஜாங்கம் இறுதியில் ராணுவ பலத்தால்தான் நிற்கிறது. சமூகத்தின் ஆயுதங்கள் கண்டனமும் பகிஷ்காரமும். இந்த இரண்டினாலும் தனிப்பட்டவர்களின் சுதந்திரம் குறைவதால், சட்டங்களும் கட்டுமானங்களும் கூடுமானவரையில் குறைவாயிருப்பது நலம்.

சொத்துரிமையால் ஏற்படும் ஏற்றத் தாழ்வால், ஏழை பணக்காரனுக்கு அடிமையாய் விடுகிறான். எனவே அந்த ஏற்றத் தாழ்வுகளைச் சாத்தியமானவரையில் மட்டப்படுத்திவிட வேண்டும். ஜாதிபேத ஏற்றத் தாழ்வுகள் அடியோடு ஒழிய வேண்டியவைகளே.

பெண்களுடைய உரிமையையும் விருப்பத்தையும் சிறிதும் பொருட்படுத்தாமல் ஆடு மாடுகளை விலைக்கு விற்பது போல் அவர்களை வற்புறுத்தி மணஞ் செய்து கொடுக்கும் வழக்கத்தை நமது ஹிந்து சமூகத்தார் ஒழிக்கும் பரியந்தம் ஹிந்துப் பெண்களுக்கு இல்லற இன்பமேது?

சகிப்புத் தன்மையை வளர்த்து, ஒரு பொதுப் பாஷையால் ஒற்றுமையை நிலைநாட்டி, அறிவைப் பெருக்குவதால் சமோதரத்து வம் சிறந்து விளங்கும்.

சுதந்திரப் போர், சீர்திருத்த இயக்கம் முதலானவைகளின் எல்லா அம்சங்களையும் சிறியதொரு புஸ்தகத்தில், எளிய நடையில், காரண காரியங்களுடன், ஆவேசமின்றித் தெளிவாக எழுதியிருப் பது பெரிதும் போற்றத் தக்கது. புஸ்தகத்தை ஒரு தடவையல்ல, பல தடவைகள் கூர்ந்து கவனித்துப் படித்தால் விசேஷ நன்மை யுண்டாகும். இதிலடங்கிய விஷயங்க ளெல்லாவற்றையும் பாமர ஜனங்கள் பலரும் அறிய நன்கு பிரசாரம் செய்துவிட்டால், நாடு வெகு சீக்கிரம் முன்னேறும் என்பதிற் சந்தேகமில்லை.

ரா. ஸ்ரீ. ஸ்ரீ.

நற் புத்தி.

உத்தமபாளையம் திரு. M. K. M. மீரான் அவர்கள்

எழுதி வெளியிட்டது. விலை ஓரணு.

இஃது பள்ளிச் சிறுவர் உள்ளம் உவக்கக் கற்கும் பான்மையில் சுலப நடையில் எழுதப்பெற்ற ஒரு சிறு உபந்நியாசமாகும். சிறுவர், சிறுமிகளுக்கேற்ற நற் போதனைகள் பல திரட்டிக் கூறப்பெற்றிருக் கின்றன. இதற்கு உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் மதிப் புரை கொடுத்துப் பாராட்டியிருக்கின்றார். பாடப் புத்தகச் சங்கத் தாரும் இதனை அங்கீகரித்திருக்கின்றனர். நல்ல தாளில் கிரவுன் $\frac{1}{8}$ அளவில் 16 பக்கங்களில் அச்சிடப்பட் டிருக்கிறது.

N. V.

நமது நாட்டில் நகை யணியும் வழக்கம் இருப்பதால் உண்டாகும் நஷ் டத்தைச் சிறிதும் சிந்திப்பதில்லை. நமது நாடு முழுவதும் ஏழை குடிசை யிலும், பணக்காரர் மாளிகையிலும் நகைகள் அடங்கிக் கிடக்கின்றன. இவ் வாறு ஒரு பயனுமின்றிக் கிடக்கும் நகைகளினால் யாருக்கு என்ன பயன்? இவைகளைக் கைத்தொழில்களிலும் கூட்டு வியாபாரத்திலும் போட்டு வேலை செய்தால் நாட்டின் செல்வம் வளரும்

ஆசிரியக் குறிப்புகள்.

ஆசிரியர் அறிக்கை

"பாரதி"யை நானாவழிகளில் அபிவிருத்தி செய்ய முயலுகிறோம்.
இந்த மணியிலேயே 4 சிறு கதைகள் வெளிவந்திருக்கின்றன. இவை
கள் அனைத்தும் சீர்திருத்த உணர்ச்சிகளைக் கொடுக்கக் கூடியவை.
அடுத்த மாதத்தில் "சத்திய காமன்", "என் பொன் அண்ணா",
"**தள்ளி விடுதல்**" என்ற இனிய சிறு கதைகள் நமது பத்திரிகையை
அலங்கரிக்கும். இவைகள் அறிஞர்களது பேனா முனைகளிலிருந்து
தோன்றியவை. தமிழ் இலக்கியப் பூங்காவனம் செழிக்கும் வேலைக
ளைப் பற்றி சுவாமி சுத்தானந்த பாரதியா ரவர்களது கட்டுரையும்
"பாரதி"யில் அடிக்கடி வெளிவரும். கவி அரசர் பாரதியாரைப்பற்
றிய வியாசம் ஒவ்வொரு மாசத்திலும் தோன்றும்.

பர்மா வாழ் "பாரதி" அன்பர்கட்கு

"பாரதி"யின் வளர்ச்சியிலும் க்ஷேமநிதியிலும் பங்கு கொண்டு
"பாரதி" லாட்டுகளையும், "ஜான்ஸி" லாட்டுகளையும் பெற்று நமக்கு
ஊக்கமளித்து வருவதற்கு மிகவும் நன்றியுடையோம். எனினும்
பரந்து விரிந்த பர்மிய நாட்டிலேயுள்ள தமிழ்ச் சோதரர்கள் எதிர்
பார்த்த அளவு தங்கள் ஆதரவை நல்காததிற்கு வருந்தாதிருக்கக்
கூடவில்லை. ஆயினும் இதுபோது பர்மா முழுவதையுமே சுற்றுப்
பிரயாணம் செய்வதாகத் தீர்மானித்து மோல்மேன்—பக்கோ மாந்
தலே முதலிய நகர் வழியாக இரயில் மார்க்கத்தில் நமது "பாரதி"
யின் பொறுப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம் அவர்கள் செல்வதாகத்
தெரிகிறது. ஆகையினால் ஆங்காங்குள்ள "பாரதி" அன்பர்கள் மட்டு
மன்றி தமிழறிஞர்களும், அபிமானிகளும் வேண்டுவது செய்ய
வேண்டுகின்றோம்.

இதுபரியந்தம் லாட்டுகளைப் பெற்ற அன்பர்கட்கும், தமது
பர்மா பிரயாணத்தை பூர்த்தி செய்துகொண்டு விரைவில் வந்து
சேரும் பொறுப்பாசிரியரின் வருகைக்குப் பின்னர் இங்கிருந்தே
மற்றப் புத்தகங்களை அனுப்பி வைப்பதாகவுள்ளோம். அதுபற்றி
கவலையுறாதிருக்க அன்பர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

பெண்மக்களுடைய அன்பும் தயவும் இல்லாவிட்டால், ஆண் மக்கள் இவ் வுலகில் இன்பமுடன் வாழ முடியாது.

சந்தாக்கள் பாக்கி

"பாரதி"யை ஆதரிக்கக் கூடும் என்று அதிகமாக நம்பி எம்முடன் பழகி யிருக்கும் நண்பர்களுக்கு "பாரதி"யை அனுப்பிக்கொண்டு வருகிறோம். பல நண்பர்கள் ஆரம்ப வருஷ முதல் இன்றுவரையில் சந்தாக்கள் கொடுக்கவில்லை. இப்படி யிருந்தால் பத்திரிகை எவ்வாறு வளரும்? ஒரு நண்பர் உருக்கத்துடன் எமக்கெழுதிய கடிதத்தைக் கவனியுங்கள். அதைக் கீழே தருகிறோம்.

அன்பு மிக்க நண்பரே!

..............."பாரதி"யைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிட்டு நிறுத்துகிறேன். சொல்லாமலும் இருக்க முடியவில்லை. சொல்லவுங்கூட வில்லை. சொன்னாலும் அதனால் உபயோகம் எதுவுமாகாது என்றே நினைத்தாலும், மனதில் அடக்கி வைக்கவும் கூடவில்லை. உண்மையாகக் கூறுமிடத்து "பாரதி" எனக்குக் கிடைக்கும் போது என்னையு மறியாமல் என் கண்களில் நீர் ததும்புகிறது. நான் பத்திரிகை நடத்தியவன். பத்திராதிபர்களின் கஷ்ட சுகம் எனக்கு நன்றாகத் தெரியும். இவ்வளவு அழகான பத்திரிகை பகவானருளால் நீடிக்க வேண்டுமே யென்பதுதான் எனது பிரார்த்தனை. உங்கள் பத்திரிகையைப்பெரிய தனவந்தர் சங்கம் நடத்துவது போலிருக்கிறது. லாப நஷ்டம் கருதாமல் உன்னத நோக்கங்களுடனேயே பணத்தை வாரி இறைப்பது போன்று செலவு செய்து "பாரதி"யை வெளியிட்டுக்கொண்டிருக்கிறீர்கள்...........................நீங்கள் உபயோகிக்கும் கிளேஸ் காகிதத்தைப் பார்த்தால், என் வயிறு எரிகிறது. "என்ன இப்படிச் சொல்கிறான்" என்று நீங்கள் நினைக்கவும் கூடும். பத்திரிகைகளின் நிலையை நான் அதிகமாக அறிவேன். உங்களைக் கண்டு பெரிதும் இரங்குகிறேன். என் வயிறு வெடிக்கிறது. நீங்களும் "பாரதி"யும் செழித்தால், என்னைப் போன்று வேறு எவரும் அவ்வளவு சந்தோஷப்பட மாட்டார்கள். நீங்கள் க்ஷேமமடைய வேண்டுமென்பதே எனது கருத்து.

தமிழுலகம் எதை விரும்புகிறது? எந்தெந்தப் பத்திரிகைகள் செழிக்கின்றன? எவ்வாறு செழிக்கின்றன? என்பவை உங்களுக்குப் புதிதல்ல..................தாங்கள் அரசியல் துறையில் அதிகம் ஈடுபடுவதை நான் ஒப்ப முடியாது. பல துறைகளில் பலர் பாடுபட சமூகம் முன்னேறுகிறது. பத்திரிகாசிரியர்கள் பெரும் பொறுப்பும் கடமையும் வகித்தவர்கள். இதைச் சரிவர நிறைவேற்றவே, 1000 தியாகங்கள் செய்ய வேண்டும். இதை நிறைவேற்றினால் அன்னை மகிழ்வாள். இனியாகிலும் "பாரதி"யே குல தேவதை யெனவும் நமது பேனாவே நமது ஆயுதமெனவும் அமைதியுடன் தொண்டாற்றுங்கள். பிற வேண்டாம்.

தங்கள் அன்பை மறவா

....

பெண் மக்கள் அன்புருவானவர்கள்.

"பாரதி" இனியும் மென்மேலும் வளரும் பொருட்டுத் தங்களுடைய பழைய சந்தா பாக்கிகளையும் அன்புகூர்ந்து அனுப்பி உதவுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

உபாத்திமைச் சங்க ஆண்டு விழா, கண்டமநாயக்கனூர்.

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலுகா கண்டமநாயக்கனூர் ஆரம்ப ஆசிரிய சங்கத்தார் எம்மை அவர்களது ஆண்டு விழாவிற்கு தலைவராகத் தெரிந்தெடுத்தது குறிப்பிடத் தக்கது. தேசத் தொண்டர்களுக்கும்—பத்திராதிபர்களுக்கும் பொதுவாக அவர்கள் இந்தப் பதவி கொடுப்பதில்லை. அவர்கள் எமக்குக் காட்டிய அன்பிற்காக அவர்களுக்கு வந்தனங்கள்.

ஏப்ரல் மீ 21உ அங்கு அக்ராசனம் வகித்து நாம் பேசிய பொழுது, ஆரம்ப ஆசிரியர்களது பரிதாபகரமான தற்கால நிலையை விவரித்துக் கூறி, சமூக வாழ்வில் அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்துவதற்காக எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்றும், இதற்காகவே பெரியகுளம் தாலுகா ஆரம்ப ஆசிரியர்கள் மகா நாடு கூடிய சீக்கிரத்தில் நடத்தி, ஒரு தூதுக் கோஷ்டியாரைக் கனம் கல்வி மந்திரியாரிடம் அனுப்ப வேண்டுமென்றும் கூறினோம். பெரியகுளம் தாலுகாவிலுள்ள எல்லா ஆரம்ப ஆசிரிய சங்கங்களுடன் இதைப் பற்றி கடிதப் போக்கு வரவு செய்ய வேண்டிய வேலை, கண்டமநாயக்கனூர் ஆரம்ப ஆசிரிய சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் துரைராஜ் பிள்ளை யவர்களிடம் ஒப்படைக்கப்பட் டிருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்கள் அபிவிருத்தி அடையும் வரையும் நமது நாட்டில் கல்வி முன்னேற்றமடையா தென்பது நிச்சயம்.

சென்னை மாகாணத் தமிழர் மகா நாடு. திருநெல்வேலி.

செந்தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கான காரியங்களைச் செய்யவும், தமிழ்க் கலைகளை வளர்க்கவும், தமிழ் நூல்களை பிற மொழிகளிலும், பிற உயர் நூற்களைத் தமிழ் மொழியிலும் மொழி பெயர்க்கவும் நோக்கமாகக் கொண்டு திருநெல்வேலியில் சென்னை மாகாணத் தமிழர் மகா நாடு விரைவில் நடைபெறப் போகிறது. தமிழர்கள் பற்பலர் பிரதிநிதிகளாகச் சென்று இம் மகா நாட்டை வெற்றிபெறச் செய்வார்களாக. தமிழ் அபிவிருத்திக்காக எத்தனையோ சங்கங்கள், எத்தனையோ மகா நாடுகள் தேவையா யிருக்கின்றன. இம் மகா நாட்டின் வரவேற்புக் கழகத்தில் அநேக அரிய பெரிய அறிஞர்கள் சேர்ந்திருப்பது குறிப்பிடத் தக்கது

ஆண் மக்கள் எவ்வளவுதான் சீர்திருத்தம் பெற்றிருந்தாலும், பெண் மக்கள் சீர்திருத்தம் பெறாவிட்டால், ஆண் மக்களுடைய சீர்திருத்தமும் நிலைத்திராது.

இது விஷயமாய் அதிகமாய் அறிய விரும்புகிறவர்கள் இம் மகா நாட்டின் மந்திரிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

கௌமார குருகுலம், மன்னார்குடி.

அஸிஸ்டெண்டு என்ஜினியர் ஸ்ரீமான் சு. வி. கனகசபைப் பிள்ளையவர்களின் உழைப்பால் மன்னார்குடியில் கௌமார குருகுலம் 1932-ம் வரு முதல் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. மழை காலத்திலும் கோடை காலத்திலும் மூன்று மாதங்களில் கிராம வாழ்க்கைக்கு அவஸியமான உயர்தரக் கல்வி கற்றுக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இங்கு செய்யப்பட்டிருக்கின்றன. கிராம வாழ்க்கைக்கு அவஸியமான அறிவு ஊட்டுவதே இப் பள்ளியின் நோக்கமாகும். கௌமார குருகுலத்தில் குருகுல வாசம் செய்து, கல்வி கற்று, நல்லொழுக்கத்தை மாணவர்கள் பழகுகிறார்கள். அவர்களுக்குத் தேவையான சாப்பாடும் இட வசதியும் சம்பளமும் உட்பட மாதம் 1-க்கு ரூபாய் 6-க்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. 14 வயதிற்கு மேற்பட்டவர்களையே இப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளப்படும்.

வயது வந்தவர்களுக்கு கல்வி புகட்டக்கூடிய கல்விச்சாலைகள் நமது நாட்டிற்கு அநேகம் தேவை. ஸ்வீடன், டென்மார்க்கு தேசங்களைப் போன்று ஜனங்களின் பள்ளிக்கூடங்கள் நூற்றுக் கணக்காகத் தமிழ் நாட்டிற்கு வேண்டியிருக்கின்றன. புதிய முறைகளை அனுசரித்து நாட்டுக்குத் தொண்டு செய்து வரும் ஸ்ரீமான் கனகசபைப் பிள்ளையவர்களைப் போற்றுகிறோம். அவருடைய தொண்டு தேசத்திற்கு நன்மை அளிப்பதாக.

197899

பொறுப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம் அவர்களால், தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரசில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 9,00,000 பங்குகளின்பேரில்
27,00,000 ரூ மூலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும் லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப்பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்தும் கம்பெனி மெம்பர்களிடம் கன்செயின்மெண்டில் சரக்குகளைச் சேர்த்தும் லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக்கனுப்பிவைத்தும் பாம்பை, கல்கத்தா, கராச்சி, டில்லி, கான்பூர், அம்ரிட்ஸார், விருதுநகர் முதலிய துறைமுகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்துவருவதோடு சக்கர், முல்டான், லாகூர், அலகாபாத், ஆக்ரா, ஆதரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்துவரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும் நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும், இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்க புகழையுமடையும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உ. ம. சே முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்),
கோம்பை. மதுரை ஜில்லா.

நமது புதிய பிரசுரங்கள்

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

சோவியத் ருஷியா.

பண்டித ஜவஹர் லால் நேரு எழுதிய ஆங்கில நூலின்

நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.

"தமிழ் நாடு" ஆசிரியர்

டாக்டர் P. வரதராஜலு நாயுடு அவர்களின்

முகவுரையுடன் கூடியது.

கோட்டியும் கொண்டமானும் பிச்சைக்காரனும் பிரபுவும்

வர்க்க தாழ்வில்லாமல் குபேர வாழ்வு வாழுகின்ற

சோவியத் ருஷியாவை அறிய இதுவே முதல் சந்தர்ப்பம்.

விஷயத்தை விளக்க கண்ணைக் கவரும் 21 ஆப்டோன்

படங்களுடன் கூடியது

ஆர்ட் & கிளேஸ் பதிப்பு விலை ரூ. 1—4—0.

தபால் செலவு வேறு

ராட்டூர்-
-வீரன்- **துர்க்கா தாஸ்**

(சரித்திர சம்பந்தமான ஓர் தேசீய நாடகம்)

வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திர லால் ராய்

எழுதியது

அவரது நாடகங்களிலெல்லாம்

இத் துர்க்கா தாஸே முதன்மையானது.

ஆரம்ப முதல் இறுதி வரை.

அற்புதம்! ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!
தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது!!
ஆவேச நடை! அலங்கார பாஷை!
மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!!!

கிரௌன் 1/8 சைஸ்

380 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—4—0.

தபால் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம்.